எம். எஸ். வசந்தகுமார்

# மரணத்தின் மறுபக்கம்

மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றிய
வேதாகமப் போதனை

புதிய விரிவுபடுத்தப்பட்ட பதிப்பு

# தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்

## TAMIL BIBLE RESEARCH CENTRE

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம் 2005ம் ஆண்டு வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரினால் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. வேதாகமப் புத்தகங்களுக்குத் தமிழ் மொழியில் விளக்கவுரைகள் எழுதி வெளியிடுவதே இந்த ஆராய்ச்சி மையத்தின் முக்கிய செயற்பாடாகும். இதன் ஆராய்ச்சிகளில் சிலவற்றை www.tamilbibleresearchcentre.com என்னும் இணையதளத்தில் வாசிக்கலாம்.

The Tamil Bible Research Centre was founded in 2005 by M.S.Vasanthakumar, biblical scholar and researcher to produce Bible study materials and commentaries in Tamil language. www.tamilbibleresearchcentre.com

**வேத ஆராய்ச்சிப் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்**

**இலங்கையில் தொடர்புகளுக்கு**
திரு. மில்டன், தொலைபேசி: 0112345654

**இந்தியாவில் தொடர்புகளுக்கு**
திரு. கே.பழனிவேல் ஆபிரகாம்
சத்தியவசனம், தொலைபேசி: 04522532316
சகோதரன் வி.ராஜ்கமல், தொலைபேசி: 09942193486

**கணடாவில் தொடர்புகளுக்கு**
திருமதி தவம் வதனி, தொலைபேசி: 4167246773

**ஐரோப்பாவில் தொடர்புகளுக்கு**
தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
தொலைபேசி: 02083744004, 07814252077

# மரணத்தின் மறுபக்கம்

## மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றிய வேதாகமப் போதனை

# மரணத்தின் மறுபக்கம்

**மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றிய**
**வேதாகமப் போதனை**


வேதஆராய்ச்சியாளர்

**எம்.எஸ்.வசந்தகுமார்**



**TAMIL BIBLE RESEARCH CENTRE**
**தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்**
8, Broadlands Avenue, Enfield, London EN3 5AH
Phone: 0044 7814252077 Email: msvtbrc@gmil.com

2/161, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport Via, Tiruchirappalli - 620 007, Tamil Nadu.
Phone: 9942193486 Email: vrkbibleteach@yahoo.com
Web: tamilbibleresearchcentre.com

# THE OTHER SIDE OF DEATH

Biblical Teaching on Life After Death

*Written by*
**M.S.VASANTHAKUMAR**
BTh. MA. MPhil. DMin

*Produced and Published by*
**TAMIL BIBLE RESEARCH CENTRE**
8, Broadlands Avenue, Enfield, London EN3 5AH
Phone: 0044 7814252077 Email: msvtbrc@gmil.com

2/161, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport Via, Tiruchirappalli - 620 007, Tamil Nadu.
Phone: 9942193486 Email: vrkbibleteach@yahoo.com
Web: tamilbibleresearchcentre.com

*Sponsored by*
**SUTHERSAN GOPALAN, LONDON**

*Printed in India by*
**SHARON PRINT SYSTEM**
No. 4, H.A. Khan Road, Chinna Chokkikulam,
Madurai – 625 002, India. Phone: 0452 4255450

First Edition: February 1991, 1500 Copies
Second Revised Edition: May 1995, 3500 Copies
Third Expanded Edition: Nov. 2007, 1000 Copies
Fourth Indian Edition: March 2012, 2000 Copies

No part of this publication may be reproduced in any form
without the prior permission of the author.
அனுமதியின்றி பிரதி பண்ணுவது தடைசெய்யப்பட்டுள்ளது

## இதயத்தின் சமர்ப்பணம்

இயேசுகிறிஸ்துவை நான் அறிந்துகொள்வதற்காக இடைவிடாமல் பல வருஷங்கள் கண்ணீரோடு ஜெபித்து, இயேசுகிறிஸ்துவிடம் சென்றுவிட்ட என்னுடைய அருமைத் தாயாருக்கு இந்நூல் சமர்ப்பணம்

## இந்நூலின் அடிக்குறிப்புகள்

இந்நூலிலுள்ள அடிக்குறிப்புகள் வேதாகமத்தை ஆழமாக ஆராய்ச்சி செய்பவர்களுக்காகவும், வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்காகவுமே எழுதப்பட்டுள்ளன. எனவே, அடிக்குறிப்புகளை வாசிக்காமலேயே இந்நூலின் செய்தியை நீங்கள் முழுமையாக அறிந்திடலாம். மேலதிகமான விளக்கங்களும் வேதவசன ஆதாரங்களுமே அடிக்குறிப்புகளில் உள்ளன.

# பொருளடக்கம்


ஆசிரியர் உரை 05

அறிமுக உரை

மரணத்தின் மறுபக்கம் 07

முதலாம் அத்தியாயம்

மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரை 11

(1). மரண நித்திரையின் அற்புதம் 12

(2). மரண நித்திரையின் அடிப்படை 20

(3). மரண நித்திரையின் அனுபவம் 24

இரண்டாம் அத்தியாயம்

மரணம் விடுதலை பெற்றுச்செல்லும் ஒரு யாத்திரை 30

(1). மாம்சத்திலிருந்து விடுதலை 31

(2). மண்ணுலகிலிருந்து விடுதலை 33

(3). மரணத்திலிருந்து விடுதலை 35

மூன்றாம் அத்தியாயம்

மரணம் விண்ணுலக வாழ்வுக்கு ஒரு முத்திரை 37

(1). பாதாளமும் பரலோகமும் 38

(2). ஆவிகளும் பரலோகமும் 50

(3). பரதீசும் பரலோகமும் 66

(4). நியாயத்தீர்ப்பும் பரலோகமும் 77

(5). உயிர்த்தெழுதலும் பரலோகமும் 94

(6). நாமும் பரலோகமும் 107

உசாத்துணை நூல்கள் 111



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூல் முதற் தடவையாக 1991ம் ஆண்டு "மரணம் என்றால் என்ன?" என்னும் தலைப்பில் இலங்கையில் வெளிவந்தது. அதன் பின்னர் 1995ல் "மரணத்தின் மறுபக்கம்" என்னும் பெயரில் சில புதிய விஷயங்களையும் உள்ளடக்கி இலங்கையில் வெளியிடப்பட்டது. ஆரம்ப காலத்திலில் இருந்தே இந்நூலை வாசித்தவர்கள் பல வருஷங்களாக என்னிடம் கேட்ட பல கேள்விகளைக் கருத்திற்கொண்டு 2007ல் அதிக விளக்கங்களுடன் இந்நூலை விரிவுபடுத்தி வெளியிட்டேன். தற்பொழுது இந்தியாவில் வாழும் தமிழ்க் கிறிஸ்தவர்களின் உபயோகத்திற்காக இந்நூல் இந்தியாவில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. கடந்த இருபது வருஷங்களாக இந்நூல் பலருக்கு மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றிய வேதாகம சத்தியங்களை அறியத்தந்துள்ளதோடு, தங்கள் அன்புக்குரிய உறவினர்களையும் நண்பர்களையும் இழந்து தவித்த பலருக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் அளித்துள்ளதை அறிந்து என் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

இந்நூலை விரிவுபடுத்தி எழுதுவதற்கு என்னை உற்சாகப்படுத்திய அன்பான சகோதர சகோதரிகளுக்கும், இந்நூலின் மூலப்பிரதியை வாசித்து எழுதப்பட்டுள்ள விஷயங்களைப் பல்வேறு கோணங்களில் என்னோடு கலந்துரையாடியவர்களுக்கும், இதை அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவுகளைப் பெறுப்பேற்றுள்ள சகோதரன் சுதர்ஷன் கோபாலனுக்கும், மூலப்பிரதியை வாசித்துத் திருத்தங்கள் செய்வதற்கு உதவிய சகோதரி சிந்தியா சுரேஷ்சுக்கும், இந்தியாவில் இந்நூலை வெளியிடுவதில் பலவிதத்திலும் உதவிய சகோதரன் ராஜ்கமலுக்கும், இதை அழகிய முறையில் அச்சிட்டுத்

தந்த சகோதரன் எஸ்.குணசேகரத்திற்கும் என்னுடைய நன்றிக ளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் பற்றிய உங்களுடைய கருத்துகளையும், இதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளையும், எமக்குத் தெரிவிப்ப தோடு, இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். தேவன் தாமே இந்நூலின் மூலம் மரணத்தின்பின்பான வாழ்வைப் பற்றிய வேதாகம சத்தியங்களை நீங்கள் அறிந்துகொள்வதற்கும், மரணத் தின் பின்னர் அவரிடம் செல்வதற்கும் உங்களை வழிநடத்துவாராக

அன்புடன்,

**எம்.எஸ்.வசந்தகுமார்.**
லண்டன், மார்ச் 2012.

மரணம்
வாழ்வின் ஒரு சம்பவமே தவிர
மானிட வாழ்வின் முடிவல்ல

## அறிமுக உரை



# மரணத்தின் மறுபக்கம்

மரணம் என்னும் வார்த்தை மனிதர்களாகிய நாம் விரும்பாததொன்றா கவே உள்ளது. மரணமே இல்லாத நிலையில் வாழவே நம் மனம் விரும்புகிறது. ஆனால், உயிரோடிருக்கும் அனைவருக்கும் மரணத் தைப் பற்றிய பயம் எப்பொழுதும் இருக்கின்றது. ஏனெனில், நாம் அன்றாடம் மரணங்களைக் காண்கிறவர்களாகவும் மரணத்தைப்பற்றி கேள்விப்படுகிறவர்களாகவுமே இருக்கின்றோம். மரணம் எப்பொழுது வரும்? எந்த உருவத்தில் வரும்? என்பது நமக்குத் தெரியாது. ஆனால், மரணம் ஒரு நாள் நிச்சயமாக வரும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மரணத்திலிருந்து எவ்விதத்திலும் நம்மால் தப்பித்துக் கொள்ளமுடியாது. வேதாகமம் சுட்டிக்காட்டுவதுபோல, "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி.9:27). மரணம் இயற்கையாக வயோதிப காலத்தில் வரலாம். அல்லது விபத்து, வியாதி, விபரீதங்கள் என்று ஏதாவது ஒரு உருவத்தில் எந்த வயதிலும் வரலாம். மரணம் எவ ராலும் தவிர்த்துக்கொள்ள முடியாத ஒரு நிகழ்வாகவே உள்ளது. உண்மையில், "கருவறையில் உருவாகும்போதே மனிதன் கல் லறைக்குப் போகும் தன்னுடைய மரண ஊர்வலத்தை ஆரம்பிக்கின் றான்."[1] அதாவது, மரணத்தை நோக்கிச் செல்லும் ஒரு பயணமாகவே மானிட வாழ்க்கை உள்ளது.

---

[1] H.Lockyer. *Last Words of Saints and Sinners*, p. 9.

## மரணத்தை நோக்கிச் செல்லும் ஒரு பயணமாகவே மானிட வாழ்க்கை உள்ளது

சகல உயிரினங்களுக்கும் என்றாவது ஒரு நாள் மரணம் ஏற்படுகின்ற போதிலும், மரணத்தைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் சத்தியங்களை அறியாதிருப்பதே மரணத்தைக் கண்டு மனிதர் பயப்படுவதற்கான காரணமாகும். ஆனால், மரணத்தைப்பற்றிய வேதாகம சத்தியத்தை நாம் அறிந்திருந்தால், மரண பயமும், மரித்தவர்களை இனிமேல் பார்க்க முடியாதே என்ற கவலையும் நமக்கு ஏற்படாது. ஏனெனில் "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" என்று வேதாகமம் கூறுகிறது (சங்.116:15). ஏனெனில், தேவனுடைய பார்வையில் அவர்கள் பெறுமதியானவர்களாக இருப்பதனால், "அவர்களுடைய மரணத்தை அவர் அற்பமாக எண்ணுவதில்லை."[2] இதனால், "பரிசுத்தவான்கள் மரிக்கும் வேளையில் தேவன் தம்முடைய பிரசன்னத்தை அவர்கள் உணரும்படி செய்து, அவர்களுக்கு மரணத்தருவாயிலும் மனஆறுதலும் சமாதானமும் அளிக்கின்றார்."[3] மனிதர் மரிக்கும் நேரத்தில் கிறிஸ்தவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருப்பதை, மரணமடையும் வியாதியஸ்தரின் கைகளைப் பற்றிக்கொண்டிருந்த பல வைத்தியர்களும் தாதிகளும் தன்னிடம் தெரிவித்துள்ளதாகப் "பில்லி கிரஹம்" என்னும் பிரபல தேவஊழியர் குறிப்பிட்டுள்ளார்.[4] கிறிஸ்தவ பக்தர்கள் மரிக்கும்போது உதிர்த்த வார்த்தைகள் இதை உறுதிப்படுத்துகின்றன. உதாரணத்திற்கு இதோ சில கிறிஸ்தவ பக்தர்களின் மரணமொழிகள்:

"பிதாவே உம் கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்."[5]

"ஆண்டவரே, உம்முடைய அழைப்பை நான் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்கின்றேன்."[6]

---

[2] J.Flanigan, Psalms: Ritchie Old Testament Commentary, p. 500.

[3] M.Boice, *Psalms 107-150: Expositional Commentary*, p. 946.

[4] B.Graham, Cited in J.Blanchard, *Sifted Silver*, p. 60.

[5] இயேசுவைப்போல் சிலுவையில் அறையப்பட்டு இரத்தசாட்சியாக மரித்த பிலிப்பு. கிறிஸ்தவ மார்க்கத்தின் முதலாவது இரத்தசாட்சியான ஸ்தேவானும் இவ்விதமாகத் தன்னுடைய இறுதி வார்த்தையை உதிர்த்துள்ளார் (அப்.7:59).

[6] கென்டபரி நகரில் சபைத் தலைவராயிருந்த அன்செல்ம் (கி.பி.1033-1109).

"என்னை இரட்சித்தக் கர்த்தாவே, உம்முடைய கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்."[7]

"என் இதயம் இயேசுவில் இனிமையாக இளைப்பாறுகிறது. என்னுடைய கரத்தை அவர் பற்றிக்கொண்டிருக்கின்றார்."[8]

"கண்ணீரெல்லாம் துடைக்கப்படும் இடத்திற்கு நான் இப்பொழுது செல்கின்றேன்."[9]

"என்னை நித்திய அன்பினாலே நேசிப்பவரிடம் நான் இப்பொழுது செல்கிறேன்."[10]

"மேலிடத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்துள்ளது."[11]

"பூமி என்னை விட்டுத் தூரமாக விலகிப் போவதையும், பரலோகம் திறக்கப்படுவதையும், தேவன் என்னை அழைப்பதையும் காண்கிறேன்."[12]

"கிருபையுள்ள தேவன் இருப்பதனால் நான் மரிப்பதற்குப் பயப்படவில்லை."[13]

"நான் என்னுடைய வீட்டுக்குப் போகின்றேன்."[14]

"எனக்காக நீங்கள் அழவேண்டாம். உங்களுக்காக அழுங்கள். நான் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவிடம் செல்கின்றேன்."[15]

"நான் அதிக சந்தோஷத்தோடு செல்கின்றேன்."[16]

"இன்னும் சிறிது நேரத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடன் நான் இருப்பேன்."[17]

"மரணம் நாம் பயப்படவேண்டிய எதிரி அல்ல. நம்மைப் புன்னகையோடு வரவேற்கும் ஒரு நண்பனே மரணம்."[18] ஏனெனில், மரணம் மனிதனுக்குத் தீமையானதாக அல்ல, நன்மையானதாகவே உள்

---

[7] ஸ்கன்டிநேவியாவில் கிறிஸ்தவத்தைப் பரப்பிய அன்ஸ்கர் (801-865).
[8] நியூயார்க்கில் இறைபணியாற்றிய ஹவார்ட் க்ரொஸ்பி (1826-1891).
[9] பிரபல அமெரிக்கக் கிறிஸ்தவர் மத்தியூ கொட்டன் (கி.பி.1633-1728).
[10] கிறிஸ்தவ இறையியலாளர் ஜோன் ஓவன் (1616-1683).
[11] ஸ்காட்லாந்தின் ஊழியர் சாமுவேல் ரதர்போ.்.ர்ட் (1600-1661).
[12] பிரபல கிறிஸ்தவ சுவிசேஷகர் டி.எல்.மூடி (கி.பி.1837-1899).
[13] இறையியலாளரும் வரலாற்றாசிரியருமான தூய பீட் (673-735).
[14] ஆபிரிக்காவில் பணியாற்றிய டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873).
[15] மோட்சப் பிரயாணம் என்னும் நூலை எழுதிய ஜான் பனியன்.
[16] பர்மாவில் பணியாற்றிய அடோனிராம் ஜட்சன் (1788-1850).
[17] சுவிஸ் நாட்டுச் சபை சீர்திருத்தவாதி உல்ரிச் ஸ்விங்லி (1484-1531).
[18] T.Goodwin, Cited in J.Blanchard, *Gathered Gold*, p. 58.

ளது. மானிட பாவத்தின் தண்டனையாகவே மரணம் இருக்கின்றபோதிலும் (ஆதி.2:17)[19] மனிதன் பாவத்தில் விழுந்த பின்னர், அவன் எப்பொழுதும் பாவியாகவே இருப்பதைத் தடுப்பதற்காகவே அவன் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்க முடியாதபடி தேவன் செய்தார். பாவத்தில் விழுந்த பின்னர் ஆதாமும் ஏவாளும் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்திருந்தால், அவர்கள் நித்தியகாலமாகப் பாவிகளாகவே வாழும் நிலைக்குச் சென்றிருப்பார்கள். இதனால், அவர்கள் வாழ்ந்த ஏதேன் தோட்டத்திலிருந்த ஜீவவிருட்சத்தின் கனியை அவர்கள் புசிக்க முடியாதபடி அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திய தேவன், அங்கு எவரும் செல்ல முடியாதபடி அதற்குக் காவலும் போட்டார் (ஆதி.3:22-24).[20] இல்லையென்றால், அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியையும் புசித்து பாவசரீரத்துடன் மரணமடையாத நிலையில் இருந்திருப்பார்கள். எனவே, மரணமானது மனிதர்கள் நித்தியகாலம் பாவியாக இவ்வுலகில் வாழும் பரிதாபமான நிலைமையை மாற்றியமைக்கும் நன்மையான ஒரு ஆசீர்வாதமாகவே உள்ளது. உண்மையில், "மிகப்பெரிய எதிரியாகத் தென்படும் மரணம், நமக்கு நல்லதொரு நண்பனாகவே உள்ளது."[21] மரணம் எப்படிப்பட்டது? மரணத்தின் பின் மனிதராகிய நாம் எங்கு செல்கின்றோம்? நம்முடைய வாழ்வின் இறுதி நிலை என்ன? என்பதைத் தேவனுடைய வார்த்தையான வேதாகமம் அறியத்தருகின்றது. இவற்றை இந்நூலில் ஆராய்ந்து பார்ப்போம்.

**இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய வாழ்வில் வரவேற்றவர்களினால், மரணத்தை ஒரு நண்பனாகச் சந்தோஷத்தோடு வரவேற்க முடியும்**

[19]தம்முடைய கட்டளையை மீறிப் பாவம் செய்தால் மரணம் சம்பவிக்கும் என்றே தேவன் உலகின் முதல் மனிதனான ஆதாமுக்குத் தெரிவித்திருந்தார்.
[20] ஆதியாகமம் 3:22-24ல் "பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
[21] E.W.Lutzer, *One Minute After You Die*, p. 55.

# முதலாம் அத்தியாயம்



# மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரை

மனிதர்களினால் பார்க்கமுடியாத மரணத்தின் மறுபக்கம் எத்தகையது என்பதை நாம் அறிந்துகொள்வதற்காக, மரணத்தைக் குறிப்பிட வேதாகமம் ஒருசில உருவகங்களை உபயோகித்துள்ளது. இவற்றில் முக்கியமானது "நித்திரை" என்னும் உருவகமாகும். அதாவது, மரணத்தை விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக வேதாகமம் வர்ணித்துள்ளது. இரவு நித்திரைகொள்ளும் நாம் எவ்வாறு காலையில் விழித்து எழுவோமோ, அவ்விதமாகவே கிறிஸ்தவர்களாகிய நாம் மரணத்தின் பின் ஒருநாள் விழித்து எழுந்திடுவோம். இதனால், வேதாகமம் மரணத்தை "நித்திரை"[1] என்றும், "படுத்துக் கொள்ளுதல்"[2] என்றும் குறிப்பிட்டுள்ளது. உலகின் ஏனைய கலாசாரங்களிலும் மரணத்தை நித்திரையாக வர்ணிக்கும் முறை உள்ளபோதிலும்,[3] கிறிஸ்தவத்தில் நித்திரை என்னும் உருவகம் மிகவும் சிறப்பான அர்த்தத்துடன் உள்

---

[1] 2சாமுவேல் 7:12, 1ராஜாக்கள் 2:10, 11:43, மாற்கு 5:39, யோவான் 11:11, அப்போஸ்தலர் 7:60, 13:36, 1கொரிந்தியர் 15:6, 18, 20, 51, 1தெசலோனிக்கேயர் 4:13-15, 2பேதுரு 3:4 என்னும் வசனங்களில் இவ்வுருவகம் உள்ளது.

[2] ஆதியாகமம் 47:30லும் உபாகமம் 31:16லும் இவ்வுருவகம் உள்ளது.

[3] அக்கால யூதேய, கிரேக்க, லத்தீன் மொழி இலக்கியங்களிலும் மரணம் இவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது (G.L.Green, *The Letters to the Thessalonians: The Pillar New Testament Commentary*, p. 217).

ளது. எனவே, கிறிஸ்தவத்தில் மரண நித்திரைக்கு இருக்கும் சிறப்பம் சங்களை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



# 1. மரண நித்திரையின் அற்புதம்

கிறிஸ்தவர்களாகிய நமக்கு மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக இருப்பதனால், மரணம் சாதாரணமான ஒரு நிகழ்வாக இராமல் அற்புதமான ஒரு சம்பவமாகவே உள்ளது. உண்மையில், இதில் மூன்று அற்புத அம்சங்கள் உள்ளன. இவற்றில் ***முதலாவது, மரணம் நிரந்தரமானது அல்ல*** என்னும் சத்தியமாகும். நித்திரையைப் போலவே மரணமும் தற்காலிகமானது. இவ்வுலக வாழ்வில் நாம் எப்பொழுதும் நித்திரை கொள்கிறவர்களாக இருப்பதில்லை. மாறாக, இரவில் நித்திரை செய்யும் நாம் காலையில் விழித்தெழுவோம். விழித்து எழமுடியாதபடி நித்திரை நிரந்தரமாக நம்மை ஆட்கொண்டு விடாது. இதைப்போலவே கிறிஸ்தவர்களுக்கு மரணமும் நிரந்தரமா னது அல்ல. இது தற்காலிகமானது. நாம் எப்பொழுதும் மரித்த நிலையிலேயே இருக்கமாட்டோம். மரணத்திலிருந்து ஒரு நாள் உயிர்த்தெழுவோம்.

உண்மையில், "சரீரப்பிரகாரமான வாழ்வு தற்காலிகமாக நிறுத்தப்படு வதே மரணமாக உள்ளது."[4] ஏனெனில், இயேசுகிறிஸ்து மறுபடியு மாக இவ்வுலகத்திற்கு வரும்போது,[5] மரண நித்திரையில் இருப்பவர் கள் உயிரோடு எழும்புவார்கள். இதைப்பற்றி வேதாகமம் கூறும்போது, "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோ

---

[4] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 816.
[5] இறைவனாகிய இயேசுகிறிஸ்து பாவிகளான மனிதரை மீட்டு இரட்சிப்பதற்காக இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தார். இவ்வுலகில் ஏறக்குறைய 33 ஆண்டுகள் வாழ்ந்து, மனிதருடைய பாவம் போக்கும் பலியாகச் சிலுவையில் மரித்து, மூன்று நாட்களின்பின் மரணத்திலி ருந்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றார். அவர் மறுபடியுமாக உலகத்தை நியாயந்தீர்க்க வருவார் என்று வேதாகமம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையை முன்னறிவித்த 200ற்கும் அதிகமான வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டவிதமாகவே அவருடைய வாழ் வில் நிறைவேறின. இதனால், அவருடைய மறுவருகையைப்பற்றிய தீர்க்கதரிச னங்களும் இதேவிதமாக நிறைவேறும் என்பதை மறுப்பதற்கில்லை.

டும்,[6] தேவ எக்காளத்தோடும்[7] வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப் பார்கள்" (1தெச.4:16) என்று கூறுகிறது. இவ்வசனத்தில் "ஆரவாரம்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியின்படி, "அதிக சத்தமும் அதிகாரமும் உள்ள கட்டளையாக" உள்ளது.[8] உண்மையில், இது கிறிஸ்துவுக்குள் மரித்தோரை விழித்து எழும்பும் படி அறிவிக்கும் கட்டளையாகும்.[9] "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" (யோவா.5:25), "பிரேதக் குழிக ளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" (யோவா. 5:28) என்று இயேசுகிறிஸ்து முன்னறிவித்தவிதமாக,

இரவு நித்திரைகொள்ளும் நாம்
காலையில் விழித்து எழுவதுபோல,
கிறிஸ்தவர்களாகிய நாம் மரணத்தின் பின்
ஒருநாள் விழித்து எழுந்திடுவோம்.

[6] 1தெசலோனிக்கேயர் 4:16ல் பிரதான தூதன் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகாவேல் என்று சிலர் கருதுகின்றனர். இதற்குக் காரணம், வேதத்தில் மிகாவேல் என்னும் தூதன் மாத்திரமே "பிரதான தூதன்" என்று குறிப்பிடப்பட் டுள்ளான் (யூதா.9). காபிரியேலுக்கு தூதன் என்னும் குறிப்பு மாத்திரமே வேதத்தில் உள்ளது (லூக்.1:19, 1:26). ஆனால், யூதர்களுடைய நூல்களில், மிகாவேல், காபிரியேல் உட்பட மொத்தம் ஏழு பிரதான தேவ தூதர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, காபிரியேல் பிரதான தேவதூதன் அல்ல என்று கூறமுடியாது. தாம் மறுபடியும் வரும்போது பரிசுத்த தூதர்களுடன் வருவதாகவும் (மாற்.8:38), இவர்கள் பூமியிலிருக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்ப்பார்கள் என்றும் (மாற்.13:26-27) இயேசுகிறிஸ்து தெரிவித்த துபோலவே, அவருடைய வருகையின்போது பரலோகத்திலிருக்கும் தேவதூதர் களும் வருவார்கள். 1தெசலோனிக்கேயர் 4:16ல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான தூதனுடைய சத்தம் இயேசுகிறிஸ்துவின் வருகையை அல்லது, தேவதூதர்களை அவருடன் வரும்படி அழைக்கும் சத்தமாக இருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (D.M.Martin, 1,2 *Thessalonians: The New American Commentary*, p. 151).

[7] வேதாகம காலத்தில் எக்காளம் பல்வேறு காரணங்களுக்காக உபயோகிக்கப் பட்டது. சில சந்தர்ப்பங்களில் இது ஒரு இசைக்கருவியாக உபயோகிக்கப்பட் டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமிக்ஞைகள் கொடுப்பதற்கே உபயோ கிக்கப்பட்டது (யோசு.6:4-5, நியாயா.6:34, நெகே.4:19-20, 1சாமு.13:3, எரே.4:5). இங்கு இயேசுகிறிஸ்துவின் வருகையை அறிவிக்கும் சத்தமாக எக்காளத் தொனி உள்ளது.

[8] L.Morris, *1&2 Thessalonians: New International Commentary,* p. 143.

[9] G.L.Green, *1&2 Thessalonians: The Pillar New Testament Commentary*, p. 224.

அவர் மறுபடியும் வரும்போது, எழுந்திருக்கும்படியான அதிகாரபூர்வ மான தெய்வீகக் கட்டளையின் சத்தத்தை மரித்தோர் கேட்பார்கள். "எக்காளத்தின் முழக்கத்துடன் தன் படையினருக்கு அதிகாரத்துடன் கட்டளையிடும் ஒரு இராணுவத் தலைவனைப்போல இயேசுகிறிஸ்து மரித்தோரைத் தம்மிடமாய் வரும்படி அழைப்பார்."[10] எனவே, மரணம் நிரந்தரமானதொன்றல்ல. நாம் எப்பொழுதும் மரண நிலையிலேயே இருப்பதில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, நாம் மரண நித்திரையிலிருந்து விழித்து எழுவோம். "நித்திரையைத் தொடர்ந்து விழித்தெழுதல் வருவதுபோல, மரணத்தைத் தொடர்ந்து உயிர்த்தெழு தல் வரும்."[11] இதுவே மரண நித்திரையின் முதலாவது அற்புத அம்சமாகும்.

***இரண்டாவதாக, மரணம் நம் வாழ்வின் முடிவு அல்ல*** என்பதையும் நித்திரை என்னும் உருவகம் அறியத்தருகின்றது. உண்மையில், மரணத்தின் பின் மனிதன் இல்லாமற் போய்விடுவதில்லை. நித்திரை நம் வாழ்வின் இறுதி நிலையாக இராததுபோலவே, மரணமும் நம் வாழ்வை முடிவுக்குக் கொண்டுவருவதில்லை. இயேசுகிறிஸ்து இவ்வுல கத்திற்கு மறுபடியும் வரும்போது மரித்தவர்கள் உயிர்த்தெழுவதி னால் (1கொரி.15:52), மரணத்தோடு நம் வாழ்வு முடிவடைந்து போவ தில்லை. மாறாக, மரணத்தின் பின்பும் நம் வாழ்வு தொடர்ந்திடும். மரணம் என்பது வாழ்வு இல்லாமல் போவது அல்ல. ஏனெனில், "வாழ்வும் மரணமும் இருவிதமான வாழ்க்கை முறைகளாக உள் ளன."[12] அதாவது, "ஒருவிதமான வாழ்விலிருந்து இன்னுமொருவித மான வாழ்வுக்குள் செல்வதே மரணமாகும்."[13] "மரணமானது வாழ் வின் முடிவுபோல தென்பட்டாலும், மரணத்தின் பின் நாம் முடிவில் லாத வாழ்வுக்குள் இருப்போம்".[14] இதனால்தான், "என்னை விசுவா சிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா.11:25) என்று இயேசுகி

சரீர வாழ்வு தற்காலிகமாக
நிறுத்தப்படுவதே மரணம்

[10] J.Calvin, *The First Epistle of Paul the Apostle to the Corinthians*, p. 343.
[11] J.R.W.Stott, *The Message of Thessalonians*, p. 96.
[12] L.Berkhof, *Systematic Theology*, p. 668.
[13] M.Erickson, *Christian Theology*, p. 1169.
[14] D.Cargill, Cited in J.Blanchard, *Sifted Silver, p. 58*

றிஸ்து வாக்களித்துள்ளார். உண்மையில், நித்திரைகொள்ளச் செல் வதே மரணமாகும்.

கிறிஸ்தவனுடைய மரணத்தின் மூன்றாவது அற்புத அம்சம், ***அது அவன் ஓய்வெடுக்கும் காலமாக இருப்பதாகும்***. காலை முதல் மாலை வரை பல்வேறு அலுவல்களிலும் ஈடுபடும் நாம், இரவு நம் சரீரத்திற்கு ஓய்வுகொடுப்பதற்காக நித்திரை கொள்வதுபோல, இவ்வு லக வாழ்வின் அலுவல்களில் ஈடுபட்டுக் களைத்துப்போகும் (அதாவது முதுமையடையும்) நமக்கு மரணமானது ஓய்வைப் பெற்றுத்தருகிறது. இதனால்தான், "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்" (வெளி.14:13) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, மரண நித்திரை கிறிஸ்தவர்களுக்கு ஓய்வளிக்கும் நித்திரையாகவே உள்ளது.[14] எனினும், இந்த ஓய்வானது, எவ்வித வேலையும் இல்லாமல் இருக்கும் நிலை அல்ல.[15] மாறாக, இவ்வுலக வாழ்வின் அலுவல்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் ஓய்வாக, குறிப் பாக நமது சரீரத்திற்குக் கிடைக்கும் ஓய்வாக உள்ளது. இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்வரை மரித்தோரின் சரீரங்கள் ஓய்வுபெறும்.

மரண நித்திரை நம் சரீரத்திற்கு மாத்திரமே இருப்பதனால், நாம் மனிதனுடைய தன்மையை (nature) அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். மனிதனில் "சடப்பொருள் பகுதி" "ஆவிக்குரிய பகுதி" என்னும் இரண்டு பிரதான பகுதிகள் உள்ளன. தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, மண்ணினால் அவனுடைய சரீரத்தைச் செய்து, அதற்குத் தம்முடைய ஜீவசுவாசத்தைக் கொடுத்தார் (ஆதி.2:7). இதனால் மனிதன் சடப்பொருள் பகுதியையும், ஆவிக்குரிய பகுதியை யும் உடையவனாக இருக்கின்றான். சடப்பொருள் பகுதியில் மானிட சரீரத்தின் மாம்சம், எலும்பு, இரத்தம் போன்றவை உள்ளன. ஆவிக்கு ரிய பகுதியில் மனிதனின் ஆவியும் ஆத்துமாவும் உள்ளன (1தெச. 5:23). மனிதனின் சடப்பொருள் பகுதியான சரீரமும் ஆவிக்குரிய பகுதியும் பிரிவடைவதே மரணமாகும்.[16] மனிதன் மரிக்கும்போது, அவனுடைய ஆவிக்குரிய பகுதியான ஆவியும் ஆத்துமாவும் சடப் பொருள் பகுதியான சரீரத்தை விட்டுச் செல்கின்றன.

---

[14] J.R.W.Stott, *The Message of Thessalonians*, p. 95.

[15] L.Morris, *Revelation: Tyndale New Testament Commentary*, pp. 177-178.

[16] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 337.

மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியில் ஆவியும் ஆத்துமாவும் இருக்கின்றபோதிலும் இவை எப்பொழுதும் ஒன்றாகவே உள்ளன. இதனால் தான், வேதாகமத்தில் மனிதன் ஒன்றில் "சரீரமும் ஆவியும்" (1கொரி. 5:5, 2கொரி.7:1) என்று, அல்லது "சரீரமும் ஆத்துமாவும்" (1கொரி.7:34, மத்.10:28) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வசனங்களில் "சரீரமும் ஆவியும்" முழுமனிதனையும் குறிப்பிடுவதுபோலவே, "சரீரமும் ஆத்துமாவும்" முழுமனிதனையும் குறிக்கின்றது.[17] இதைப்போலவே, மரித்தவர்கள் ஒன்றில் "ஆத்துமாக்களாக" (வெளி.6:9) அல்லது, "ஆவிகளாக" (1பேது.3:19) இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. இதனால், வேதாகமத்தின் சில வசனங்களில் மரணத்தின்போது ஆத்துமா சரீ

---

[17] மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியில் ஆவியும் ஆத்துமாவும் உள்ளபோதிலும், வேதாகமத்தின் மூலமொழிகளில் இவற்றைக் குறிப்பிடும் சொற்களுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. வேதாகமத்தின் மூலமொழிகளில் ஆவிக்குப் பழைய ஏற்பாட்டில் "ரூஆ.்." (*ruah*) என்னும் எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் "நியூமா" (*pheuma*) என்னும் கிரேக்கச் சொல்லும், ஆத்துமாவுக்குப் பழைய ஏற்பாட்டில் "நெப்.்.பெ.்.ஷ்" (*nephesh*) என்னும் எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் "சைக்கி" (*psyche*) என்னும் கிரேக்கச் சொல்லும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இச்சொற்கள் பொதுவாக மனிதனின் ஆவிக்குரிய பகுதியைக் குறித்தாலும், ஜீவன் (உயிர்) உள்ளான மனிதன், ஆத்துமா, ஆவி, மனம் என்று பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளன. சில இடங்களில் முழு மனிதனையும் குறிக்கும் விதத்திலும் ஆத்துமா என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. தற்காலத்திலும்கூட, "புதிய ஆத்துமாக்கள் சபைக்கு வந்துள்ளன" என்று கூறும்போது, முழு மனிதனையும் குறிப்பிடும் விதத்திலேயே ஆத்துமா என்னும் சொல்லை நாம் உபயோகிக்கின்றோம். பழைய ஏற்பாட்டில், 754 தடவைகள் "நெ.்.பெஷ்" என்னும் சொல் உள்ளபோதிலும், இவற்றில் 110 தடவைகள் மட்டுமே இதை ஆத்துமா என்று மொழிபெயர்க்கலாம். 150 தடவைகள் இச்சொல் உயிர் அல்லது ஜீவன் என்னும் அர்த்தத்தில் உள்ளது. ஆத்துமாவைக் குறிப்பிடும் சொல், ஜேம்ஸ் அரசனுடைய வேதாகமத்தில் 472 தடவைகள் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் உயிர், (life), சுயம் (self), இதயம் (heart), நபர் (being), என்று 29 வித்தியாசமான வார்த்தைகள் உள்ளன. புதிய ஏற்பாட்டிலும் "சைக்கி" என்னும் கிரேக்கச் சொல் 104 தடவைகள் உள்ளபோதிலும், 19 தடவைகள் மட்டுமே ஆத்துமா என்னும் அர்த்தத்துடன் உள்ளது. இச்சொல் ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்ப்பில் 59 தடவைகள் ஆத்துமா என்றும் 39 தடவைகள் உயிர் அல்லது ஜீவன் என்றும், 3 தடவைகள் மனம் என்றும், 2 தடவைகள் இதயம் என்றும், ஓரிடத்தில் நீ என்றும், இன்னுமொரு இடத்தில் நாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மூலமொழியில் இச்சொல் 11 விதமான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆவியையும் ஆத்துமாவையும் குறிப்பிடும் சொற்களுக்கு மூலமொழியில் பல்வேறு அர்த்தங்கள் இருப்பதனால், வேதாகமத்தில் இச்சொற்கள் ஒவ்வொரு வசனத்திலும் எத்தகைய அர்த்தத்துடன் உள்ளன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ரத்தைவிட்டுச் செல்வதாகவும், ஏனைய பகுதிகளில் ஆவி சரீரத்தை விட்டுச் செல்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[18] உதாரணத்திற்கு மரணத்தின்போது ஆவி சரீரத்தைவிட்டுப் பிரிந்து செல்வதாகப் பிரசங்கி 12:7, சங்கீதம் 146:4 யாக்கோபு 2:26 அப்போஸ்தலர் 7:59 என்னும் வசனங்கள் கூறுகையில், ஆதியாகமம் 35:18, லூக்கா 12:20 என்னும் வசனங்களில் ஆத்துமா பிரிவடைந்து செல்வதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. இதைப்போலவே, 1ராஜாக்கள் 17:22ல் மரித்த பிள்ளை உயிர்ப் பிக்கப்பட்டபோது, “பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது. அவன் பிழைத்தான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மனித சரீரம் மரித்தாலும் அவனுடைய ஆவிக்குரிய பகுதி அழியாது

வேதாகமம் மரணத்தைப்பற்றி குறிப்பிடும்போது, ஆவிக்குரிய பகுதி யின் மரணத்தை அல்ல, சரீரத்தின் மரணத்தைப்பற்றியே கூறுகி றது. வேதாகமத்தில் மரணத்தைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ள சொல் சரீர வாழ்வின் முடிவையே குறிக்கின்றது.[19] மனித சரீரம் மரித்தாலும் அவனுடைய ஆவிக்குரிய பகுதி அழியாது.[20] இதைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, மனிதர்களினால் ஒருவனுடைய சரீரத்தையே கொல்லமுடியும் என்றும், அவர்களால் அவனுடைய ஆத்துமாவைக் கொல்லமுடியாது என்றும் தெரிவித்துள்ளார் (மத். 10:28, லூக்.12:4-5). மரணத்தின் பின்பும் உயிரோடிருக்கும் மானிடப் பகுதியையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் ஆத்துமா என்று குறிப்பிட்டுள்ளார்.[21] மரணத்தின்பின்பும் மனிதனின் ஆவிக்குரிய பகுதி உயிருடனிருப்பதனால்தான் வெளிப்படுத்தல் 6:9-10ல் இரத்த சாட்சிக

[18] W.Grudem, *Systematic Theology,* pp. 474-475.

[19] பழைய ஏற்பாட்டில் மரணத்தைக் குறிப்பிடும் “மாவெட்” (*mawet*) என்னும் எபிரேயச் சொல், 150 தடவைகளுக்கு மேல் இடம்பெறுகிறது. இது எப்பொழு தும் சரீரவாழ்வின் முடிவைக் குறிப்பிடவே உபயோகிக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் 120 தடவைகள் இடம்பெறும் “தனாட்டொஸ்” (*thanatos*) என்னும் கிரேக்கச் சொல் சரீர மரணத்தைக் குறித்தாலும், சில இடங்களில் உருவகக் குறிப்பாயுள்ளது (S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 245).

[20] யோவான் 12:25, 13:37 போன்ற வசனங்களில் “ஜீவனை இழத்தல்” “ஜீவ னைக் கொடுத்தல்” என்னும் சொற்பிரயோகங்களும் ஆவிக்குரிய பகுதியின் மரணத்தை அல்ல, சரீரத்தின் மரணத்தைப்பற்றியே கூறுகின்றன.

[21] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, 262.

ளாக மரித்தவர்களுடைய ஆத்துமாக்களை யோவான் பலிபீடத்தின் கீழ் கண்டது மாத்திரமல்ல, அவைகள் தேவனோடு பேசுவதையும் கேட்டார்.[22] எனவே, மரணத்தின்போது சரீர வாழ்வு முடிவடைந்தாலும், ஆவிக்குரிய வாழ்வு தொடர்ந்திடும்.[23] இதனால், "மரணத்தின் பின்பு மானிட ஆத்துமா உணர்வற்று உறங்கும் நிலையில் இருக்கும்"[24] அல்லது "அழிந்து போய்விடும்"[25] என்னும் சிலரது போதனை தவறானதாயுள்ளது.[26] மரணத்தின் பின்னர் மானிட ஆத்துமா உணர்வுள்ள நிலையிலேயே இருக்கும் என்பதை, இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றி கூறிய உவமையும் அறியத்தருகின்றுது.[27]

---

[22] "அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வெளி.6:9-10).

[23] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 337.

[24] G.B.Caird, *Paul's Letters from Prison*, pp. 113-114.

[25] Anonymous, *Let God be True*, p. 200.

[26] "ஏழாம் நாள் திருச்சபை" (Seventh-day Adventists) என்னும் குழுவினர் மரணத்தின்பின் மானிட ஆத்துமா உணர்வற்ற நிலையில் உறங்குவதாகக் கருதுகின்றனர். சரீரம் இல்லாத நிலையில் ஆத்துமாவினால் இருக்கமுடியாது என்பதே இவர்களின் தர்க்கமாகும் (H.J.Berry, *What They Believe*, pp. 191-192). இதைப்போலவே, "யெகோவாவின் சாட்சியினரும்" மனிதனின் மரணத்தோடு அவனது சரீரம் மட்டுமல்ல ஆத்துமாவும் அழிந்துபோகிறது என்று கூறுகின்றனர் (Anonymous, *Let God be True*, p. 200). ஆனால் மத்தேயு 10:28, லூக்கா 16:19-31, 23:43, 2கொரி.5:1-8, பிலி.1:23 போன்ற வசனங்கள் இவ்வுபதேசத்தை முரண்படுத்துகின்றன.

[27] மனிதனின் மரணத்தோடு மானிட ஆத்துமாவும் அழிந்துபோய்விடும் என்னும் தங்களுடைய வேதப்புரட்டு உபதேசத்துக்கு ஆதாரமாக யெகோவாவின் சாட்சியினர் எசேக்கியேல் 18:4ஐ உபயோகிப்பது வழக்கம் (Anonymous, *Reasoning from the Scriptures*, p. 169). இவ்வசனத்தில் "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வசனத்தில் ஆத்துமா என்னும் சொல் முழு மனிதனையும் குறிப்பிடும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது (L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, pp. 188-189). எசேக்கியேலின் காலத்தில் மக்கள் யாத்திராகமம் 20:5ஐ அடிப்படையாகக் கொண்டு, தங்களுடைய மூதாதையரின் பாவங்கள் தங்களையும் பாதிக்கும் என்று எண்ணினார்கள். எசேக்கியேல் 18ம் அதிகாரத் தில் 2ம் 3ம் வசனங்களில் இதைப்பற்றி இஸ்ரவேலில் சொல்லப்பட்டுவந்த பழமொழி இனிமேல் சொல்லப்படுவது இல்லை என்று தீர்க்கதரிசியின்மூலம் அறிவிக்கும் தேவன் (எசே.18:2-3), இனிமேல் பெற்றோரின் பாவத்திற்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக "இதோ எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள். தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே

இவ்வுவமையில், லாசருவும் ஐசுவரியவானும் மரணத்தின் பின்னர் உணர்வுள்ளவர்களாகவே இருக்கின்றனர் (லூக்.16:19-31). மேலும்,

---

மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே.18:4) என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், பாவம் செய்கிற மனிதனே அதன் தண்டனையான மரணத்தை அனுபவிப்பான். பெற்றோரின் பாவத்திற்கு எவரும் பொறுப்பாளிகள் அல்ல என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாகும். இதற்கு முற்பட்ட காலத்தில் பெற்றோரின் பாவத்தைத் தேவன் பிள்ளைகளிடத்தில் விசாரித்து வந்தபோதிலும் (யாத். 20:5), இனிமேல் தாம் இவ்வாறு செய்வதில்லை என்று தேவன் இவ்வசனத்தில் அறிவித்துள்ளார். எனவே, பாவம் செய்கிறவன் மரணமடைவான் என்றே இவ்வசனம் கூறுகிறது. மரணத்தின்பின் மனிதனின் ஆவிக்குரிய பகுதிக்கு என்ன நடக்கின்றது என்பதைப்பற்றி இவ்வசனத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதைப்போலவே, யெகோவாவின் சாட்சிகள் சங்கீதம் 146:4, பிரசங்கி 9:5 என்னும் வசனங்களையும், மரணத்தோடு மனிதனின் ஆவிக்குரிய பகுதியும் அழிந்துவிடும் என்னும் தங்களுடைய உபதேசத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கின்றனர். சங்கீதம் 146:4ல் "மரணத்தின்போது மனிதனின் யோசனைகள் அழிந்துபோம்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், மரணத்தின் பின் மனிதன் உணர்வுள்ளவனாக இருக்கமாட்டானென்று யெகோவாவின் சாட்சியினர் கூறுகின்றனர் (Anonymous, *Reasoning from the Scriptures*, p. 383). ஆனால், மரணத்தின்பின் மனிதன் எவ்வித சிந்தனையும் அற்றவனாக இருப்பான் என்று இவ்வசனம் கூறவில்லை. ஏனெனில், இவ்வசனத்தில் யோசனைகள் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் மனிதனுடைய திட்டங்கள், நோக்கங்கள், எதிர்காலத்தைப் பற்றிய யோசனைகள் என்பவற்றையே குறிக்கின்றன. எனவே, "மனிதர் மரிக்கும்போது அவர்கள் எதிர்காலத்தைப்பற்றி போட்டிருந்த திட்டங்களும் அழிந்துபோகின்றன" (L. Harris, ed., *Theological Word Book of the Old Testament Volume* 2, p. 1056) என்றே இவ்வசனம் கூறுகிறது. எனவே, மரணத்தின்பின் மனிதன் உணர்வற்றவனாக இருப்பான் என்பது இவ்வசனத்தின் அர்த்தம் அல்ல. மேலும், பிரசங்கி 9:5ல், "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், மரணத்தின் பின் மனிதன் எவ்வித உணர்வும் அற்றவனாகி விடுவான் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர் (Anonymous, *Reasoning from the Scriptures*, p. 169). ஆனால், மரித்தவனுக்கு இவ்வுலக அனுபவங்கள் எதுவும் இருக்காது என்பதையே பிரசங்கி இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் (M.A. Eaton, *Ecclesiastes: Tyndale Old Testament Commen tary*, p. 126). ஏனெனில், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில் உயிரோடிருப்பவனுக்கும் மரித்தவனுக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும் பிரசங்கி, இவ்வசனத்தின் ஆரம்பப் பகுதியில், உயிரோடிருக்கிறவன் அறிந்திருக்கும் காரியங்களை மரித்தவனால் அறியமுடியாது என்று கூறுவதோடு, உயிரோடிருப்பவன் தனக்கும் ஒருநாள் மரணம் சம்பவிக்கும் என்பதை அறிந்திருப்பதாகவும், மரித்தவனுக்கு இத்தகைய அறிவு இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளாரேதவிர, யெகோவாவின் சாட்சிகள் தர்க்கிப்பதுபோல, மரித்தவனுக்கு எவ்வித உணர்வும் இல்லை என்று கூறவில்லை. மேலும், மரணத்தைவிட உயிரோடிருப்பது மேலானது என்னும் தர்க்கத்தை உறுதிப்படுத்துவதற்காகவே பிரசங்கி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பதையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டியது அவசியம் (R.Murphy, *Ecclesiastes: New International Biblical Commentary*, p. 208). மேலதிக விளக்கத்திற்கு எனது ***யெகோவாவின் சாட்சிகளும் வேதாகம சத்தியங்களும்*** என்னும் நூலைப் பார்க்கவும்.

“இன்றைக்கு நீ என்னோடுகூட பரதீசிலிருப்பாய்” என்று சிலுவையில் அறையப்பட்ட கள்ளனிடம் இயேசுகிறிஸ்து கூறியதினால் (லூக்.23:43), பரதீசில் அவருடன் இருப்பதை அறிந்திடும் விதத்தில் அவன் உணர்வுள்ளவனாக இருப்பான் என்பது தெளிவாகின்றது.

ஆரம்பத்தில் தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, மண்ணினால் அவனுடைய சரீரத்தை உருவாக்கி, அதற்குள் தம்முடைய ஜீவசுவாசத்தை ஊதினார். இதனால், மண்ணினால் செய்யப்பட்ட மானிட சரீரம் “ஜீவிக்கின்ற ஆத்துமாவாயிற்று.” ஆனால், மரணத்தின்போது, இந்த ஜீவிக்கின்ற ஆத்துமா, மானிட சரீரத்தைவிட்டுச் செல்வதினால், சரீரம் மறுபடியுமாக மண்ணுக்கே செல்கிறது (பிர.3:20, 22:7, ஆதி. 3:19, 146:4:). இதனால் இவர்களைப் “பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகவும்” (தானி.12:2), “மண்ணிலே தங்கியிருக்கிறவர்களாகவும்” (ஏசா.26:19) வேதாகமம் சித்தரித்துள்ளது. மானிட சரீரம் ஓய்வுபெறும் நித்திரையாகவே மரணம் இருப்பதனால், மரணம் நிரந்தரமானதொன்றல்ல, அது நம் வாழ்வின் முடிவல்ல என்பதை அறிந்து கொள்கின்றோம்.



## 2. மரண நித்திரையின் அடிப்படை

கிறிஸ்தவர்களாகிய நமக்கு மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக இருப்பதனால், எதை அடிப்படையாகக்கொண்டு நம்முடைய மரணம் நித்திரையாக மாற்றப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே நமது மரணம் நித்திரையாக மாற்றப்பட்டதற்கான காரணமாக உள்ளது. “இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்ததினால், கிறிஸ்தவர்களுக்கு மரணத்தை ஒரு நித்திரையாக மாற்றிவிட்டார்.”[28] இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது, மரணத்தின்மீது அவருக்கு இருக்கும் வல்லமையை உறுதிப்படுத்தும் ஒரு சம்பவமாக உள்ளது. இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்

[28] L.Morris, *1 & 2 Thessalonians: Tyndale New Testament Commentaries*, p. 90.

தது மாத்திரமல்ல, அவர் மரிக்கும் மனிதர்களையும் உயிர்ப்பிக்கிறவ ராக இருக்கின்றார் (யோவா.5:21, 1கொரி.15:45). வேதாகமம் இதைப் பற்றி கூறும்போது, இயேசுகிறிஸ்து "மரணத்தைப் பரிகரித்து, ஜீவனை யும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2தீமோ.1:10) என்றும், "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகா லமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி.2:14-15) என்றும் குறிப்பிட்டுள்ளது.

நாம் எப்பொழுதும் மரண நிலையிலேயே இருப்பதில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, நாம் மரண நித்திரையில் இருந்து விழித்து எழுவோம்

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே கிறிஸ்தவர்களாகிய நாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதை சாத்தியமாக்கியுள்ளதினால், வேதாகமம் அவரை, "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ.1:18) என்று கூறுகிறது. 1கொரிந்தியர் 15:20ல், "கிறிஸ்து வோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பல னானார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "முதற்பலன்" என்னும் சொல் பழைய ஏற்பாட்டோடு சம்பந்தப்பட்டுள்ளது. அக்காலத்தில், அறுவடை யில் முதலாவதாக அறுக்கப்படுவதும், முதற்பிறப்புகளும் முதற்பலன் என்று அழைக்கப்பட்டதோடு, இவை கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்தப்பட்டன (யாத்.23:19, லேவி.23:10). இந்த முதற்பலன், முழு அறுவடைக்குமான முன்னடையாளமாகவும் உறுதியாகவும் இருந்தது. எனவே, "இயேசுகிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" என்னும் வாக்கியம், அவருடைய உயிர்த்தெழுதலானது, அவருக்குள் மரிப்பவர்களுடைய உயிர்த்தெழுதலுக்கான முன்னடையாளமாகவும் அதற்கான உறுதியான ஆதாரமாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டுகி றது. அதாவது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முதற்பலனாக

வர்ணிப்பதன் மூலம், அவருக்குள் மரிப்பவர்கள் நிச்சயம் உயிர்த்தெழு வார்கள் என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது.[29]

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது, அவருக்குள் மரிப்பவர்க ளும் உயிர்த்தெழுவார்கள் என்பதற்கான உறுதியான ஆதாரமாக இருப்பதினாலேயே, அவர் உயிர்த்தெழுந்தபோது, மரித்த பரிசுத்த வான்களில் பலர் உயிரோடு எழுந்தனர். மத்தேயு 27:52-53ல் குறிப்பி டப்பட்டுள்ள இச்சம்பவம், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது, மரணத்தை மேற்கொண்டு மரித்தோரை உயிர்ப்பிக்கும் வல்லமையு டையது என்பதைக் காண்பிப்பதற்காக நடைபெற்றதாகும். இச்சம்ப வத்தை மேலோட்டமாக வாசிக்கும்போது, இயேசுகிறிஸ்து மரித்த போது உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் அவர் உயிர்த்தெழுந்த பின்பே கல்லறையைவிட்டு வெளியே வந்தனர் என்றே நாம் விளங்கிக் கொள்வோம். ஆனால், மூலமொழியின்படி, "இயேசுகிறிஸ்து மரித்த போது ஏற்பட்ட பூமியதிர்ச்சி காரணமாகக் கல்லறைகள் திறவுண்டன. அவர் உயிர்த்தெழுந்தபோது, மரித்த பரிசுத்தவான்கள் பலர் உயிர்த் தெழுந்தனர்"[30] என்றே இவ்விருவசனங்களும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.[31] இயேசுகிறிஸ்து வாழ்ந்த பிரதேசத்தில் குகைகளே கல்லறைகளாக உபயோகிக்கப்பட்டமையால், பூமி அதிர்ந்து கன்ம லைகள் பிளந்தபோது, அதிலிருந்த கல்லறைகள் திறவுண்டன. இது இயேசுகிறிஸ்து மரித்தபோது நடைபெற்ற சம்பவமாகும்.[32] இயேசு

---

[29]C.K.Barrett, *1Corinthians: Black's New Testament Commentary*, pp. 350-351. W.H.Mare, *1Corinthians: The Expositor's Bible Commentary*, p. 285.

[30] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 421.

[31] 51ம் வசனத்தின் இறுதியில், "கன்மலைகளும் பிளந்தன" என்பதற்கு அடுத்துள்ள முற்றுப்புள்ளி காற்புள்ளியாகவும், 52ம் வசனத்தில் "கல்லறைக ளும் திறந்தன" என்பதற்கு அடுத்துள்ள காற்புள்ளி முற்றுப் புள்ளியாகவும் மாற்றப்படவேண்டும். 53ம் வசனத்தின் ஆரம்பவரியான "அவர் உயிர்த்தெழுந்த பின்பு" என்பது, 52ம் வசனத்தில் "கல்லறைகளும் திறந்தன" என்பதற்குப்பிறகு வரக்கூடிய விதமாகவே மூலமொழியில் உள்ளது (J.W. Wenham, "When Were The Saints Raised" in *Journal of Theological Studies*. 32, pp. 150-152).

[32] இச்சம்பவம் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருப்ப தோடு, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கு அதன் பின்னர் என்ன நடந்தது என்பதைப்பற்றி மத்தேயு எதுவும் எழுதவில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நடைபெற்ற அற்புதச் சம்பவங்கள், அவருடைய சிலுவைப்பலியின் விளைவுகளை அறியத்தரும் அடையாளச் செயல்களாகவே உள்ளன. உதார ணத்திற்கு அவர் மரித்தபோது எருசலேம் தேவாலயத்தில் தேவனுடைய பிரசன்னம் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்தை மூடியிருந்த திரைச்சீலை மேலிருந்து

கிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது இக்கல்லறைக்குள் இருந்த பல பரிசுத்தவான்களின் சரீரங்கள் உயிர்த்தெழுந்தன. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது, மரித்தோரை உயிரோடு எழுப்ப வல்லமையுடையது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நடைபெற்ற அற்புத சம்பவமாக இது உள்ளது.[33]

இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக இருப்பதோடு, அவர் உயிர்த்தெழுந்தபோது மரித்த பரிசுத்தவான்களில் பலர் உயிர்ப்பிக்கப்பட்டனர். எனவே, இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, அவருக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22-23)[34] என்று கூறும் வேதாகமம், "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்" (1கொரி.15:52).[35] "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" (1தெச.4:14) என்பதை அறியத்தருகின்றது. எனவே, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே, நம்முடைய மரணம் விழித்து எழக்கூடிய நித்திரையாக இருப்பதற்கான அடிப்படையாக உள்ளது.

---

கீழாக இரண்டாகக் கிழிந்தது, இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலம் தேவனிடம் செல்வதற்கான மார்க்கம் சகலருக்கும் திறக்கப்பட்டுள்ளதை அறியத்தரும் செயலாக உள்ளது. அதுவரை காலமும் பிரதான ஆசாரியன் மட்டுமே மக்களுக்காகத் தேவனிடம் செல்லக்கூடியவனாக இருந்தான். இதைப்போல, இயேசு மரிக்கும்போது பூமியெங்கும் பகற்பொழுதில் அந்தகாரம் ஏற்பட்டது. இது, அவர் மனிதரின் பாவத்தைத் தம்மீது சுமந்ததற்கான அடையாளமாயுள்ளது.

[33] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, pp. 724-725.

[34] முதல் மனிதனின் (ஆதாமின்) பாவம் மரணத்தைக் கொண்டுவந்தது. மனிதர் அனைவரும் ஆதாமின் வம்சத்தினராக இருப்பதனால் மனிதர் அனைவரும் மரிக்கிறவர்களாக இருக்கின்றனர் (ஆதி.3:17-19, ரோ.5:12).

[35] மனிதனுடைய சரீரத்திற்கே மரணம் இருப்பதனால், வேதாகமம் மனிதருடைய சரீரங்களின் உயிர்த்தெழுதலைப்பற்றியே கூறுகிறது. அழியக்கூடிய நிலையில் இருக்கும் நம்முடைய சரீரம் உயிர்த்தெழுதலின்போது ஒருபோதும் அழியாத நிலையை அடையும். இதனால், "மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது.



# 3. மரண நித்திரையின் அனுபவம்

இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததினால், மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக மாற்றப்பட்டுள்ளது உண்மை என்றாலும், நம்முடைய மரணமும் இத்தகைய அற்புதமான ஒரு அனுபவமாக இருக்கவேண்டுமானால், நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களையே தேவன் அவரோடுகூட கொண்டுவருவார் (1தெச.4:14). அவர் வருகையில் அவருடையவர் களே உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்றே வேதாகமம் கூறுகிறது (1தெச. 4:16, 1கொரி.15:23). எனவே, நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டியது அவசியம். “இயேசுகிறிஸ்துவுக்குள்ளான மரணமே அவருடனான உயிர்த்தெழுதலுக்கான ஆரம்பச் செயலாக உள்ளது.”[36]

உண்மையில், இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுக்கு மட்டுமே மரணம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, “மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வேதவாக்கியம் நிறைவேறும்” என்று கூறும் வேதாகமம், “மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?” என்று கேட்கிறது (1கொரி.15:54-55). இயேசுகிறிஸ்து உயிர்த் தெழுந்ததினால் மரணத்தின் கூர் உடைக்கப்பட்டுவிட்டது. இவ்வசனத் தில் “கூர்” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், தேனீ, தேள் போன்ற விஷமுள்ள பட்சிகளின் கொடுக்குகளைக் குறிப்பிடும் சொல்லாகும். இதனால், புதிய தமிழ் மொழிபெயர்ப்புகளில் இவ்வாக்கியம் “மரணமே உன் கொடுக்கு என்னவாயிற்று?” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மரணமானது விஷமுள்ள கொடுக்குகளைக் கொண்டிருந்தாலும், இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு அத னால் எவ்வித பாதிப்பும் இல்லை. ஏனெனில், அவர் உயிர்த்தெழுந்த போது மரணத்தின் விஷக் கொடுக்குகள் அனைத்தையும் முறித்துவிட்

[36] F.F.Bruce, *1 &2 Thessalonians: Word Biblical Commentary Volume 45*, p. 97.

டார்.[37] எனவே, மரணத்தினால் பாதிக்கப்படாமல் அதை விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக மாற்றிக்கொள்வதற்கு, நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் வரவேண்டியது அவசியம். இதனால்தான், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கூறிய இயேசு கிறிஸ்து, "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்று தெரிவித்துள்ளார்

## இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுக்கு மட்டுமே மரணம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது

ஒருவன் இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, அவன் அவருக்குள் ளேயே மரிக்கின்றான். இவர்களையே வேதாகமம் "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" என்று கூறுகிறது (1தெச.4:14-16). இயேசுகிறிஸ்துவுக் குள் இருப்பவன் எப்பொழுதும் அவருக்குள்ளேயே இருக்கின்றான் (பிலி.1:1, எபே.1:1, கொலோ.2:6). இதனால், மரணத்தினாலும் அவனை இயேசுகிறிஸ்துவைவிட்டுப் பிரிக்கமுடியாதுள்ளது (ரோ.8:39). இயேசு கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் அவருக்குள் நித்திரையடைந்து, அவர் மறுபடியும் வரும்போது நித்திரையை விட்டெழுந்து அவரோடு கூட வருவார்கள் (1தெச.4:14-16). எனவே, நமது மரணமும் நித்திரை யைப் போன்ற ஒரு அனுபவமாக இருப்பதற்கு நாமும் இயேசுகிறிஸ் துவுக்குள் வரவேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்ப தானது, "அவருடன் ஜீவனுள்ள ஒரு உறவில் இருப்பதாகும்." இதை திராட்சைச்செடியில், கொடிகள் இருப்பது போன்ற ஒரு உறவாக இயேசுகிறிஸ்து சித்தரித்துள்ளார். அதாவது, திராட்சைச் செடிக்கும் கொடிகளுக்கும் இடையில் ஜீவனுள்ள ஒரு உறவு இருப்பதுபோல, நமக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையில் ஜீவனுள்ள ஒரு உறவு இருக்கவேண்டும் (யோவா.15:1-16).[38] அப்போஸ்தலனாகிய பவுல் இதை,

---

[37] L.Morris, *1Corinthians: Tyndale New Testament Commentary*, p. 229.

[38] யோவான்.15:5ல், "நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். பொருட்கள் பெட்டிக்குள் இருப்பதுபோல நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதாகக் கருதுவது தவறாகும். இது திராட்சைச் செடிக்கும் கொடிகளுக்கும் இடையில் இருப்பதைப்போன்ற ஒரு அந்நியோன்ய மான உறவில் இருக்கும் நிலையாகும்.

இயேசுகிறிஸ்து தலையாக இருக்கும் சரீரத்தில் நாம் அவயவங்களாக இருப்பதாக விளக்கியுள்ளார் (1கொரி.12:12-27).[39] சரீரத்தில் அவயவங்களுக்கும் தலைக்கும் இடையில் ஜீவனுள்ள உறவு இருப்பது போலவே, இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலான உறவு உள்ளது.

## நித்திய ஜீவன் என்பது ஒருவன் இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பதினால் மாத்திரம் கிடைக்கும் ஜீவனாகும்.

இயேசுகிறிஸ்துவுடன் ஜீவனுள்ள உறவில் இருப்பதற்கு, அவர் அருளும் நித்திய ஜீவனை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். மனிதர்களுக்கு இச்ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் இதைப்பற்றி கூறும்போது, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றும் (யோவா.10:10), "நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" (யோவா. 10:28) என்றும் தெரிவித்துள்ளார். உண்மையில், இயேசுகிறிஸ்துவிடம் இருந்து ஜீவனைப் பெறுபவன், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்கின்றான் (யோவா.5:24).[40] இதனால்தான், இயேசுகிறிஸ்து நமக்கு அருளும் ஜீவன் "நித்தியஜீவன்" என்று அழைக்கப்படுகின்றது. இது முடிவில்லாத ஜீவனாக மட்டுமல்ல, முழுமையும் அர்த்தமும் உள்ள ஒரு ஜீவனாகவும் உள்ளது. மூலமொழியில் "நித்தியம்" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சொல்,[41] தேவனுக்கு மட்டுமே பொருத்தமான வார்த்தையாக உள்ளது. ஏனெனில், தேவன் மட்டுமே நித்தியர். இதனால், நித்திய ஜீவன் என்பது தேவனுடைய ஜீவனாகவே உள்ளது. எனவே, இயேசுகிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைத் தருகின்றார்

[39] 1கொரிந்தியர் 12:27ல் "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[40] "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்று யோவான் 5:24ல் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[41] "அயோநியொஸ்" (*aionios*) என்னும் கிரேக்கச் சொல்.

என்று கூறும்போது, அவர் நமக்குத் தம்முடைய ஜீவனையே கொடுத்துள்ளார் என்பது தெளிவாகின்றது.[42] உண்மையில், "நித்திய ஜீவன் என்பது தேவனுடன் வாழ்கின்ற அனுபவமாகவே உள்ளது."[43] எனவே, நித்திய ஜீவன் என்பது ஒருவன் இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பதினால் மாத்திரம் கிடைக்கும் ஜீவனாக உள்ளது.

மரணத்தினால் பாதிக்கப்படாத நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டியது அவசியம். ஏனெனில், மரணத்திற்குக் காரணமாக உள்ள பாவத்தை (ரோ.6:23, எசே.18:20)[44] இயேசுகிறிஸ்துவே தம்முடைய சிலுவைப்பலியில் நீக்கி உள்ளார். உலக மாந்தர் அனைவரும் பிறவியிலேயே பாவிகளாக இருப்பதனால் (ரோ.3:23),[45] இயேசுகிறிஸ்து அருளும் நித்தியஜீ வனைப் பெறுவதற்கு மனிதர்களுடைய பாவத்திற்குப் பரிகாரம் செய்யவேண்டி உள்ளது. எனினும் மனிதர்களினால் இதைச் செய்ய முடியாதிருப்பதனால், இயேசுகிறிஸ்துவே மனிதருடைய பாவம் போக்கும் பலியாகத் தம்மைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். இதைப்பற்றி வேதாகமம் கூறும்போது, "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளது (1யோவா.2:2). இவ்வசனத்தில், "கிருபாதார பலி" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல், மூலமொழியின்படி "பாவத்தைப் போக்கும் பலியாக" உள்ளது. சிலுவை மரணத்தின்போது இயேசுகிறிஸ்து மனிதருடைய பாவத்தைத் தம்மீது "சுமந்து தீர்த்தார்" (யோவா.1:29, ஏசா.53:11).[46] "சுமந்து தீர்த்தார்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், "எடுத்துச் செல்லுதல்" அல்லது

---

[42] W.Barclay, *The Letters of John*, p.128; *New Testament Words*, pp. 33-41.

[43] J.M.Boice, *The Epistles of John: An Expositional Commentary*, p. 166.

[44] ரோமர் 3:23ல் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும், எசேக்கியேல் 18: 20ல், "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[45] "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாய் இருப்பதாக" ரோமர் 3:23 கூறுகிறது. இதற்குக் காரணம், மனிதர் அனைவரும் பாவியான ஆதாமின் வம்சத்தினராக இருப்பதேயாகும்.

[46] யோவான் 1:29ல் இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதைப்பற்றி ஏசாயா முன்னறிவிக்கும்போது "என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (ஏசா.53:11) என்று தெரிவித்துள்ளார்.

"முழுமையாக அகற்றுதல்" என்னும் அர்த்தமுடையது.[47] இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது உலக மக்களின் பாவத்தைத் தம் மீது எடுத்துச் சென்றார்.[48] இதனால், அவருடைய சிலுவை மரணம் மனிதருடைய பாவத்தைப் போக்கும் பலியாக உள்ளது. இது, பாவத்தின் விளைவான மரணத்திலிருந்தும், பாவத்திற்கான தேவ தண்டனையான நரக ஆக்கினையிலிருந்தும் மனிதருக்கு விடுதலையைக் கொடுக்கின்றது.

### மரணத்தினால் பாதிக்கப்படாத நித்தியஜீவனைப் பெறுவதற்கு நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்.

தேவனுடன் என்றென்றும் வாழக்கூடிய ஆசீர்வாதமான நித்தியஜீவனை மனிதர்கள் பெறுவதற்குத் தடையாக இருக்கும் பாவத்தை இயேசுகிறிஸ்துவே தம்முடைய சிலுவைப்பலியினால் நீக்கியுள்ளதினால், மரணத்தினால் பாதிக்கப்படாத நித்திய ஜீவனைப் பெறுவதற்கு நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டியது அவசியம். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 6:47) என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து, தம்மிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை அடைவதும், அவனைத் தாம் கடைசி நாளில் எழுப்புவதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார் (யோவா.6:40). மனிதருக்கு நித்திய ஜீவனை அருளும் அதிகாரம் இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரமே இருப்பதனால் (யோவா. 17:2), அவரை நிராகரிப்பவன், அதாவது, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதமாக அவரை ஏற்றுக்கொள்ளாதவன் ஜீவன் இல்லாதவனாகவே இருப்பான். இத்தகைய மனிதன் நித்திய மரணத்தையும் ஆக்கினையையும் அடைவான். ஆனால் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவன் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக, அதற்கான நித்திய தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுடன் என்றென்றும் வாழும் ஆனந்த பாக்கியத்தைப் பெறுவான். இதனால் அவன் மரித்தாலும் தேவனுடன் வாழ்வான் (யோவா.3:36).

---


[47] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, pp. 133-134.
[48] F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 53.

ஒருவனுடைய வாழ்வில் இயேசுகிறிஸ்து இருக்கும்போது மட்டுமே அவன் தேவனுடன் என்றென்றும் வாழக்கூடிய நித்தியஜீவனை உடையவனாக இருப்பான். எனவே, நம்முடைய வாழ்வில் இயேசு கிறிஸ்து இருக்கின்றாரா? என்பதை ஆராய்ந்து பார்த்து, தேவனாகிய அவரே மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்து, நம்முடைய பாவம் போக்கும் பலியாகச் சிலுவையில் மரித்து, நமக்கு நித்திய ஜீவனைப் பெற்றுத்தந்துள்ளார் என்னும் விசுவாசத்துடன் அவரை நம்முடைய தெய்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது மாத்திரமே மரணம் நமக்கு விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக இருக்கும். நாம் எங்கே, எப்பொழுது, எப்படி மரிக்கின்றோம்? என்பது முக்கியம் அல்ல. நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் மரிக்கின்றோமா என்பதே முக்கியம். ஏனெனில் இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களுக்கு மட்டுமே மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக உள்ளது.[49]

மனிதனுடைய நித்திய வாழ்வில்
சரீரப்பிரகாரமான ஒரு சம்பவமே மரணம்

[49] யோவான் 1:29ல் இயேசுகிறிஸ்துவை அறியாமல் மரிப்பவர்களின் இறுதி நிலையைப்பற்றி இந்நூலின் மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

# இரண்டாம் அத்தியாயம்



# மரணம் விடுதலை பெற்றுச்செல்லும் ஒரு யாத்திரை

இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுக்கு மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாக மட்டுமல்ல, அது அவன் விடுதலை பெற்றுச்செல்லும் ஒரு யாத்திரையாகவும் உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய மரணத்தை எதிர்பார்த்தவராக ரோமச் சிறையில் இருக்கும்போது, மரணத்தை ஒரு யாத்திரையாகவே கருதினார். இதனால், மரணமானது ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குச் செல்லும் ஒரு பயணமாகவே அவருக்கு இருந்தது. 2தீமோத்தேயு 4:6ல் அவர் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தில் "நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" என்று பவுல் எழுதியுள்ளார். இவ்வசனத்தில் "பிரிதல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்,[1] மரணமானது எவ்வாறு நாம் விடுதலை பெற்றுச் செல்லும் ஒரு யாத்திரையாக உள்ளது என்பதைச் சிறப்பான முறையில் அறியத்தருகின்றது. புதிய ஏற்பாட்டில் இவ்வசனத்திலும் பிலிப்பியர் 1:23லும் மாத்திரம் இடம்பெறும் இச்சொல் அக்காலத்தில் "கட்டுகளை அவிழ்ப்பதைக்" குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டது. குறிப்பாக, கூடாரத்தின் கட்டுகளை அவிழ்ப்பதற்கும், துறைமுகத்தில்

[1] "அநாலுசிஸ்" என்னும் கிரேக்கச் சொல்.

கட்டப்பட்டிருக்கும் படகு அல்லது கப்பலின் கட்டுகள் அவிழ்க்கப்படு வதற்கும் இச்சொல்லையே மக்கள் அக்காலத்தில் உபயோகித்தனர்.[2] எனவே, கட்டுகள் அவிழ்க்கப்பட்டு விடுதலையடையும் ஒரு செயலாக மரணம் இருப்பதாகப் பவுல் இச்சொல்லின் மூலம் அறியத்தருகின்றார். உண்மையில், இச்சொல் மரணத்தின்போது நாம் எவற்றிலிருந்து விடுதலை பெற்றுச் செல்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இவற்றை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## 1. மாம்சத்திலிருந்து விடுதலை பெற்றுச்செல்லும் யாத்திரை

"தேகத்தை விட்டுப்பிரிந்து செல்லுதல்" என்னும் வாக்கியத்தில், பிரிந்து என்பதற்குப் பவுல் உபயோகித்த சொல் கட்டுகளை அவிழ்ப்ப தற்கு, குறிப்பாகக் கூடாரமொன்றின் கட்டுகளை அவிழ்ப்பதற்கு அக்காலத்தில் உபயோகிக்கப்பட்டது. ஓரிடத்தில் முகாமிட்டிருப்போர் தமது கூடாரத்தைக் கழற்றி இன்னுமொரு இடத்திற்குச் செல்வதை இச்சொல் குறிக்கின்றது. பவுல் தன்னுடைய சரீரத்தை ஒரு கூடாரமா கவே கருதினார். இதைப் "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு" என்று அவர் குறிப்பிட்டுள்ளார் (2கொரி.5:1).[3] அதாவது, நாம் தற்பொழுது மாம்ச சரீரம் என்னும் கூடாரத்தில் வாழ்கின்றோம். இத னால் மரணத்தின்போது, இக்கூடாரவாழ்வை முடித்துக்கொண்டு வேறிடம் செல்கின்றோம் (2கொரி.5:8). கூடார வாழ்வானது தற்காலிகக் குடியிருப்பாகும். குறிப்பிட்ட ஒரு பணிக்காக ஓரிடத்தில் சிறிது காலம் இருப்பவர்களே அவ்விடத்தில் கூடாரமடித்து வாழ்வார்கள். ஆனால், தமது பணி முடிவடைந்தவுடன் அவர்கள் அதுவரைகாலமும் தாங்கள் வாழ்ந்த கூடாரத்தைக் கழற்றி அவ்விடத்தை விட்டுச் சென்றுவிடுவார் கள். ஆனால், நிரந்தரமாக ஓரிடத்தில் வாழ்பவர்கள் கூடாரத்தில்

---

[2] W.E.Vine, *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 160.

[3] பவுல் ஓரிடத்தில் நிரந்தரமாகக் குடியிராமல் பல்வேறு இடங்களுக்குச் செல்பவராகவும், கூடாரம் செய்யும் தொழிலாளியாகவும் இருந்ததினால் (அப். 18:3), இவ்வுலக வாழ்வைக் கூடார வாழ்வுக்கு ஒப்பிட்டுள்ளதாக வேதஆராய்ச் சியாளர்கள் கருதுகின்றனர் (A.Motyer, *The Message of Philippians*, p. 88).

வாழ்வதில்லை. எனவே கூடாரம் தற்காலிகக் குடியிருப்பையே குறிக்கின்றது. இதைப்போலவே, மரணத்தின்போது, நாம் நம்முடைய மாம்ச சரீரத்தில் வாழும் தற்காலிகமான கூடார வாழ்வை முடித்துக் கொண்டு, அதைவிட்டுப் புறப்பட்டுச் செல்கின்றோம்.

மனிதனில் சடப்பொருள் பகுதி, ஆவிக்குரிய பகுதி என்று இரு பகுதிகள் இருப்பதாக முதலாம் அத்தியாயத்தில் பார்த்தோம். வேதாகம சத்தியத்தின்படி, மரணத்தின்போது மனிதனின் ஆவிக்குரிய பகுதி சடப்பொருள் பகுதியைவிட்டுச் செல்கின்றது.[4] இதனால், சடப்பொருள் பகுதியான சரீரம் மண்ணுக்குச் செல்கின்றது. ஆனால் ஆவிக்குரிய பகுதியோ இயேசுகிறிஸ்துவிடம் செல்கின்றது (பிர.12:7). இதனால்தான், கிறிஸ்தவத்தின் முதலாவது இரத்தசாட்சியான ஸ்தேவான் மரிக்கும் போது, இயேசுகிறிஸ்துவிடம் தன் ஆவியை ஒப்புவித்தான் (அப்.7:59-60). அப்போஸ்தலனாகிய பவுல் இதைப்பற்றி கூறும்போது, "தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே இருக்கப் போகின்றோம்" (பிலி.1:23) என்றும், "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோய் கர்த்தரிடத்தில் குடியிருக்கப் போகின்றோம்" (2கொரி.5:8) என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, மரணமானது இயேசுகிறிஸ்துவிடம் செல்வதற்கான பயணத்தை ஆரம்பிப்பதற்காக நாம் குடியிருக்கும் மாம்ச சரீரமென்னும் கூடாரத்தின் கயிறுகளை அவிழ்க்கும் செயலாக உள்ளது.

மரணமானது நாம் இயேசுகிறிஸ்துவிடம் செல்வதற்கான பயணமாக இருப்பதனால், மரணத்தைக் குறித்து பயப்படுவது அர்த்தமற்றது. இதனால்தான், "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" (பிலி.1:21) என்று பவுல் கூறக்கூடியவராக இருந்தார். உண்மையில், மரணம் அவருக்கு ஒரு இழப்பாக இராமல், ஆதாயமாகவே இருந்தது. ஏனெனில், "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க ஆசைப்பட்ட" பவுல் (பிலி.1:23), மரணத்தின்போது "தன்னுடைய ஜீவனான இயேசுகிறிஸ்துவை" (கொலோ. 3:3) இழந்துவிட மாட்டார். "இயேசுகிறிஸ்துவே அவரில் வாழ்ந்தார்" (கலா.2:20). மரணத்தின் போது அவர் இயேசுகிறிஸ்துவிடமே சென்றார் (2கொரி.5:8). இதனால், "மரணத்தினால் இயேசுகிறிஸ்துவையும் அவரையும் பிரிக்கமுடியாதிருந்தது."[5] உண்மையில், "மரணம் அவரை இயேசுகிறிஸ்துவிடமே

[4] பக்கங்கள் 15 முதல் 20 வரை.

[5] H.F.Vos, *Philippians: Bible Study Commentary*, p. 39.

கொண்டுசென்றது."[6] இதனால், மரணம் பவுலுக்கு ஒரு இழப்பாக இராமல், "இயேசுகிறிஸ்துவுடனான வாழ்வை முழுமையாக அனுப விக்கும்"[7] விதத்தில் "அவருடைய நேரடிப் பிரசன்னத்திற்குச் செல்லும் பயணமாக இருந்தது.[8] எனவே, "இயேசுகிறிஸ்து நம்முடைய ஜீவ னாக இருந்தால், மரணம் நமக்கு இழப்பாக இராது."[9] நம்முடைய மரணம் மற்றவர்களுக்கு இழப்பாக இருந்தாலும் நமக்கு அது லாபமாகவே உள்ளது.[10] ஏனெனில், "மரணத்தின்போது நம்முடைய மாம்ச சரீரத்தில் வாழும் கூடார வாழ்வு முற்றுப்பெற்று, இயேசுகிறிஸ் துவுடனான வீட்டு வாழ்வு ஆரம்பமாகின்றது."[11] மரணத்தின் பின் பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு (சரீரம்) அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத் தில் நமக்குண்டு (2கொரி.5:1). இதனால், நாம் மரணத்தின்போது, மாம்ச சரீரத்திலிருந்து விடுதலைபெற்று, இயேசுகிறிஸ்துவுடன் நித் திய காலமாக வாழும் பரலோக வீட்டுக்குச் செல்கின்றோம்.



## 2. மண்ணுலகிலிருந்து விடுதலை பெற்றுச்செல்லும் யாத்திரை

மாம்சக் கூடாரத்திலிருந்து விடுதலை பெற்றுத் தரும் மரணமானது, நாம் வாழும் மண்ணுலகிலிருந்தும் விடுதலை பெற்றுச் செல்லும் ஒரு யாத்திரையாக உள்ளது. 2தீமோத்தேயு 4:6லும், பிலிப்பியர் 1:23லும், பவுல் உபயோகித்துள்ள "கட்டுகளை அவிழ்த்தல்" என்னும் அர்த்தமுடைய கிரேக்கச்சொல், துறைமுகத்தில் கட்டப்பட்டிருக்கும் கப்பல்கள், படகுகள் என்பவற்றின் கயிறுகளை அவிழ்ப்பதற்கும் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்டது. உண்மையில், கிறிஸ்துவுடனி ருப்பதற்கான பயணத்தை நாம் ஆரம்பிக்கும்போது, நம்மை இவ்வு

---

[6] R.R.Melick, *Philippians: The New American Commentary*, p. 84.
[7] M.Bockmuehl, *Philippians: Black's New Testament Commentary*, p. 88.
[8] S.B.Ferguson, *Let's Study Philippians*, p. 27.
[9] F.F.Bruce, *Philippians: Good News Bible Commentary*, pp. 25-26.
[10] R.C.Sproul, *Surprised by Suffering*, p. 137.
[11] A.Motyer, *The Message of Philippians*, p. 88.

லகத் துறைமுகத்தோடு இணைத்திருக்கும் கட்டுகள் அவிழ்க்கப்படு தலே மரணமாகும். பலவிதமான கயிறுகள் நம்மை இவ்வுலகத்தோடு சேர்த்து கட்டி வைத்துள்ளன. மரணத்தின்போது இவையனைத்தும் அவிழ்க்கப்படுவதனால் நாம் இவ்வுலகத்திலிருந்து விடுதலைபெற்று இயேசுகிறிஸ்துவை முகமுகமாய்ச் சந்திப்பதற்கான பயணத்தை ஆரம்பிக்கின்றோம்.

"நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலேயே இருப்பதாக" வேதாகமம் கூறுகிறது (பிலி.3:20). குடியிருப்பு என்பதற்கு மூலமொழியில் உபயோ கிக்கப்பட்டுள்ள சொல் "குடியுரிமை" என்னும் அர்த்தமுடையது.[12] அதாவது, பரலோகமே கிறிஸ்தவர்களாகிய நமது சொந்த இடம். இவ்வுலகில் நாம் "அந்நியர்களும் பரதேசிகளாகவுமே இருக்கின் றோம்" (1பேது.1:2, 2:11). "அந்நியர்கள், பரதேசிகள்" என்பவற்றிற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்கள்,[13] தாய்நாட்டை விட்டு வேறு ஒரு நாட்டில் தற்காலிகமாகக் குடியிருப்பவர்களை, அல்லது அலைந்து திரிபவர்களைக் குறிப்பவைகளாகும்.[14] எனவே,

---

[12] இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் இச்சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. திருவிவிலியத்தில் "தாய்நாடு" என்னும் சொல் உள்ளது.

[13] மூலமொழியில் அந்நியர் என்பதற்கு "பரிபிடிமொய்ஸ்" (*parepidemois*) என்னும் கிரேக்கச் சொல்லும், பரதேசி" என்பதற்கு "பரொய்க்கொஸ்" (*paroikos*) என்னும் கிரேக்கச் சொல்லும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

[14] பேதுரு இச்சொற்களை சொல்லர்த்தமாகவே உபயோகித்துள்ளதாகச் சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அதாவது, பேதுருவின் வாசகர் கள், தங்களுடைய சொந்த நாட்டைவிட்டு, அந்நிய நாடுகளில் வாழ்ந்தவர்கள் என்பதையே இச்சொற்கள் குறிப்பதாக இவர்கள் கூறுகின்றனர் (J.H.Elliott, *1Peter: Anchor Bible Commentary*, pp. 458-462, 476-483; S.McKnight, *1Peter: The NIV Application Commentary*, pp. 47-50). பேதுருவின் வாசகர்கள், ரோம ராட்சியத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிதறப்பட்டவர்கள் என்பது உண்மை என்றாலும் (1பேது.1:1), இவர்கள் தங்கள் ஆயுள் முழுவதும் தாங்கள் வாழ்ந்த இடத்திலேயே இருந்துள்ளனர். இதனால் அந்நியர் பரதேசிகள் என்னும் சொற்கள் சொல்லர்த்தமாக அல்ல, உருவக விவரணங்களாகவே உள்ளன (W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 48-49). அதாவது, கிறிஸ்தவர்கள் உலகில் எந்த நாட்டில் பிறந்து வாழ்ந்தாலும், அவர்களுக்கு அந்நாடு சொந்தமானது அல்ல, கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது என்னும் அர்த்தத்துடனேயே இச்சொற்கள் வேதாக மத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன. (எபி.11:13, 13:14, 1பேது.1:17, 2:11, பிலி.3:20, எபே.2:19). கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்ல, அவர்கள் பரலோகவாசிகள் என்பதை இச்சொற்கள் அறியத்தருகின்றன. கிறிஸ்தவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருப்பதனால் அவர்கள் இவ்வுலகத்தில் அந்நியரும் பரதேசிகளாகவும் இருக்கின்றனர்.

இவ்வுலகம் நமது சொந்த இடம் அல்ல. நாம் தற்காலிகமாகவே இவ்வுலகில் குடியிருக்கின்றோம். இதனால்தான் "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை" என்று வேதாகமம் கூறுகிறது (எபி.13:14). உண்மையில், "நாம் இவ்வுலகில் குடியுரிமையுடன் அல்ல 'கடவுச் சீட்டுடனேயே' (passport) இருக்கின்றோம்."[15] மரணமானது, இவ்வுல கில் இருப்பதற்கான "விசாவை" ரத்துச் செய்வதனால், நாம் மண்ணு லகிலிருந்து செல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். எனவே, மரணமா னது நம் சொந்த நாட்டுக்குச் செல்லும் பயணமாகவே உள்ளது.



# 3. மரணத்திலிருந்து விடுதலை பெற்றுச்செல்லும் யாத்திரை

மரணமானது மாம்சத்திலிருந்தும், மண்ணுலகிலிருந்தும் விடுதலை பெற்றுச் செல்லும் ஒரு யாத்திரையாக இருப்பதனால், அது, மரணத்தி லிருந்தும் நமக்கு விடுதலையைப் பெற்றுத் தருகிறது. ஏனென்றால், நம் மாம்ச சரீரமே மரிக்கக்கூடியது. ஆனால், ஆவி ஆத்துமா என் பவற்றைக் கொண்டுள்ள ஆவிக்குரியபகுதி அழியாதது (மத்.10:28, லூக்.12:4-5). மரணத்தின்போது, மனிதனின் ஆவிக்குரியபகுதி இயேசு கிறிஸ்துவுடன் என்றென்றும் வாழ்வதற்காகச் செல்கின்றது (லூக். 23:43, 23:46, அப்.7:59, பிர.12:7, பிலி.1:23, 2கொரி.5:8). இதனால், மரணமானது நமக்கு மரணத்திலிருந்தும் விடுதலையைப் பெற்றுத் தருகின்றது. உண்மையில், நாம் வாழும் மண்ணுலகமே மரணங்கள் சம்பவிக்கும் உலகமாகும். இவ்வுலகில் பிறப்பவர்கள் அனைவரும் மரிக்கின்றனர். எனவே, இவ்வுலகைவிட்டு நாம் செல்லும்போது, மரிக்கும் நிலையிலிருந்து விடுதலை பெற்று, மரணம் இல்லாத இடத்திற்குச் செல்கின்றோம். மரணமானது, மரிப்பவர்களின் இடத்திலி ருந்து, ஜீவிப்பவர்களின் இடத்திற்குச் செல்லும் ஒரு பயணமாகவே உள்ளது. மரணத்தின்பின் நாம் செல்லுமிடம் மரணம் சம்பவியாத இடம் என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது (வெளி.21:4). மரண மானது, மரணமடையும் மாம்ச சரீரத்திலிருந்தும், மரணம் சம்பவிக்கும்

[15] E.P.Clowney, *The Message of 1 Peter*, p. 38.

மண்ணுலகிலிருந்தும் விடுதலையைப் பெற்றுக்கொடுப்பதனால், நாம் மரணத்திலிருந்தும் விடுதலை பெற்று, மரணம் இல்லாத இடத்திற்குச் செல்கிறவர்களாக இருப்போம். உண்மையில், "ஜீவனின் நிழலாகவே மரணம் உள்ளது. ஏனெனில், இனிமேல் மரணமடையாமல் இருப்ப தற்காகவே நாம் மரிக்கின்றோம்."[16] இதனால், "மரணத்தின் மூலம் நாம் மரணத்திலிருந்தே விடுதலை பெறுகின்றோம்."[17]

அப்போஸ்தலனாகிய பவுல், ரோம சிறையில், மரண தண்டனையை எதிர்பார்த்தவராக இருக்கும்போது, மரணத்தை விடுதலை பெற்றுச் செல்லும் ஒரு யாத்திரையாக வர்ணித்துள்ளதினால், மரணம் எத் தகையது என்பதை நாம் சரியான விதத்தில் அறிந்துகொள்ளக்கூடிய தாய் உள்ளது. தேகத்தைவிட்டுப் பிரிந்து செல்லும் அவர் உண்மை யிலேயே சிறையிலிருந்து விடுதலையடையப் போகின்றார். ஆனால், விடுதலையானது சிறையிலிருந்து இவ்வுலகத்திற்கு அல்ல. மாறாக, இயேசுகிறிஸ்துவுடன் என்றென்றும் வாழ்வதற்காகக் கிடைக்கும் விடுதலை. ஏனெனில், மரணம் அவருக்குப் பரலோகத்தின் வாசலைத் திறந்துவிட்டது. இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுக்கு மரணம் இவ்வாறு மகிமையான ஒரு விடுதலைப் பயணமாகவே உள்ளது. "மரணத்தை மேற்கொண்ட இயேசுகிறிஸ்து நம்மோடிருந்தால், மரண மானது நம்மை அவரிடம் கொண்டுசெல்லும் வாகனமாய் இருக்கும்."[18]

மரணம் நம்முடைய மாம்ச சரீரத்திற்கு நித்திரையைக் கொடுத்தாலும், நம்முடைய ஆவியைத் தேவனிடம் கொண்டுசெல்கிறது

மரணம் நம்முடைய நண்பர்களையும் உறவினர்களையும் தற்காலிகமாகப் பிரித்தாலும், நம்மைவிட்டு ஒருபோதும் பிரியாதவர்கள் வாழும் இடத்திற்கு நம்மைக் கொண்டுபோகிறது

[16] T.Hooker, Cited in J.Blanchard, *Gathered Gold*, p. 59.
[17] J.Montgomery, Cited in J.Blanchard, *Gathered Gold*, p. 59.
[18] H.Lockyer, *Last Words of Saints and Sinners*, p. 9.

## மூன்றாம் அத்தியாயம்



# மரணம் விண்ணுலக வாழ்வுக்கு ஒரு முத்திரை

இயேசுகிறிஸ்துவுக்குள் வாழ்பவர்களுக்கு மரணம் எத்தகையதாய் இருக்கும் என்பதைப் பற்றி வேதாகமம் அறியத்தரும் சத்தியத்தை இந்நூலின் முதலிரு அத்தியாயங்களிலும் பார்த்தோம். அதாவது, மரணம் விழித்து எழக்கூடிய ஒரு நித்திரையாகவும், விடுதலை பெற்றுச் செல்லும் ஒரு யாத்திரையாகவும் இருப்பதை நாம் அறிந்து கொண்டோம். மனிதனில் சடப்பொருள் பகுதி, ஆவிக்குரிய பகுதி என்னும் இரு பகுதிகள் உள்ளன. மரணத்தின்போது, இவை ஒன்றை விட்டு ஒன்று பிரிகின்றன. இதனால், மனிதனுடைய சடப்பொருள் பகுதி மண்ணுக்குச் செல்கின்றது (பிர.3:20, ஆதி.3:19). ஆனால், மனிதனின் ஆவிக்குரிய பகுதியோ இயேசுகிறிஸ்துவிடம் செல்கிறது (பிர.12:7, 2கொரி.5:8, பிலி.1:23, அப்.7:59). மரணம் நம்முடைய சரீரத்திலிருந்து ஆவிக்குரிய பகுதியை பிரித்தாலும், இதனால் நம்மை இயேசுகிறிஸ்துவிடமிருந்து பிரிக்கமுடியாது (ரோ.8:36-39). எனவே, கிறிஸ்தவர்களுக்கு விண்ணுலக வாழ்வானது அவர்களுடைய மரணத்தோடு ஆரம்பமாவதோடு, கிறிஸ்துவுக்குள்ளான மரணம் இந்த மகத்தான அநுபவத்தை உறுதிப்படுத்தும் ஒரு முத்திரையாகவும் உள்ளது.

இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவனின் ஆவிக்குரிய பகுதி இயேசு கிறிஸ்துவிடமே செல்கின்றது என்பது வேதாகமத்தின் தெளிவான போதனையாக உள்ளபோதிலும் (அப்.7:59, 2கொரி.5:8, பிலி.1:23), இதைப்பற்றிய சந்தேகமும் குழப்பமும் உடையவர்களாகவே தற்கால கிறிஸ்தவர்கள் உள்ளனர். அத்தோடு, மரணத்தின் பின்பான மனிதனுடைய நிலைபற்றிய தவறான சில உபதேசங்களும் கிறிஸ் தவ உலகில் உருவாகியுள்ளன. இதற்குக் காரணம், மரணத்தின் பின் மனிதரின் ஆவிக்குரிய பகுதி செல்லுமிடம் பற்றிய வேதாகம சத்தியத்தை இவர்கள் சரியானவிதத்தில் அறியாதவர்களாக இருப்ப தேயாகும். இதனால், மரணத்தின் பின் கிறிஸ்தவர்கள் எங்கு செல்கின்றனர் என்பதை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## 1. பாதாளமும் பரலோகமும்

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் மரித்தவர்கள் “பாதாளத்தில் இறங்குவதாகக்” குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.37:35, 42:38, 44:29, 44:31, எண்.16:30). “பாதாளம்” என்பதற்கு மூலமொழியில் “ஷியொல்” (*sheol*) என்னும் எபிரேயச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 65 தடவைகள் இடம்பெறும் இச்சொல் ஆங்கில வேதாக மங்களில் வித்தியாசமான அர்த்தங்களுடன் மொழிபெயர்க்கப்பட்டுள் ளதினால்,[1] மரணத்தின் பின்னர் மனிதர்கள் எங்கு செல்கின்றனர் என்பது பற்றிய வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவ உலகில் உள்ளன.[2] ஆனால், பழைய ஏற்பாட்டில் இச்சொல் “கல்லறை அல்லது புதைகுழி” என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்

[1] “ஷியொல்” என்னும் எபிரேயச் சொல் KJV மொழிபெயர்ப்பில் 31 தடவைகள் நரகம் என்றும், 31 தடவைகள் கல்லறை என்றும் 3 தடவைகள் குழி என் றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. NIV மொழிபெயர்ப்பில் 55 தடவைகள் கல்லறை என்றும், 6 தடவைகள் மரணம் என்றும், ஏனைய இடங்களில் இன்னும் வித்தி யாசமான மூன்று வார்த்தைகளும் உள்ளன. NASB மொழிபெயர்ப்பில் இச்சொல் மொழிபெயர்க்கப்படாமல் “ஷியொல்” என்றே குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், 34 இடங்களில் “பாதாள உலகம்” என்னும் விளக்கம் இவ்வேதாகமத்தின் அடிக்குறிப்புகளில் உள்ளது.

[2] இத்தவறுகள் இந்நூலின் வேறு பகுதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

டுள்ளது.[3] இதனால்தான், பாதாளத்தில் புழுக்களும் பூச்சிகளும் இருப்பதாகவும் வேதாகமம் கூறுகிறது (ஏசா.14:11, யோபு.17:13-14, 24:19-20).[4] உண்மையில், மரித்தவர்களின் சரீரங்கள் செல்லுமிடமே பழைய ஏற்பாட்டில் "ஷியொல்" (தமிழில் பாதாளம்) என்று அழைக்கப் பட்டுள்ளது.[5] தமிழ் வேதாகமத்தில் இச்சொல் பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளபோதிலும், கல்லறை என்பதே இச்சொல் லின் சரியான அர்த்தமாக உள்ளது. இதனால்தான், மரணத்தின் பின் துன்மார்க்கர் மட்டுமல்ல நீதிமான்களும் பாதாளத்திற்கு (மூல மொழியில் ஷியொல்) செல்வதாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது (ஏசா.38:10, ஆதி.37:35, 42:38, எண்.16:30, யோபு.17:13-16, 24:19-20, 21:13, 24:19, சங்.31:17). எனவே, பழைய ஏற்பாட்டில் மரணத்தின் பின்னர் மனிதர் செல்லும் இடத்தைக் குறிப்பிட ஷியொல் (தமிழில் பாதாளம்) என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்களில் இச்சொல் மனிதருடைய சரீரம் செல்லும் இடமான கல்லறையை அல்லது புதைகுழியையே குறிக்கின்றது.[6] இதைத்தவிர "கல்லறை"[7] "குழி"[8] "பூமியின்கீழ்" என்னும் அர்த்தமுடைய சொற்களும் மரித்தோரின்

[3] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 450; R.L.Harrris, "Why Hebrew Sheol Translated Grave" pp. 75-92.

[4] A.Heidel, "Death and After Life" in *The Gilgamesh Epic and Old Testament Parallels*, p. 180.

[5] R.L.Harris, "Why the Hebrew Sheol Was Translated Grave" p. 78; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 374; L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 336. பழைய ஏற்பாட்டில் "ஷியொல்" என்னும் சொல் சில வசனங்களில் துன்மார்க்கருடன் தொடர்புள்ளவிதத்தில் இருப்பதனால் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமம் 31 தடவைகள் இச்சொல்லை நரகம் என்று மொழிபெயர்த்துள்ளது (P.S.Johnston, *Shades of Sheol: Death and Afterlife in the Old Testament*, p. 73). ஆனால், பழைய ஏற்பாட்டில் "ஷியொல்" என்னும் சொல் நீதிமான்கள் செல்லுமிடமாகவும் இருப்பதனால் இதை நரகம் என்று மொழிபெயர்க்கமுடியாது. ஏனைய இடங்களில் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமம் ஷியொல் என்பதைக் கல்லறை என்றே மொழிபெயர்த்துள்ளது. ஆனால் தமிழ் வேதாகமம் இவ்விடங்களிலும் பாதாளம் என்ற சொல்லையே உபயோகித்துள்ளது (உதாரணத்திற்கு ஆதி.37:35, 42:38, 44:22, 44:29, 1ராஜா.2:6, 2:9 என்னும் வசனங்களில் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத் தில் கல்லறை என்னும் வார்த்தையே உள்ளது).

[6] R.L.Harris, "The Meaning of the Word Sheol as Shown by Parallels in Poetic Texts" pp. 129-135; R.L.Harrris, "Why Hebrew Sheol Translated Grave" pp. 75-92. R.L.Harris, G.L. Archer & B.K.Waltke, ed. *Theological Wordbook of the Old Testament*, pp. 892-893.

[7] "கீபர்" (*qeber*) என்னும் எபிரேயச் சொல்.

[8] "போர்" (*bor*) என்னும் எபிரேயச் சொல்.

சரீரங்கள் செல்லுமிடத்தைக் குறிப்பிடுவதற்குப் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளன.[9]

பழைய ஏற்பாட்டில் பாதாளம் என்னும் சொல் மரித்தோரின் சரீரம் வைக்கப்படும் கல்லறையையே குறிக்கின்றது.

சில கிறிஸ்தவர்கள், மரித்தோரின் ஆவி அல்லது ஆத்துமா செல்லும் இடமே பழைய ஏற்பாட்டில் "ஷியொல்" (தமிழில் பாதாளம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது பூமிக்குள் இருந்ததாகவும் கருது கின்றனர்.[10] ஆனால், பழைய ஏற்பாட்டில் மரித்தோரின் ஆவி தேவனி டத்திற்குச் செல்வதாகவே குறிப்பிடப்பட்டுள்ளதினால் (பிர.3:21, 12:7, சங்.73:23-25, ஆதி.5:24, எபி.11:5, 2ராஜா.2:11) அவை மண்ணுக் குள் சென்றதாகக் கூறமுடியாது. உண்மையில், மரித்தோரின் ஆவி கள் அல்ல, சரீரமே மண்ணுக்குச் செல்வதாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது (ஆதி.3:19, பிர.12:7) இதனால், மண்ணுக்குள் இருப்பதாகக் கூறப்படும் "ஷியொல்" (தமிழில் பாதாளம்) மரித்தோரின் சரீரங்கள் செல்லும் கல்லறையாகவே உள்ளது.[11] மரித்தோரின் ஆவிகள்

---

[9] R.L.Harris, G.L.Archer, & B.K.Waltke, *Theological Wordbook of the Old Testament Volume 2*, pp. 892-893.

[10] R.A.Morey, *Death and the After Life*, p. 72; P.S.Johnston, *Shades of Sheol: Death and After Life in the Old Testament*, pp. 69-73; E.W.Lutzer, *One Minute After You Die*, pp. 36-41.

[11] ஆதியாகமம் 4:10ல், "உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமி யிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" என்று தேவன் காயீனிடம் கூறு வதனால், அவனுடைய சகோதரனான ஆபேலின் ஆத்துமா மரணத்தின் பின் பூமிக்குள் சென்றதாகச் சிலர் கருதுகின்றனர். எனினும் இங்கு பூமியில் சிந்தப்பட்ட ஆபேலின் இரத்தம் பேசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, ஆபேலின் ஆத்துமா பூமிக்குள் இருந்து பேசுவதாக இவ்வசனம் கூறவில்லை. மேலும், "இரத்தம் பேசுவது" என்னும் சொற்பிரயோகம், "ஞானம் பேசுகிறது, புத்தி கூப் பிடுகிறது" (நீதி.8:1-11), "பர்வதங்கள் பாடுகிறது" (சங்.98:8) "மலைகள் துள்ளுகி றது" (சங்.114:4) என்னும் கூற்றுகளைப்போலவே, உயிரற்றவைகளை உயிருள்ள வைகளாக வர்ணித்துப் பேசும் மொழிவழக்கின்படி சொல்லப்பட்டுள்ளது. பூமியில் அநியாயங்களைச் செய்கிறவர்களைத் தேவன் அறிவார் என்பதைக் குறிப்பிட, அவர்களுடைய அநியாயங்கள் தேவனை நோக்கி முறையிடுவதாகக் குறிப்பிடும் எபிரேய மொழிவழக்கத்தின்படி (யாக்.5:4, வெளி.6:9-10), ஆதியாகமம் 4:10ல் ஆபேலின் இரத்தம் தேவனை நோக்கி முறையிடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentary,* p.10).

செல்லுமிடமே பழைய ஏற்பாட்டில் ஷியொல் (தமிழில் பாதாளம்) என்றால், எண்ணாகமம் 16:30-33ன்படி, வீடுகளும், வீட்டிலுள்ள பொருட்களும் அங்கு சென்றதாகக் கூறவேண்டும். ஆனால், இவ்வச னங்களில் கோராகின் குடும்பத்தினரும், அவனுடைய வீடும், அவனிட மிருந்த பொருட்களும் மண்ணுக்குள் புதையுண்டு போனதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, எசேக்கியேல் 32:27ல் படை வீரர்கள் "யுத்த ஆயுதங்களோடு பாதாளத்திற்குச் சென்றுள்ளனர்." எனவே, தமிழில் பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் ஆவிகள் செல்லுமிடத்தைக் குறிப்பதாகக் கூறமுடியாது.[12] மரித்தோ ரின் சரீரங்கள் செல்லும் கல்லறையே பழைய ஏற்பாட்டில் ஷியொல் (தமிழில் பாதாளம்) என்று அழைக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் மரித்தோரின் சரீரங்கள் செல்லும் கல்லறையைக் குறிப்பிடும் ஷியொல் (தமிழில் பாதாளம்) என்னும் சொல், வேதாகமத் திற்கு வெளியில் யூதர்களினால் மாத்திரமே உபயோகிக்கப்பட்டுள் ளது. புதைபொருள் ஆராய்ச்சியாளர்களினால் எருசலேம் நகரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்லினால் செய்யப்பட்ட பெட்டியொன்றின் மூடி யில் ஷியொல் என்னும் வார்த்தை உள்ளது. இப்பெட்டியில் மனிதரின் எலும்புகள் வைக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில், மேடான நிலங்களி லும், நிலத்துக்கு அடியிலும் இருக்கும் குகைகளில் வைக்கப்படும் சரீரங்கள் அழுகி அழிந்துபோன பின்னர், எஞ்சியிருக்கும் எலும்புகள் இத்தகைய கற்பெட்டிகளில் சேகரிக்கப்படும். இப்பெட்டிகளும் ஷியொல் என்றே அழைக்கப்பட்டுள்ளமையால், பழைய ஏற்பாட்டிலும் இச்சொல் மரித்தோரின் ஆவிகள் அல்ல, சரீரங்கள் வைக்கப்படும் கல்லறையையே குறிக்கின்றன என்பது தெளிவாகின்றது.[13]

மரித்தோரின் ஆவிக்குரிய பகுதி செல்லுமிடமே ஷியொல் (தமிழில் பாதாளம்) என்று கூறுபவர்கள், பழங்கால பிற மத இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டே இத்தகைய தவறான முடிவுக்கு வந்துள்ளனர். பழங்கால கிரேக்க, அசீரிய, எகிப்திய, பாபிலோனிய, அக்காடிய,

---

[12] R.L.Harrris, "Why Hebrew Sheol Translated Grave" pp. 78-80

[13] *Ibid*. pp. 75-76. இவ்வாறு எலும்புகள் சேகரிக்கப்படும் பழக்கம் அக்காலத் தில் இருந்துள்ளதை 1ராஜாக்கள் 13:31ல் நாம் பார்க்கலாம்.

மற்றும் உகரிட் என்னும் மொழிகளின் இலக்கியங்களில் மரித்தோரின் ஆவிகள் பூமிக்குள் இருக்கும் பாதாள உலகத்திற்குச் செல்வதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதினால், பழைய ஏற்பாட்டிலும் மரித்தோர் செல்லு மிடத்தைப்பற்றிய சொல் இத்தகைய அர்த்தமுடையதாய் இருக்க வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர்.[14] ஆனால் இது, மரணத் தின் பின்பான வாழ்வைப்பற்றி பிற மத மக்களுடைய நம்பிக்கையைப் பழைய ஏற்பாட்டுக்குள் புகுத்தும் வேதப்புரட்டாகவே உள்ளது. உண்மையில், சரீரம் கல்லறைக்குள் செல்வதே பழைய ஏற்பாட்டில் "பாதாளத்தில் இறங்குவதாக" அல்லது "பாதாளத்திற்குச் செல்வதா கக்" குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.37:35, 42:38, 44:29, 44:31, யோபு.7:9, 14:13, 21:13, சங்.139:8, பிர.9:10).[15]

மரணத்தின்பின் ஆத்துமா பாதாளத்திற்குச் செல்கிறது என்று கூறுப வர்கள் சுட்டிக்காட்டும் வேதவசனங்கள் பெரும்பாலும் கவிதை நடை யில் எழுதப்பட்டுள்ள பகுதிகளிலேயே உள்ளன. உதாரணத்திற்கு, சங்கீதம் 16:10, 30:3, 86:13, 89:48, நீதிமொழிகள் 23:14 என்னும் வசனங்களில் "ஆத்துமா பாதாளத்திற்குத் தப்புவிக்கப்படுவதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இவ்வசனங்கள் எபிரேயக் கவிதை அமைப்பு முறையின்படி சமத்தன்மையுடன் எழுதப்பட்டுள்ளன. இதன் படி, முதல் வரியில் சொல்லப்பட்ட விஷயமே இரண்டாவது வரியில் வேறு வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.[16] உதாரணத்திற்கு, மூலமொழியில் சங்கீதம் 16:10ல், "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்" என்பது முதல் வரியாகவும், "உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்பது இரண்டாவது வரியாகவும் உள் ளது. இதில் முதல் வரியிலுள்ள "என் ஆத்துமா" என்பதே இரண்டா

[14] R.A.Morey, *Death and the After Life*, p. 73.

[15] L.Berkhof, *Systematic Theology*, pp. 685-686.

[16] எபிரேயக் கவிதைகளின் இச்சிறப்புத்தன்மையைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு என்னுடைய *சங்கீதங்களின் சத்தியங்கள்* என்னும் நூலின் 10ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[17] வேதாகமத்தில் ஆத்துமா என்னும் சொல் மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியை மாத்திரமல்ல, முழு மனிதனையும் குறிப்பிடும் விதத்திலும் உபயோகிக்கப்பட்டுள் ளதற்கு இதுவும் ஒரு உதாரணமாக உள்ளது. இதைப்போலவே, 1பேதுரு 3:20ல் தமிழில் "எட்டுப் பேர்" என்று இருந்தாலும், மூலமொழியில் ஆத்துமாவைக் குறிப்பிடும் வார்த்தையே இருப்பதனால் ஆங்கில வேதாகமத்தில் (KJV) இதை eight souls என்றே மொழிபெயர்த்துள்ளனர்.

வது வரியில் "உம்முடைய பரிசுத்தவான்" என்று வேறு வார்த்தைக ளில் உள்ளது.[18] இதைப்போலவே முதல் வரியிலுள்ள "பாதாளத்தில் விடீர்" என்பது இரண்டாவது வரியில் "அழிவைக் காணவொட்டீர்" என்று வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிவிக்கும் இவ்வசனத்தைப் பேதுரு குறிப்பி டும்போது, கல்லறைக்குள் வைக்கப்பட்ட அவருடைய சரீரம் அழிந்து விடவில்லை என்பதை இதன்மூலம் சுட்டிக்காட்டியுள்ளார் (அப்.2:31).[19] எனவே, ஆத்துமா பாதாளத்திற்குத் தப்புவிக்கப்படுவதைப்பற்றிய சங்கீதப் புத்தகத்திலுள்ள வசனங்களை மூலமொழியின் கவிதை அமைப்பு முறையைக் கருத்திற்கொண்டு வியாக்கியானம் செய்தால், ஆத்துமா மண்ணுக்குள் செல்கிறது என்னும் தவறான முடிவுக்கு நாம் வரமாட்டோம். மேலும், இவ்வசனங்களில் ஆத்துமா என்னும் சொல் முழுமனிதனையும் குறிப்பிடும் விதத்திலேயே உள்ளது.[18] இதனால் இவ்வசனங்கள், மனிதர்கள் மரணத்திற்குத் தப்புவிக்கப்படு வதைப்பற்றிய கூற்றுகளாகவே உள்ளன. மரணத்தின் பின் மனிதனு டைய ஆவிக்குரியபகுதி செல்லும் இடத்தைப்பற்றி இவ்வசனங்கள் எதுவும் கூறவில்லை.[20]

**மரணத்தின்பின் சரீரம் மண்ணுக்குள் சென்றாலும், தங்களுடைய ஆவி தேவனிடம் செல்லும் என்பதைப் பழைய ஏற்பாட்டு பக்தர்கள் அறிந்திருந்தனர்.**

பழைய ஏற்பாடானது மரித்தவர்களின் சரீரங்கள் செல்லுமிடத்தைப்பற் றியே அதிகமாகக் கூறுகிறது. மரித்தவர்களின் ஆவிக்குரிய பகுதி தேவனிடம் செல்வது பற்றியும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் (பிர.3:21, 12:7), ஆவிக்குரிய பகுதியின் இறுதி நிலை பற் றியோ, அல்லது உயிர்த்தெழுதல் வரையிலான நிலைபற்றியோ முழுமையான வெளிப்படுத்தல் அக்காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கவி

[18] அப்போஸ்தலர் 2:31ல், "அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை யென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன் னான்" என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார்.
[19] இதைப்பற்றிய விளக்கத்திற்கு அடிக்குறிப்பு இல:17ஐப் பார்க்கவும்.
[20] L.Berkhof, *Systematic Theology*, p. 684.

ல்லை. எனினும், மரித்தோரின் ஆவிக்குரிய பகுதி தேவனிடம் செல்வ தாகக் கூறும் பழைய ஏற்பாடு (பிர.3:21,12:7), தேவன் பரலோகத்தில் இருப்பதை அறியத்தருவதனால்,[21] மரணத்தின் பின் தேவனிடம் செல்ப வர்கள் பரலோகத்திற்கே செல்கின்றனர் என்பதை அக்கால மக்கள் அறியாதிருந்தார்கள் என்று கூறமுடியாது. "நான் கர்த்தருடைய வீட் டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங்.23:6), "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமை யில் ஏற்றுக்கொள்வீர்" (சங்.73:24) என்னும் சங்கீதக்காரரின் கூற்றுகள், மரணத்தின்பின் தேவனிடம் செல்கின்றோம் என்னும் நம்பிக்கையுடன் அவர்கள் இருந்துள்ளதையே அறியத்தருகின்றன.

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றி கூறும்போது, மரணத்தின்பின் நீதிமான்களினதும் துன்மார்க்கரின தும் ஆவிக்குரிய பகுதி வெவ்வேறு இடங்களுக்குச் செல்கின்றன என்பதை அறியத்தந்துள்ளார். இதன்படி, நீதிமான்கள் மரிக்கும்போது அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி "ஆபிரகாமின் மடிக்கும்" துன்மார் க்கரின் ஆவிக்குரிய பகுதி "பாதாளத்திற்கும்" செல்கின்றது (லூக்.16: 22-23). இங்கு பாதாளம் என்பதற்கு மூலமொழியில் "ஹேதீஸ்" என்னும் கிரேக்கச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனினும், பழைய ஏற்பாட்டில் மரித்தோரின் சரீரங்களே "ஷியொல்" (தமிழில் பாதாளம்) என்னுமிடத்திற்குச் சென்றன. ஆனால், புதிய ஏற்பாட்டில், பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "ஹேதீஸ்" மரித்தோரின் சரீரங்கள் அல்ல, "துன்மார்க்கரின் ஆவிக்குரிய பகுதி செல்லும் இட மாகவே உள்ளது."[22] எனவே, பாதாளம் என்பதற்கு மூலமொழியில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வித்தியாசமான சொற்கள் இருப்பதையும், இவை வித்தியாசமான இடங்களைக் குறிப்பதையும்

---

[21] பரலோகம் என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் "ஷாமாயிம்" (*shamayim*) என்னும் எபிரேயச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனினும் இச்சொல் தேவன் இருக்கும் ஆவிக்குரிய உலகத்தை மட்டுமல்ல, வானம் அல்லது ஆகாயம் என்னும் அர்த்தத்துடனும் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதைப்போல "வானத்தின் சேனைகள்" என்னும் சொற்பிரயோகமும், வானத்திலுள்ள நட்சத் திரங்களையும், பரலோகத்திலிருக்கும் தேவதூதர்களையும் குறிப்பிடும் விதத்தில் இரண்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் "உரானொஸ்" (*ouranos*) என்னும் கிரேக்கச்சொல் தேவனுடைய வாசஸ்தல மான பரலோகத் தைக் குறிக்கின்றது (L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, pp. 335-337).

[22] C.Brown, ed., *The International Dictionary of NT Theology Vol 2*, p. 205.

நாம் கருத்திற்கொள்ளவேண்டியது அவசியம்.[23] மேலும், நரகம் என்பதற்கு "கெஹேனா" (*gehenna*) என்னும் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளதோடு, இது நரகம் என்று தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[24] எனவே, பாதாளத்தை நரகம் என்று கருதுவதும் தவறாகும். பாதாளத்தில் இருப்பவர்கள் இறுதி நியாயத்தீர்ப்பின் பின்பே நரகத்தில் (தமிழில் அக்கினிக் கடல்) தள்ளப்படுவதாக வெளிப்படுத்தல் 20:14ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளதினால், இரண்டும் ஒரே இடத்தைக் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகின்றது.[25] மரணத்தின்பின் இறுதி நியாயத்தீர்ப்புவரை துன்மார்க்கர் "ஹேதீஸ்சில்" இருப்பார்கள்.[26] அதன் பின்னர் சரீரத்துடன் இணைக்கப்பட்டு, நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தப்படுவார்கள் (வெளி. 20:10-11).[27] இந்நியாயத்தீர்ப்பு அவர்களுடைய இறுதிநிலையை நிர்ணயிக்கும் தீர்ப்பாக இருக்கும்.

**பாதாளம் என்பதற்கு வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் மூலமொழியில் வித்தியாசமான சொற்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.**

[23] புதிய ஏற்பாட்டில் 11 தடவைகள் மட்டுமே "ஹேதீஸ்" என்னும் சொல் உள்ளது. பழைய ஆங்கில வேதாகமம் இதை நரகம் என்று மொழிபெயர்த்துள்ளது தவறாகும். ஏனெனில் நரகத்திற்கு "கெஹேனா" என்னும் சொல்லே மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ளது. நரகத்தைக் குறிப்பிட இயேசுகிறிஸ்து இச்சொல்லையே பல தடவைகள் உபயோகித்துள்ளார். "ஹேதீஸ்" என்னும் சொல் NASB மொழிபெயர்ப்பில் சகல இடங்களிலும் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்படாமல் "ஹேதீஸ்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், NIV மொழிபெயர்ப்பில் 5 இடங்களில் இச்சொல் ஹேதீஸ் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஏனைய இடங்களில் கல்லறை, ஆழங்கள், நரகம் என்று வித்தியாசமான அர்த்தங்களில் மொழிபெயர்த்துள்ளது. பழைய ஏற்பாட்டு வசனங்கள் மேற்கோளாகக் காண்பிக்கப்பட்டுள்ள இடங்களில், இம்மொழிபெயர்ப்பு ஹேதீஸ் என்பதைக் கல்லறை என்று குறிப்பிட்டுள்ளது (L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 337).

[24] புதிய ஏற்பாட்டில் இச்சொல் 12 தடவைகள் இடம்பெற்றுள்ளது.

[25] G.P.Duffield, N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 515.

[26] L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 337.

[27] 1தெசலோனிக்கேயர் 4:14-16ன்படி, இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின் போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றனர். அதன் பின்னர் வெளிப்படுத்தல் 20:4ன்படி, ஏழரை வருஷ உபத்திரவக் காலத்தின்

லாசரு ஐசுவரியவான் என்பவர்களைப்பற்றிய உவமையின்படி,[28] மரணத்தின் பின் நீதிமான்களின் ஆவிக்குரிய பகுதி "ஆபிரகாமின் மடிக்குச்" செல்கின்றது. யூதர்களுடைய மொழிவழக்கில் "ஒருவரு டைய மடியில் இருப்பது" மிகவும் நெருக்கமான உறவைக் குறிப்பி டும் விவரணமாகும். எனவே, மரணத்தின்பின் லாசரு ஆபிரகாமுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய இடத்திற்குச் சென்றுள்ளான்.[29] யூதர்களுடைய நூல்களில் ஆபிரகாமின் மடி பரலோகத்தைக் குறிப்பி டும் விவரணமாக இருப்பதை நாம் காணலாம். ஆபிரகாமின் மடியில், "கடின வேலையோ, கவலையோ, புலம்பலோ இல்லை. அங்கு சமாதானமும், அதிக மகிழ்ச்சியும் முடிவில்லாத வாழ்வுமே உண்டு" என்று யூதர்களுடைய நூலொன்று கூறுகிறது.[30] யூதர்களுடைய நூல்கள் எந்தளவிற்கு உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளபோதிலும், ஆபிரகாம் பர லோகத்திலேயே இருப்பதனால்,[31] ஆபிரகாமுடன் மிகவும் நெருக்க மாக இருக்கக்கூடிய இடத்திற்குச் சென்ற லாசரு உண்மையில் பரலோகத்திற்கே சென்றுள்ளான் என்பதை மறுப்பதற்கில்லை. இயேசு கிறிஸ்து இவ்வுவமையில் சொல்லும் சத்தியத்தை ஆதாரமாகக்கொ ண்டு, "ஆபிரகாமின் மடி" பிற்காலத்தில் பரலோகத்திற்கான பெயர்க

---

முடிவில் அக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படு கின்றனர். ஆனால், மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரவருஷம் முடியும்வரை உயிரடையவில்லை என்று வெளிப்படுத்தல் 20:5 கூறுகிறது. இவர்களே ஹேதீஸ்சுக்குச் சென்றவர்களாவர். ஆயிரம் வருஷத்தின் பின்னர் இவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு நியாயத்தீர்ப்புக்கு உட்படுவதைப்பற்றியே வெளிப்படுத்தல் 20:11-15ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

[28] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதை ஒரு உவமையாகக் கருதுவது இல்லை. உவமையாகச் சொல்லப்படும் கதைகளில் நிஜமான சம்பவங்கள் இருப்பதில்லை என்று எண்ணும் இவர்கள், இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றி கூறியவைகள் மரணத்தின் பின்னர் மனிதருக்கு நடக்கும் காரியங்களை அறியத்தருவதனால், இது உவமை அல்ல, உண் மையாக நடந்த ஒரு சம்பவம் என்று கூறுகின்றனர். ஆனால், நிஜவாழ்வில் நடைபெறக்கூடியவைகளையே இயேசுகிறிஸ்து உவமைக் கதைகளாகச் சொல்லியிருப்பதனால், இதுவும் ஒரு உவமையாகவே உள்ளது (D.L.Bock, *Luke: The NIV Application Commentary*, pp. 431-434). உண்மையில், இது, மரணத்தின் பின்னர் மனிதருக்கு நடைபெறுவதை விளக்கும் ஒரு உவமை.

[29] R.F.Hock, "Lazarus and Micyllus: Greco-Roman Backgrounds to Luke 16:19-31" pp. 447-463.

[30] *Testament of Abraham*, 20:14.

[31] யூதர்களுடைய நூலான *Testament of Abraham* 20ன்படி ஆபிரகாம் பரலோ கத்திலேயே இருக்கின்றார்.

ளில் ஒன்றாக மாறியது.[32] இதிலிருந்து, இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மரிக்கும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி, இயேசுகிறிஸ்து இருக்கும் பரலோகத்திற்கே செல்கிறது என்பது தெளிவாகின்றது.[33]

**இயேசுவுக்குள் மரிப்பவர்களின் சரீரங்கள் மண்ணுக்குச் சென்றாலும், அவர்களுடைய ஆவி இயேசுகிறிஸ்து இருக்கும் பரலோகத்திற்குச் செல்கின்றன என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும்.**

இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் ஆவிக்குரிய பகுதி உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்கிறது என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும்.[34] பழைய ஏற்பாட்டில் மரணத்தின்போது மாம்ச சரீரம் மண்ணுக்கும் ஆவிக்குரிய பகுதி தேவனிடத்திற்கும் செல்வதாகப் பிரசங்கி 12:7 அறியத்தருகின்றது. பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் இத்தகைய நம்பிக்கையுடன் இருந்துள்ளதை சங்கீதம் 73:23-25 அறியத்தருகின்றது. "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங்.73:24) என்னும் சங்கீதக்காரனின் கூற்று, மரணத்தின் பின் அவன் தேவனோடு பரலோகத்தில் இருப்பதைப்பற்றிய அறிவிப்பாகவே உள்ளது. ஏனெனில், "மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என்னும் சொற்பிரயோகம், "பரலோகத்தில் வரவேற்கப்படுவதையே" குறிக்கின்றது.[35] தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்த ஏனோக்கைத் தேவன் தம்மோடு இருக்கும்படி எடுத்துக் கொண்டதும் (ஆதி.5:24, எபி.11:5), தீர்க்கதரிசியாகிய எலியா பரலோகத்திற்குச் சென்றதும் (2ராஜா.2:11)

---

[32] R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 424.

[33] மரித்த நீதிமான்கள் பரலோகத்திற்கும், துன்மார்க்கர் நரகத்திற்கும் செல்வதற்கு முன்பு இருக்கும் இடத்தைப்பற்றியே இவ்வுவமை அறியத்தருவ தாகப் பொதுவாகக் கருதப்பட்டாலும் (J.W.Cooper, *Body, Soul, and Life Everlasting: Biblical Anthropology and the Monism-Dualism Debate*, pp. 136-137), ஆபிரகாமின் மடிக்குச் செல்பவர்கள், ஆபிரகாம் இருக்கும் பரலோகத் திற்கே செல்வதனால், இக்கருத்து தவறானதாகவே உள்ளது.

[34] L.Berkhof, *Systematic Theology*, p. 679.

[35] A.Motyer, *After Death: What Happens When You Die?* p. 23.

இதை உறுதிப்படுத்தும் சம்பவங்களாக உள்ளன.[36] "நான் கர்த்தரு டைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங்.23:6) என்று தாவீது கூறும்போது, தான் தேவனுடன் நித்திய காலமாக இருப்பதைப்பற்றியே அவன் குறிப்பிட்டுள்ளான்.[37] மேலும், "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமா யிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கி றதை நீங்கள் வாசிக்கவில்லையா?" என்று கேட்ட இயேசுகிறிஸ்து, (மத்.22:31) ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போர் மரித்தாலும், அவர்கள் உயிரோடு பரலோகத்தில் இருப்பதை அறியத்தரும் விதத் தில், "தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக் குத் தேவனாயிருக்கிறார்" என்று அடுத்த வசனத்தில் குறிப்பிட்டுள் ளார் (மத்.22:32).[38] இதிலிருந்து, இவர்கள் பரலோகத்தில் உயிருடன் இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. மேலும், எபிரேயர் 12:1ல், பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் அனைவரும் "மேகம் போன்ற திரளான சாட்சிகளாகப் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளைப் பார்த்துக் கொண்டி ருப்பதாகச்" சித்தரிக்கப்பட்டுள்ளதும், இவர்கள் பரலோகத்தில் இருப்ப தற்கான ஆதாரமாகவே உள்ளது.[39] மறுரூப மலையில் மோசேயும்

---

[36]ஏனோக்கும் எலியாவும் மரணமடையாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள் ளப்பட்டதினால், இவர்கள் மாம்சசரீரத்துடன் பரலோகத்தில் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். எனினும், வேதாகமத்தின் ஒரு பகுதியை வியாக்கியா னம் செய்யும்போது, முழு வேதாகம உபதேசங்களையும் கருத்திற்கொண்டவ ர்களாகவும், ஏனைய பகுதிகளை முரண்படுத்தாத விதத்திலுமே வேதப்பகுதி களை நாம் விளக்கவேண்டும். எனவே, மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று வேதாகமம் கூறுவதனால் (1கொரி. 15:50), ஏனோக்கும் எலியாவும் மாம்ச சரீரத்தில் பரலோகத்தில் இருப்பதாகக் கூறமுடியாது. மேலும், இயேசுகிறிஸ்து மறுபடியும்வரும்போது, உயிரேடிருக் கும் விசுவாசிகள் ஒரு நொடியில் மறுரூபமாக்கப்பட்டு, மகிமையின் சரீரத்துடன் எடுத்துக்கொள்ளப்படுவதாகவும் வேதாகமம் கூறுவதனால் (1கொரி.15:51-52), ஏனோக்கும் எலியாவும் இவ்விதமாகவே மறுரூபமாக்கப்பட்டு மகிமையின் சரீரத்துடனேயே தற்பொழுது பரலோகத்தில் இருக்கவேண்டும்.

[37] M.Dahood, *Psalms 1-50: Anchor Bible Commentary*, pp. 148-149. சங்கீதம் 23:6ல் ஆலயத்தையே தாவீது கர்த்தருடைய வீடு என்று குறிப்பிட்டுள்ளதாகச் சிலர் கருதுகின்றனர் (F.Delitzsch, *Biblical Commentary on the Psalms Vol 1*, p. 332). இது உண்மையென்றால் எருசலேமில் ஆலயம் கட்டப்பட்ட பின்பே இச்சங்கீதம் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இது ஆலயம் கட்டப்படுவதற் கும் முன்பே தாவீதினால் எழுதப்பட்டுள்ள சங்கீதமாக இருப்பதனால், தாவீது ஆலயத்தில் அல்ல, தேவனுடன் இருப்பதைப் பற்றியே குறிப்பிட்டுள் ளான் (A.Weiser, *The Psalms: The Old Testament Library*, p. 231).

[38] W.Grudem, *Systematic Theology*, pp. 821-822.

[39] W.Grudem, *Systematic Theology*, p. 820.

எலியாவும் காட்சியளித்ததும் (மத்.17:3), இவர்கள் பரலோகத்தில் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.[40] எனவே, பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் மரணத்தின் பின் உடனடியாகத் தேவனிடத்திற்கு அதாவது, அவர் இருக்கும் பரலோகத்திற்குச் சென்றுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

இயேசுகிறிஸ்துவின் உவமையில், மரித்த லாசரு உடனடியாக ஆபிரகாம் இருக்கும் பரலோகத்திற்குச் சென்றதினால், அப்போஸ்தலனாகிய பவுலும் தேகத்தைவிட்டுப் பிரிந்து இயேசுகிறிஸ்துவுடன் இருக்க ஆசைப்பட்டார் (பிலி.1:23). இதனால்தான், "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார் (2கொரி.5:8). வேதாகமத்தில், "கிறிஸ்துவுடனேகூட இருத்தல்" என்னும் சொற்பிரயோகம்,[41] மரணத்தின் பின்னர் அல்லது, கிறிஸ்துவின் வருகையின் பின்னர் விசுவாசிகள் அவருடன் இருப்பதற்கே உபயோகிக்கப்பட்டுள்ளது.[42] எனவே, "சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனிருத்தல்" என்பது, மரணத்தின்பின் இயேசுகிறிஸ்துவோடு அவர் இருக்கும் பரலோகத்தில் இருப்பதையே குறிக்கின்றது.[43] இதிலிருந்து, மரணத்தின்பின் இயேசுகிறிஸ்துவுடன் பரலோகத்தில் இருப்பதே பவுலின் ஆசையாக இருப்பது தெளிவாகின்றது. மேலும், மரணத்தின்பின் கிறிஸ்தவர்கள் உடனடியாக இயேசுகிறிஸ்து இருக்கும் பரலோகத்திற்குச் செல்வதினாலேயே, ஸ்தேவான் என்னும் பக்தன் மரிக்கும்போது, தன்னை வரவேற்பதற்காக இயேசுகிறிஸ்து பரலோகத்தில் இருப்பதைக் கண்டதோடு,[44] "கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று அவன் தன்னை இயேசுகிறிஸ்துவிடம் அர்ப்பணித்தான் (அப்.7: 55-56,59).[45] மேலும்,

---

[40] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 374.

[41] "சின் கிறிஸ்டோ எய்நாய்" (*syn Christo einai*) என்றும் சொற்பிரயோகம்

[42] Deissmann, *Light from the Ancient East*, p. 303.

[43] L.Berkhof, *Systematic Theology*, p. 679.

[44] பரமேறுதலின் பின்னர் இயேசுகிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிப்பதாகவே வேதாகமம் கூறுகிறது (ரோ.8:34, கொலோ.3:1, எபி.1:3, 1:13, 8:10, 10:12, 1பேது.3:22). ஆனால் ஸ்தேவான் மரிக்கும்போது இயேசுகிறிஸ்து எழுந்து நின்றது, அவனைப் பரலோகத்திற்குள் வரவேற்பதற்காகவே என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p.156)

[45] இவ்விதமாகவே இயேசுகிறிஸ்துவும் மரிக்கும்போது தம்முடைய ஆவியைப் பரலோகத்திலிருக்கும் பிதாவிடம் ஒப்புவித்தார் (லூக்.23:46).

“இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களும் அவரோடுகூட வருவதாக” 1தெசலோனிக்கேயர் 4:14 கூறுவதனால், இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் தற்பொழுது அவரிடமே இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. நீதிமான்களின் ஆவிகள் பரலோகத்தில் தேவனிருக்கும் இடத்தில் இருப்பதாகவே எபிரேயர் 12:22-23 கூறுகிறது.[46] கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காகக் கூடிவரும்போது, அவர்கள் பரலோகத்திலிருக்கும் தேவனுடைய பிரசன்னத்திற்கு மட்டுமல்ல, அங்கிருக்கும் “பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளின் பிரசன்னத்திற்கும்” வந்துள்ளதை இவ்வசனங்கள் அறியத்தருகின்றன.[47] மரித்த பழைய ஏற்பாட்டு பக்தர்களினதும் கிறிஸ்தவர்களினதும் ஆவிகளே எபிரேயர் 12:22-23ல் பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கிறிஸ்துவுக்குள் மரித்து தற்பொழுது பரலோகத்தில் இருப்பவர்களையும், உலகத்தில் இருக்கும் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கியதாகவே சபை இருப்பதை எபேசியர் 3:14 அறியத்தருகின்றது. இவ்வசனத்தில், கிறிஸ்தவ சபையானது “பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் சரீரங்கள் மண்ணுக்குச் சென்றாலும், அவர்களுடைய ஆவிக்குரிய பகுதியான ஆவியும் ஆத்துமாவும் இயேசுகிறிஸ்து இருக்கும் பரலோகத்திற்கே செல்கின்றன என்பதே வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும்.



## 2. ஆவிகளும் பரலோகமும்

பழைய ஏற்பாட்டில் பாதாளம் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் (ஷியொல்) மரித்தோரின் சரீரங்கள் செல்லும்

---

[46] எபிரேயர் 12:22-24: “நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.”

கல்லறையைக் குறிக்கின்றது என்பதையும், புதிய ஏற்பாட்டில் பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் (ஹேதீஸ்) மரித்த துன்மார்க்கரின் ஆவிக்குரிய பகுதி (ஆவியும் ஆத்துமாவும்) செல்லும் இடம் என்பதையும், வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளிலும் மரிக்கும் நீதிமான்களின் ஆவிக்குரிய பகுதி உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்கின்றது என்பதையும் அறிந்துகொண்ட நாம், இவ்வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் சில உபதேசங்களை வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் மரணத்தின் பின் பரலோகத்திற்குச் சென்றார்கள் என்று வேதாகமம் தெளிவாகக் காண்பித்தாலும், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை இவர்கள் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்று சிலர் எண்ணுகின்றனர். சில பாரம்பரிய சபைகளின் உபதேசத்தின்படி, பழைய ஏற்பாட்டுப் பக்தர்களின் ஆவிகள் லத்தீன் மொழியில் "லிம்புஸ் பெட்ரும்" (*limbus patrum*) என்று அழைக்கப்படும் இடத்திற்குச் சென்றுள்ளன. இது நரகத்திற்கு வெளியில், ஆனால் நரகத்தின் எல்லையில் இருப்பதாகக் கத்தோலிக்க சபை கூறுகிறது.[47] ஆனால், இப்படி ஒரு இடம் இருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும், இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்விடத்திற்குச் சென்று, இங்கிருந்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் என்பது பாரம்பரிய சபைகளின் உபதேசமாகும்.[48] இவ்வுபதேசத்தின் செல்வாக்கு இன்றுவரை ஏனைய சபைகளிலும் காணப்படுகின்றன. இதனால், பழைய ஏற்பாட்டில் மரித்தோரின் சரீரங்கள் செல்லுமிடமான கல்லறையைக் குறிப்பிடும் "ஷியொல்" என்னும் எபிரேயச் சொல்லை மரித்தோரின் ஆவிகள் செல்லுமிடமாக விளக்குபவர்கள், பூமியில் இருந்த இவ்விடம் இயேசு

[47] கத்தோலிக்க சபையின் உபதேசத்தின்படி, ஞானஸ்நானம் பெறாமல் மரிக்கும் குழந்தைகள், "லிம்புஸ் பெட்ரும்" (*limbus patrum*) இற்கு அருகில் இருக்கும் "லிம்புஸ் இன்ஃபென்டியம்" (*limbus infantum*) என்னும் இடத்திற்குச் செல்கின்றன. இச்சபையின் உபதேசத்தின்படி ஞானஸ்நானத்தின் மூலமே மனிதரின் "ஜென்மபாவம்" நீக்கப்படுவதனால், ஞானஸ்நானம் பெறாமல் மரிக்கும் குழந்தைகள் "லிம்புஸ் இன்ஃபென்டியம்" என்னும் இடத்திற்குச் செல்கின்றனர். ஆனால், ஞானஸ்நானத்திற்கு அல்ல, இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலிக்கே மனிதருடைய பாவத்தைப் போக்கும் ஆற்றல் இருப்பதனால் வேதாகம ஆதாரமற்ற இவ்வுபதேசம் தவறானதாகவே உள்ளது.

[48] J.Pohle, *Eschatology or The Catholic Doctrine of the Last Things,* pp. 18-61.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் பின்னர் பரலோகத்திற்கு மாற்றப்பட்டதாகக் கூறுகின்றனர்.[49] இவர்களுடைய உபதேசத்தின்படி, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் நீதிமான்களினதும், துன்மார்க்கரினதும் ஆவிகள் ஷியொல் (தமிழில் பாதாளம்) என்னும் இடத்திற்குச் சென்றுள்ளன. இங்கு நீதிமான்கள் ஒரு பகுதியிலும், துன்மார்க்கர் ஏனைய பகுதியிலும் இருந்துள்ளனர். நீதிமான்கள் இருந்த பகுதியை இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துச்சென்றுள்ளார்.[50] ஆனால், மரித்தோரின் இடமாற்றம் பற்றிய இத்தகைய உபதேசத்திற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. யூதர்களின் கற்பனைக் கதைகளே இத்தகைய தவறான உபதேசங்களுக்கான ஆதாரங்களாக உள்ளன. இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் பின் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் இருந்த இடத்திற்குச் சென்று, அங்குள்ளவர்களை விடுவித்து, அவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் என்னும் உபதேசத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் வேதப்பகுதிகள் 1பேதுரு 3:18-20, எபேசியர் 4:8-10 என்பவைகளாகும். ஆனால், இவ்வேதப்பகுதிகளை ஆராய்ந்து பார்த்தால், ஆவிகளின் இடமாற்றம் பற்றிய உபதேசத்தில் உள்ள விஷயங்கள் எதுவும் இவ்வசனங்களில் இல்லை என்பதை அறிந்திடலாம். இவற்றைத் தவிர அப்போஸ்தலர் 2:27, ரோமர் 10:6-7 என்னும் வசனங்களும் இயேசுகிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார் என்னும் உபதேசத்திற்கு ஆதாரமாகக் காண்பிக்கப்படுவதுண்டு. ஆனால் இவ்விரு வசனங்களிலும் பாதாளம் என்னும் சொல் கல்லறையையே குறிப்பிடுகின்றது. ஏனெனில், இவ்விரு வேதப்பகுதிகளிலும் பாதாளம் என்னும் சொல் இடம்பெறும் வசனங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டவைகளாகவே உள்ளன.[51] எனவே, இவ்வசனங்கள் இயேசுகிறிஸ்து மரித்தோரின் ஆத்துமாக்கள் இருந்த பாதாளத்திற்குச் சென்றார் என்று கூறவில்லை. 1பேதுரு 3:18-20ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலை

---

[49] S.Zodhiates, *What You Should Know About Life After Death*, pp. 39-43.

[50] E.W.Lutzer, *One Minute After You Die*, pp. 41-49

[51] அப்போஸ்தலர் 2:27ல் சங்கீதம் 16:10உம், ரோமர் 10:6-7ல் உபாகமம் 30:13உம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

யுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது, கீழ்ப்படியாமற்போனவைகள். அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப் பேர்மாத்திரம் காக்கப்பட்டார்கள் (1பேதுரு 3:18-20).

வேதாகமத்திலேயே அதிக சர்ச்சைக்குரியதாகக் கருதப்படும் இவ்வசனங்களில்,[52] பாவிகளாகிய நம்மைத் "தேவனிடம் சேர்ப்பதற்காக அநீதியுள்ளவர்களான நமக்காக நீதியுள்ளவரான இயேசுகிறிஸ்து பாடுபட்டதாக" 18ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[53] இயேசுகிறிஸ்துவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும் எப்படிப்பட்டவை என்பதை விளக்குவதற்காக, இவ்வசனத்தில் "அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (3:18) என்றும் பேதுரு குறிப்பிட்டுள்ளார். "மாம்சத்தில் கொலையுண்டு" என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாகக் கொல்லப்பட்டு (சிலுவையில் அறையப்பட்டு) மரித்ததை அறியத்தருகின்றது. ஆனால், "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்னும் சொற்பிரயோகம் மூலமொழியின் இலக்கண அமைப்புமுறையின்படி, "அவருடைய உயிர்த்தெழுதல் ஆவிக்குரியது" என்னும் அர்த்தமுடையது.[54] அதாவது, சரீரப்பிரகார

---

[52] இவ்வசனங்களுக்குப் பலதரப்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

[53] பாவம் காரணமாகத் தேவனைவிட்டுப் பிரிந்திருக்கும் மனிதரைத் தேவனோடு ஒப்புரவாக்குவதற்காகவே இயேசுகிறிஸ்து மனிதருடைய பாவம் போக்கும் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்றே வேதாகமம் கூறுகிறது.

[54] சில வேதாகமங்கள், பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவை உயிர்ப்பித்தார் என்னும் அர்த்தத்தில் இவ்வாக்கியத்தை "ஆவியினாலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று மொழிபெயர்த்துள்ளன (NIV, KJV, NKJV). ஆனால் NRSV, NASV என்னும் வேதாகமங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமாக, "ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார்" என்பதே இவ்வாக்கியத்திற்குப் பொருத்தமானதாகவும், இலக்கண அமைப்பு முறைக்கு ஏற்றதாகவும் உள்ளது. இங்கு மாம்சப் பிரகாரமான வாழ்வுக்கும் ஆவிக்குரிய பிரகாரமான வாழ்வுக்கும் இடையிலான வேறுபாட்டையே பேதுரு சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், "மாம்சத்தில் கொல்லப்பட்டார்" என்னும் கூற்றுக்கு "ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார்" என்பதே பொருத்தமான எதிர்ச்செயலாக உள்ளது. இத்தகைய முறையிலேயே ரோமர் 1:5லும், 1தீமோத்தேயு 3:16லும் இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் மாம்சப்பிரகாரமான வாழ்வும் ஆவிக்குரியபிரகாரமான வாழ்வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Kittel, *Theological Dictionary of the New Testament Volume 6*, pp. 417, 447).

மாக மானிட வரையறைகளுக்கு உட்பட்டவராக இருந்த இயேசுகிறி ஸ்து, இவ்வரையறைகள் நீக்கப்பட்ட நிலையில் ஆவிக்குரியபிரகாரம் உயிர்த்தெழுந்தார் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும்.[55] இவ்வ சனத்தில், சரீரப்பிரகாரமான வழ்வுக்கும் உயிர்த்தெழுந்த நிலைக்கும் இடையிலுள்ள வேறுபாடே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[56] இதனால், புதிய மொழிபெயர்ப்பான திருவிவிலியத்தில் இவ்வாக்கியம் மூலமொ ழிக்கு ஏற்றவிதத்தில், "ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர்பெற்றெ ழுந்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயிர்த்தெழுந்த பின்பும் இயேசுகிறிஸ்து சரீரத்திலேயே இருக்கின்றபோதிலும், இச்சரீரம் மாம்ச சரீரத்தின் வரையறைகள் எதுவும் இல்லாத ஆவிக்குரிய சரீரமாக உள்ளது. இதனால்தான், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் கதவுகள் மூடியிருந்த அறைக்குள் செல்லக்கூடியவராகவும், மனிதருடைய கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் தோன்றி பின்னர் மறையக்கூடியவராகவும் இருந்தார் (யோவா.20:19, 20:26) உண்மையில், அவர் மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பிருந்த ஆவிக்குரிய நிலையில் மகிமையடைந்த சரீரத்துடன் இப்பொழுது இருக்கின்றார். எனவே, 19ம் வசனத்தில் "அந்த ஆவி யிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்னும் கூற்றில், "அந்த ஆவியிலே" என்பது, அவர் ஆவிக்குரிய நிலையில் பிரசங்கித்ததைப்பற்றிய குறிப்பாகவே உள்ளது.[57] இத னால்தான், பரிசுத்த பைபிளில் இவ்வசனம் மூலமொழிக்கு ஏற்றவிதத் தில், "இந்த ஆவி நிலையிலேயே சென்று பிரசங்கித்தார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[58]

இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய பிரகாரம், அதாவது ஆவிக்குரிய நிலையில் செய்த பிரசங்கத்தைப்பற்றியே 19ம் வசனத்தில் பேதுரு குறிப்பிட்டுள்ளார். எனினும், இயேசுகிறிஸ்து எக்காலத்தில் இவ்வாறு பிரசங்கம் பண்ணினார் என்பதைப்பற்றி வேதஆராய்ச்சியாளர்கள்

---

[55] N.Hillyer, *1 and 2 Peter: New International Biblical Commentary*, pp. 113-114.

[56] J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 204.

[57] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 156-157; J.R. Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 206; J.N.D.Kelly, *Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, p. 152.

[58] ராஜரீகம் என்பவருடைய மொழிபெயர்ப்பிலும், இத்தகைய அர்த்தத்துடன், "அந்த ஆவி நிலையில் அவர் காவலிலுள்ள ஆவிகளிடம் போய் உரையாற் றினார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. சில ஆதிசபைப் பிதாக்களினதும் பாரம்பரிய சபைகளினதும் உபதேசத்தின் செல்வாக்கு காரணமாகத் தற்காலத்தில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் செய்த பிரசங்கத்தைப்பற்றியே பேதுரு குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.[59] ஆனால், மாம்சத்தில் கொலையுண்டு ஆவியில், அதாவது ஆவிக்குரியபிரகாரம் உயிர்ப்பிக்கப்பட்ட இயேசுகிறிஸ்து "ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்று 18ம் 19ம் வசனங்கள் கூறுகின்றனவே தவிர, அவர் தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று இவ்வசனங்களில் குறிப்பிடப்படவில்லை. மேலும், இத்தகைய உபதேசத்திற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது (லூக்.23:52-53). ஆனால், அவரது ஆவியோ பரலோகத்தில் தேவனிடம் இருந்தது (லூக்.23:46). எனவே, அக்காலத்தில் அவருடைய ஆவி பிரசங்கிக்கச் சென்றது என்று கூறமுடியாது. உண்மையில், "இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்"[60] என்னும் கருத்து வேதாகம ஆதாரமற்றதாகவே உள்ளது.[61]

---

[59] B.Reicke, *The Disobedient Spirits and Christian Baptism*, pp. 116-118; E.Best, *1Peter: New Century Bible Commentary*, p, 140.

[60] C.E.B.Cranfield, *I&II Peter: Torch Bible Commentary*, p. 91.

[61] இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் மரித்தோரின் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று கூறுபவர்கள் முன்னுக்குப்பின் முரணாண கருத்துடையவர்களாகவும் வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் உபதேசங்களைப் போதிப்பவர்களாகவும் இருக்கின்றனர். வேதாகம சத்தியத்தின்படி, மரணத்தின் பின்னர் மனந்திரும்புவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பதை, லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் இயேசுகிறிஸ்து தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் (லூக்.16:26). மேலும், மனிதர் ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றே வேதாகமம் கூறுகிறது (எபி.9:27). இதனால், மரணத்தின் பின் மனந்திரும்புவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அப்படியிருந்தும், இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கம் பண்ணினார் என்று கூறுபவர்கள், "மரித்தவர்கள் மனந்திரும்புவதற்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதற்காக இயேசுகிறிஸ்து அவர்களுக்குப் பிரசங்கித்தார்" என்று கருதுகின்றனர் (C.Pinnock, A *Wideness in God's Mercy*, p. 168; J.W.C.Wand, *Epistles of Peter and Jude: Westminster Commentaries*, pp.

மேலும், இயேசுகிறிஸ்து பிரசங்கித்த ஆவிகள், “நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவைகள்” என்று 20ம் வசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், இவற்றைப் பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களின் ஆவிகள் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.[62] அதேபோல, பரிசுத்தவான்களின் ஆவிகளைக் கீழ்ப்படியாமற்போனவைகள் என்று கூறுவதும் அர்த்தமற்றது.

**இயேசுகிறிஸ்து “ஆவிகளுக்குப்பிரசங்கித்தார்” என்று 1பேதுரு 3:18-20 கூறுகின்றதே தவிர, அவர் தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாக இவ்வசனங்களில் குறிப்பிடப்படவில்லை.**

111-112). மனிதர்களுக்கு மட்டுமல்ல விழுந்துபோன தூதர்களுக்கும் மனந்திரும்புவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர் (A.T.Hanson, “Salvation Proclaimed: 1Peter 3:18-22” pp. 100-115). எனினும், சிலர் இதைப் பூமியில் வாழ்ந்த காலத்தில் கடுமையான பாவங்களைச் செய்யாதவர்களுக்கு மட்டுப்படுத்தியுள்ளனர் (Cyril of Alexandria, *1-2 Peter: Ancient Christian Commentary on Scripture*, pp. 107-108). பூமியில் வாழ்ந்த காலத்தில் சுவிசேஷத்தைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கும், சுவிசேஷத்தைச் சரியாகக் கேட்காதவர்களுக்கும் மரணத்தின் பின்னர் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகச் சிலர் இதைக் கருதுகின்றனர் (J.Lange, *The First Epistle General of Peter*, pp. 66-67). ஏனையவர்கள், இத்தகைய சந்தர்ப்பம் நோவாவின் காலத்தில் மனந்திரும்பாமற் போனவர்களுக்கு கொடுக்கப்பட்டதாகக் கருதுகின்றனர் (C.E.B.Cranfield, “The Interpretation of 1Peter iii.19 and iv.6” pp. 369-372). இவ்வாறு ஒன்றையொன்று முரண்படுத்தும் விளக்கங்கள் வேதாகம சத்தியத்தை முரண்படுத்துகிறவைகளாகவே உள்ளன.

62 நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களின் ஆவிகளுக்கே இயேசுகிறிஸ்து பிரசங்கம் பண்ணினார் என்று 20ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதை முரண்படுத்தும் விதத்தில், இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குப் பிரசங்கித்ததாகக் கருதுகின்றனர் (Ignatius, *Letter to the Magnesians*, 9:2, Justin, *Dialouge with Trypho,* 72:4). இதன்மூலம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை இயேசுகிறிஸ்து விடுவித்தார் என்று இவர்கள் கூறுகின்றனர் (J.Calvin, *Catholic Epistles*, p. 114). இயேசுகிறிஸ்து பரதீசுக்குச் சென்று அங்கிருந்த பரிசுத்தவான்களுக்கு சத்தியத்தை முழுமையாக அறிவித்தார் என்பதே இவர்களின் விளக்கமாக உள்ளது (E.C.S.Gibson, *Thirty-Nine Articles of the Church of England*, p. 159).

இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுத லுக்கும் இடைப்பட்ட காலத்தில், மரித்த பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களின் ஆவிகள் இருந்த இடத்திற்குச் சென்று பிரசங்கிக் கவில்லை என்றால், பேதுரு எதைப்பற்றி கூறுகின்றார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஆவிக்குரியபிரகாரம் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து பிரசங்கம் பண்ணியதைப்பற்றியே 19ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதினால், தற்காலத்தில் பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் பின்னர் நடைபெற்ற ஒரு சம்பவமாகவே இதைக் கருதுகின்றனர். அதாவது, மாம்சத்தில் கொலையுண்டு ஆவிக்குரிய பிரகாரம் உயிர்த் தெழுந்த இயேசுகிறிஸ்து, அதன்பின்பே காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாக இவர்கள் கூறுகின்றனர். இவர்கள், வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத யூதர்களுடைய நூல்களை ஆதாரமாகக் கொண்டு,[63] "காவலிலுள்ள ஆவிகள்" விழுந்துபோன தூதர்களான பிசாசின் ஆவிகள் என்றும்,[64] இயேசுகிறிஸ்து இவ்வாவிகளுக்குப்

---

[63] வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத யூதர்களுடைய நூல்களின் செல்வாக்கினாலேயே இத்தகைய விளக்கம் உருவாக்கப்பட்டுள்ளதினால், சில வேதஆராய்ச்சியாளர்கள் ஆவிகளுக்குப் பிரசங்கித்தது இயேசுகிறிஸ்து அல்ல என்றும், ஏனோக்கே இப்பணியைச் செய்தவர் என்றும் கூறுகின்றனர் (E.J.Goodspeed, "Some Greek Notes" pp. 91-92). ஏனெனில், வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத நூல்களில் ஏனோக்கே இப்படி ஒரு பணியைச் செய்துள்ளதாக ஒரு கற்பனைக் கதை உள்ளது. ஆரம்பகால வேதாகமப் பிரதிகளில் 1பேதுரு 3:19ல் ஏனோக்கின் பெயர் இருந்ததாக இவர்கள் கூறினாலும் இதற்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை. இதுவும் கி.பி.18ம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்ட ஒரு கதையாகவே உள்ளது (B.M. Metzger, *Chapters in the History of NT textual Criticism*, pp. 158-159).

[64] ஆதியாகமம் 6:2ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவகுமாரரைத் தேவதூதர்களா கவும், இத்தூதர்கள் மானிடப் பெண்களை இச்சித்து அவர்களைத் திருமணமு டித்ததே தூதர்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இதுவே தூதர்களின் வீழ்ச்சி நடைபெற்ற காலம் என்றால், இதன் பின்பே பாவம் உலகத்தில் வந்திருக்கவேண்டும். ஆனால், முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் மாத்திரம் இவ்வுலகில் இருந்த காலத்திலேயே பாவம் உலகத்தில் வந்துவிட்டதினால், பிசாசினதும், அவனைச் சேர்ந்த தூதர்களின தும் வீழ்ச்சி ஆதியாகமம் 3ம் அதிகாரத்திற்கும் முன்பே நடைபெற்றுள்ளது. மேலும், ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் விழுந்துபோன தூதர்களையே பேதுரு காவலிலுள்ள ஆவிகள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், இந்த ஆவிகளுக்குப் பிரசங்கிக்கப்பட்ட சம்பவத்தை, விழுந்துபோன சகல தூதர்க ளுக்கும் அறிவிக்கப்பட்ட செய்தியாக இவர்கள் விளக்குவது அர்த்தமற்றதா கவே உள்ளது. இதனால் சில வேத ஆராய்ச்சியாளர்கள், விழுந்துபோன தூதர்களுக்கும் மானிடப் பெண்களுக்கும் பிறந்த இராட்சதர்களே பிசாசுகள் என்றும், இந்தப்

பிரசங்கித்ததைப்பற்றியே 1பேதுரு 3:18-20ல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வாதிடுகின்றனர்.[65] ஆனால், வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத நூல்களின் கதைகளை வேதாகமத்திற்குள் புகுத்துவதும், அவற்றை வேதசத்தியமாக அறிவிப்பதும் தவறாகும்.[66] மேலும், காவலிலுள்ள ஆவிகள் "பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது கீழ்ப்படியாமற்போனவைகள்" என்று 20ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், இந்த ஆவிகளை விழுந்துபோன தூதர்களாகக் கருதமுடியாது.[67] ஏனெனில் தூதர்களினுடைய வீழ்ச்சி நோவாவின்

---

பிசாசுகளுக்கே இயேசுகிறிஸ்து பிரசங்கித்தார் என்றும் கூறுகின்றனர் (J.R. Michaels, *1Peter: Word Biblical Commentary*, pp. 205-211). இவ்வாறு வேதாகமத்தில் சொல்லப்படாத காரியங்களை நாம் உண்மை என்று ஏற்றுக்கொள்ளக்கூடாது. மேலும், தூதர்களில் ஆண் பெண் வேறுபாடோ, பாலியல் செயற்பாடுகளோ இல்லாததினால் (மத்.22:30) அவர்கள் மானிடப் பெண்களை இச்சித்தார்கள் என்று ஆதியாகமம் 6ம் அதிகாரத்தை வியாக்கியானம் செய்வதும் தவறானதாகவே உள்ளது. இதுவும் வேதாகமத் தில் சோத்துக்கொள்ளப்படாத யூதர்களின் கற்பனைக் கதைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள விளக்கமாகவே உள்ளது.

[65] D.E.Hiebert, "The Suffering and Triumphant Christ: An Exposition of 1Peter 3:18-22" pp. 146-158; A.J.Bandstra, "Making Proclamation to the Spirits in Prision: Another Look at 1Peter 3:19" pp. 120-121; W.J.Dalton, "The Interpretation of 1Peter 3:19 and 4:6: Light from 2Peter" pp. 547-555.

[66] வேதாகமத்தில் சோத்துக்கொள்ளப்படாத யூதர்களுடைய நூல்களில் ஒன்றான "முதலாம் ஏனோக்கு" என்னும் புத்தகத்தில், மானிடப் பெண்களை இச்சித்து அவர்களுடன் உறவுகொண்டதினால் விழுந்துபோன தூதர்களின் மீதான தேவ தண்டனையை அறிவிப்பதற்காக அவர்கள் இருக்குமிடத்திற்கு ஏனோக்கு சென்றதாகவும், ஏனோக்கின் பிரசங்கத்தைக்கேட்டு விழுந்துபோன தூதர்கள் மனந்திரும்பியபோதிலும், ஏனோக்கு அவர்களுடைய மனந்திரும்புதலை ஏற்றுக்கொள்ளவில்லை என்னும் கதையுள்ளது (1ஏனோக்கு 13:1-2).

[67] விழுந்துபோன தூதர்களுக்கு இயேசுகிறிஸ்து பிரசங்கித்ததைப்பற்றியே பேதுரு குறிப்பிட்டுள்ளதாகக் கருதுபவர்கள், இத்தூதர்கள் யார்? இயேசுகிறி ஸ்து எவ்விடத்தில் எக்காலத்தில் இவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினார்? என்னும் விஷயங்களில் கருத்துமுரண்பாடுடையவர்களாக உள்ளனர். சிலர், இயேசு கிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், மரித்தோர் இருக்கும் இடத்திற்குச் சென்று, அங்கிருந்த நோவாவின் காலத்தில் விழுந்துபோன தூதர்களுக்குப் பிரசங்கித்ததாகக் கூறுகின்றனர் (W.W.Wiersbe, *Be Hopeful: An Exposition of 1Peter*, p. 92) ஆனால், நோவாவின் காலத்தில் விழுந்துபோன தூதர்களும், மரித்தோரும் ஒரே இடத்தில் இருப்பதாகக் கூறும் இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இதனால், பிசாசின் தூதர்கள் இருந்த இடத்திற்கே இயேசுகிறிஸ்து சென்றதாகவும் (J.MacArthur, *The John MacArthur Bible Commentary*, p. 1915), அங்கிருந்த விழுந்துபோன ஆவிகளுக்கு அவர் இரட்சிப்பைப்பற்றி பிரசங்கித்ததாகவும்

காலத்தில் அல்ல, அதற்கும் முன்பே, குறிப்பாக ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுவதற்கும் முன்பே நடைபெற்றுள்ளது. மேலும், 20ம் வசனத்தின் இறுதியில் "அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள்" என்றும் பேதுரு கூறுவதனால், பேழையில் காப்பாற்றப்பட்டவர்களுக்கும் அக்காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தையே பேதுரு சுட்டிக்காட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது. எனவே, பேதுரு குறிப்பிடும் ஆவிகள் "மனிதருடைய ஆவிகளாகவே உள்ளன."[68] எனினும், பேதுரு இந்நிருபத்தை எழுதும்போது நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்கள் உயிருடன் இராததினால், அவர்களைக் "காவலிலுள்ள ஆவிகள்" என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். உண்மையில், கீழ்ப்படியாமற்போன இவர்கள், துன்மார்க்கரின் ஆவிகள் செல்லும் இடத்தில் இருக்கின்றனர். இங்கிருக்கும் ஆவிகளினால் வேறு எங்கும் செல்ல முடியாது என்பதனால் இவர்களைக் "காவலிலுள்ள ஆவிகள்" என்று பேதுரு வர்ணித்துள்ளார்.[69] பரிசுத்தவான்களின் ஆவிகளை

---

கூறுகின்றனர் (E.Best, *1Peter: The New Century Bible Commentary*, pp. 140-146). இயேசுகிறிஸ்து மரித்தோரின் ஆவிகள் இருந்த ஹேதீஸ்சுக்குச் சென்று, அங்கிருந்தவர்கள்மீதான தேவனுடைய தண்டனையையும், பிசாசின் மீதான தமது வெற்றியையும் அறிவித்ததாகச் சிலர் கூறுகின்றனர் (F.Loofs, "Descent to Hades (Christ's)" in *Encyclopedia of Religion and Ethics Vol. 4*, pp. 656-657). எனினும் பெரும்பாலான வேதஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் நடைபெற்ற சம்பவமாகவே இதை விளக்கியுள்ளனர். (E.G. Selwyn, *The First Epistle of St.Peter*, pp. 197-198; J.N.D.Kelly, *The Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, p. 152; P.H.Davids, *1Peter: The New International Commentary on the New Testament*, p. 138). இவர்களில் சிலர், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த தினம் மகதலேனா மரியாளுக்கு காட்சி கொடுத்த பின்னர் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறுகின்றனர் (W.J. Dalton, *Proclamation to the Spirits*, pp. 185-186). ஆனால் ஏனையவர்கள், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், அல்லது, அவர் பரமேறிச்சென்றபோது நடைபெற்ற சம்பவமாக இதை விளக்குகின்றனர் (M.Eaton, *1Peter: Preaching Through The Bible*, pp. 82-83; T.R.Schreiner, *1,2 Peter, Jude: New American Commentary*, p.188-190).

[68] F.W.Beare, *1Peter: Greek Text with Introduction and Notes*, p. 172.

[69] ஆவிகள் என்னும் சொல் தூதர்களைக் குறிப்பிடுவதற்கே பொருத்தமானது என்னும் தர்க்கத்திலும் உண்மை இல்லை. வேதாகமத்தில் மனிதர்களுடைய ஆவிகளைக் குறிப்பிடுவதற்கும் இச்சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, காவலிலுள்ள ஆவிகள் மரித்த மனிதர்களின் ஆவிகளாகவே உள்ளன. மேலும், இவ்வதிகாரத்தின் கடைசி வசனத்தில் தூதர்களைக் குறிப்பிட தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள் என்னும் சொற்களையே பேதுரு உபயோகித்துள்ளதினால், ஆவிகள் என்னும் சொல்லை

இவ்வாறு காவலிலுள்ள ஆவிகள் என்று வர்ணிப்பது பொருத்தமற்ற விளக்கமாகவே உள்ளது.

நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களுக்கு செய்யப்பட்ட பிரசங்கத்தைப்பற்றியே பேதுரு குறிப்பிட்டுள்ளார் என்றால், உயிர்த் தெழுந்த இயேசுகிறிஸ்து எப்படி இவர்களுக்கு பிரசங்கித்திருக்கமுடி யும் என்று நாம் கேட்கலாம். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பிரசங்கித்தார் என்று 19ம் வசனம் கூறவில்லை. நாம் ஏற் கனவே பார்த்தபடி (மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையின் படி), இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய நிலையில் பிரசங்கித்ததாகவே 19ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[70] இவ்வசனத்தில், "அந்த ஆவியிலே" என்பது, 18ம் வசனத்தின்படி, "ஆவிக்குரிய நிலையை யே" குறிக்கின்றது. இத்தகைய நிலையில் அவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு ஊடாகப் பிரசங்கித்தார் என்பதைப் பேதுரு தன்னுடைய நிருபத்தின் முதலாம் அதிகாரத்திலேயே சுட்டிக்காட்டி யுள்ளார் (1பேது.1:10-11).[71] நோவாவும் தன்னுடைய கால மக்களுக் குத் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பவராக இருந்ததினால் (2பேது.2:5), நோவாவுக்கூடாக இயேசுகிறிஸ்து பிரசங்கித்ததைப்பற் றியே பேதுரு தன்னுடைய முதலாம் நிருபத்தில் (3:18-20ல்) குறிப்பிட்

அவர் தூதர்களைக் குறிப்பிட உபயோகித்துள்ளார் என்று கூறமுடியாது. பவுலினுடைய நிருபங்களிலும் தூதர்கள் இவ்விதமாகவே குறிப்பிடப்பட்டுள்ள னர்.

[70] இவ்வதிகாரத்தின் கடைசி வசனத்தில் "போய்" என்னும் வார்த்தை இயேசு கிறிஸ்து பரத்திற்குச் சென்றதைக் குறிப்பதனால், "அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்னும் வாக்கியத்திலும் "போய்" என்னும் சொல் இயேசுகிறிஸ்து பரலோகத்துக்குச் சென்றதையே குறிப்பதாகச் சிலர் வாதிடுகின்றனர் (T.R.Schreiner, *1,2 Peter, Jude: The New American Commentary*, p. 186). ஆனால், இவ்வதிகாரத்தின் கடைசி வசனத்தில் "போய்" என்னும் வார்த்தைக்கு முன்னர் பரலோகத்திற்கு என்னும் சொல் உள்ளது. இதைப்போல, எங்கு போனார் என்பதைக் குறிப்பிடாமல் "போய்" என்று மட்டும் உள்ள சொல்லைப் பரலோகத்திற்குப் போனார் என்று விளக்க முடியாது (E.Best, *1Peter, New Century Bible Commentary*, p. 141).

[71] 1பேதுரு 1:10-11ல் "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்து வின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக் குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டுள்ளார்.[72] எனவே, இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், அல்லது உயிர்த்தெழுந்த பின்னர் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று 1பேதுரு 3:18-20ஐ வியாக்கியானம் செய்வது, வேதாகமத்தில் சொல்லப்படாத ஒரு காரியத்தை அதற்குள் புகுத்தும் செயலாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் மரித்தோரின் ஆவிகள் இருந்த இடத்திற்குச் சென்றார் என்னும் உபதேசத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் இன்னுமொரு வேதப்பகுதி எபேசியர் 4:8-10 ஆகும். எனினும் இவ்வசனங்களிலும் இத்தகைய உபதேசத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எபேசியர் 4:8-10ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார் (எபே.4:8-10).

இவ்வசனங்கள் மனிதர்களுக்கு வரங்கள் அருளப்படுவதைப்பற்றி கூறுகின்றனவே தவிர, இயேசுகிறிஸ்து பாதாளத்திற்கு சென்றதைப் பற்றிய குறிப்பாகவோ, அல்லது மரித்தோரின் ஆவிகள் பாதாளத்தில் இருந்து பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதைப் பற்றிய குறிப்பாகவோ இல்லை.[73] இதனால்தான், “கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்

---

[72] J.S.Feinberg, “1Peter 3;18-20: Ancient Mythology and the Intermediate State” pp. 303-336; W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 155-161, 203-239; J.H.Skilton, “A Glance at Some Old Problems in First Peter” pp. 1-9; R.M.Raymer, *1Peter: The Bible Knowledge Commentary New Testament*, p. 851; W.Kelly, *Christ Preaching to the Spirits in Prision*, pp. 3-89; P.Patterson, *A Pilgrim Priesthood: An Exposition of First Peter*, pp. 134-146, 195-199.

[73] வேதவசனங்களை வியாக்கியானம் செய்யும்போது, ஒவ்வொரு வசனமும் இடம்பெறும் வேதப்பகுதியைக் கருத்திற்கொண்டவர்களாக, அவ்வேதப்பகுதி எதைப்பற்றி கூறுகிறது என்பதை அறிந்து, அதனடிப்படையிலேயே அவற்றை வியாக்கியானம் செய்யவேண்டும். ஒரு வசனத்தின் தொடர்ச்சி அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களில் இருப்பதனால், நாம் ஒரு வசனத்தை

குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக் கிறது" என்று இதற்கு முந்திய வசனத்தில் (7வது வசனத்தில்) குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இப்பகுதியைத் தொடர்ந்து வரும் வசனங்கள், இயேசுகிறிஸ்து சபைக்கு அருளும் வரங்கள் எவை என்பதை அறியத் தருகின்றன.[74] பரலோகத்திற்குச் சென்ற இயேசுகிறிஸ்துவே மனிதர்க ளுக்கு வரங்களை அருளியுள்ளார் என்பதை அறியத்தருவதற்காக 8ம் வசனத்தில் சங்கீதம் 68:18ஐப் பவுல் உபயோகித்துள்ளார்.[75] பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்கு கொண்டுவரப்பட்டபோது (2சாமு.6:12) தேவனை மகி மைப்படுத்துவதற்காக இயற்றப்பட்ட ஒரு பாடலாகவே 68ம் சங்கீதம் உள்ளது.[76] இதனால், எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவித் துக்கொண்டு வந்த தேவன், கானானியரைச் சிறைப்படுத்தி, அவர்களு டைய தேசத்தை இஸ்ரவேல் மக்களுக்குப் பரிசாகக் கொடுத்து, வெற்றியாளராக உன்னத நகரமான எருசலேமில் வாசமாயிருப்பதைப் பின்னணியாகக்கொண்டு இச்சங்கீதம் எழுதப்பட்டுள்ளது.[77] எனவே, சங்கீதம் 68:18, அக்காலத்தில் ஒரு நாட்டைக் கைப்பற்றி அந்நாட்டின் மக்களைச் சிறைப்படுத்தி அவர்களின் செல்வங்களையெல்லாம் தன்னு

---

மாத்திரம் தனியாக எடுத்து அதற்கு நமக்கு விருப்பமான அர்த்தங்களைக் கொடுக்கமுடியாது.

[74] 1கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரே மனிதருக்கு வரங்களை அருள்பவராக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், இயேசுகி றிஸ்துவே மக்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அருள்பவராக இருப்பதனால், ஆவியின் வரங்களும் இயேசுகிறிஸ்துவினால் அருளப்படுபவைகளாகவே உள்ளன (C.Vaughan, *Ephesians: Bible Study Commentary*, p. 92).

[75] சங்கீதம் 68:18 சிறிதளவு மாற்றப்பட்ட நிலையிலேயே எபேசியரில் குறிப்பிடப்பட்டுள்ளதினால், பவுல் தன்னுடைய உபதேசத்திற்கு ஏற்றவிதத்தில் இவ்வசனத்தை மாற்றியுள்ளதாகச் சிலர் கூறுகின்றனர் (A.M.Harman, "Aspects of Paul's Use of the Psalms" p. 6). ஆனால், பவுல் இவ்விடத்தில் பழைய ஏற் பாட்டின் அரமிக் மொழிபெயர்ப்பை உபயோகித்துள்ளதே இதற்கான காரண மாக உள்ளது (R.N.Longenecker, *Biblical Exegesis in the Apostolic Period*, p. 125). இவ்வசனம் அரமிக் மொழியில் உள்ளவிதமாகவே அக்கால யூதர்களி னால் உபயோகிக்கப்பட்டு வந்ததினால், பவுல் இவ்விடத்தில் அரமிக் வேதத்தை உபயோகித்துள்ளார் (J.Stott, *The Message of Ephesians*, p. 157).

[76] D.Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Commentary*, p. 238.

[77] பிற்காலத்தில் யூதமதப்போதகர்கள், மோசே சீனாய் மலைக்கு ஏறிச்சென்று தேவனிடத்திலிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று அதை மக்களுக்கு கொடுத்ததை நினைவுகூரும் பாடலாக இச்சங்கீதத்தை வியாக்கியானம் செய்ததோடு, இதை நினைவுகூரும் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கான பாடலாகவும் இச்சங்கீதத்தை உபயோகித்தனர் (M.Barth, *Ephesians 4-6; Anchor Bible Commentary*, p. 472).

டன் எடுத்து வரும் ஒரு அரசனுடைய வெற்றிப் பவனியைச் சித்தரிக்கும் விதத்தில் உள்ளது. அக்காலத்தில், யுத்தகளத்திலிருந்து தன்னுடைய நாட்டுக்கு வெற்றியாளனாக வரும் அரசன், தான் கைப்பற்றிய நாட்டிலிருந்து கொண்டுவரும் செல்வங்களைத் தன்னை வரவேற்கும் தன்னுடைய நாட்டு மக்களுக்கு கொடுப்பது வழக்கம்.[78] "உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" என்னும் குறிப்பு இத்தகைய செயல்முறையைப்பற்றியதாகவே உள்ளது. இதை உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் பரமேறுதலுக்கும், அவர் வரங்களை அருள்வதற்கும் ஒப்பிடும் பவுல், மனிதனாகப் பூமிக்கு வந்த இயேசுகிறிஸ்துவே, சாத்தான், பாவம், மரணம் என்பவற்றின்மீது வெற்றியீட்டியவராக (எபே.1:20, கொலோ. 2:15), இவற்றிற்குச் சிறைப்பட்டிருந்தவர்களைத் தம்முடைய சிறைக்குள் கொண்டுவந்த வெற்றியாளராகப் பரலோகத்திற்குச் சென்று, மக்களுக்கு வரங்களை அருள்கின்றார் என்பதை இவ்வசனங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.[79] பெந்தெகொஸ்தே நாளில் ஆவியின் வரங்கள் அருளப்பட்டதைப் பேதுருவும் இவ்விதமாகவே அப்போஸ்தலர் 2:33ல் விளக்கி உள்ளார். அதாவது, "அவர் (இயேசுகிறிஸ்து) தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" என்று குறிப்பிட்டுள்ளார்.[80]

எபேசியர் 4:8-10ல் "ஏறினார்" என்பது இயேசுவின் பரமேறுதலையும், "இறங்கினார்" என்பது அவர் மனிதனாகப் பூமிக்கு வந்ததையும் குறிக்கின்றது.

எபேசியர் 4:8-10ல் "ஏறினார்" என்பது இயேசுகிறிஸ்துவின் பரமேறுதலையும், "இறங்கினார்" என்பது அவர் மனிதனாகப் பூமிக்கு வந்ததையும் குறிக்கின்றது. 9ம் வசனத்தில், இயேசுகிறிஸ்து "பூமியின் தாழ்வி

[78] J.R.W.Stott, *The Message of Ephesians*, p. 157. ஆதி.14, நியாயா.5:30, 1சாமு. 30:26-31 போன்ற வசனங்களில் இத்தகைய செயல்முறையை நாம் காணலாம்.
[79] A.T.Lincoln, "The Use of the Old Testament in Ephesians" pp. 18-19. J.R.W. Stott, *The Message of Ephesians*, p. 157.
[80] A.G.Patzia, *Ephesians: New International Biblical Commentary*, pp. 236-237; F.Foulkes, *Ephesians: Tyndale New Testament Commentary*, p. 123.

டங்களில் இறங்கினார்" (எபே.4:9) என்பது, அவர் மரித்தோர் இருந்த இடத்திற்குச் சென்றார் என்னும் அர்த்தமுடைய கூற்று அல்ல. சிலர் இதற்கு இத்தகைய அர்த்தத்தைக் கொடுத்துள்ள போதிலும்,[81] பூமியின் கீழ், அல்லது பூமிக்குள் என்னும் அர்த்தங்களில் பவுல் இச்சொற்பிரயோகத்தை உபயோகிக்கவில்லை. யூதர்களின் மொழிவழக்கில் "பூமியின் தாழ்விடங்கள்" என்பது தாயின் கருவறையை வர்ணிக்கும் முறையாக இருப்பதை சங்கீதம் 139:15-16 அறியத்தருகின்றது.[82] எனவே, சங்கீதத்தை மேற்கோளாகக் காண்பிக்கும் எபேசியர் 4:9லும் "பூமியின் தாழ்விடங்கள்" என்னும் சொற்பிரயோகம் இத்தகைய அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. உண்மையில், இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்ததைக் குறிப்பிடும் விவரணமாகவே எபேசியர் நிருபத்தில் இச்சொற்பிரயோகம் உள்ளது.[83] மேலும், இவ்வசனங்களில் பவுலின் தர்க்கமும் இத்தகைய அர்த்தத்துடனேயே உள்ளது. "ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?" என்றே பவுல் கூறுகிறார். இதன்படி, இயேசுகிறிஸ்து பூமியிலிருந்தே பரலோகத்திற்கு ஏறிச்சென்றுள்ளார். அவர் பாதாளத்திலிருந்து ஏறினார் என்று வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இயேசுகிறிஸ்து பூமியிலிருந்தே பரலோகத்திற்கு ஏறிச்சென்றுள்ளமையால், இதற்கும் முன்பு அவர் பூமிக்கு இறங்கியுள்ளார் என்பதையே பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.[84] இயேசுகிறிஸ்து எங்கிருந்து ஏறினாரோ, அங்கேயே அதற்கும் முன்பு இறங்கியுள்ளார் என்றே இவ்வசனம் கூறுகிறது. வேதாகமத்தின் ஏனைய பகுதிகளில் இயேசுகிறிஸ்துவின் இறங்குதலும் ஏறுதலும், பூமிக்கும் பரலோகத்துக்குமானதாகவே இருப்பதனால் (யோவா.1:51, 3:13, 6:51, 16:28, பிலி.2:6-11), இவ்வசனத்தை மாத்திரம் அவர் பாதாளத்திற்கு அல்லது நரகத்திற்குச் சென்றதாக வியாக்கியானம் செய்யமுடியாது.

இயேசுகிறிஸ்து உண்மையிலேயே பாதாளத்திற்குச் சென்றிருந்தால், உயிர்த்தெழுந்த பின்னர் 40 நாட்களாகத் தம்முடைய சீஷருடன்

[81] C.J.Ellicott, *Ephesians: A Critical and Gramatical Commentary*, p. 85; E.F.Scott, *Ephesians: The Moffatt New Testament Commentary*, pp. 208-209; F.W.Beare, *Ephesians: The Interpreter's Bible Volume 10*, p. 689.
[82] D.Kidner, *Psalms 73-150: Tyndale Old Testament Commentary*, p. 466.
[83] P.T.O'Brien, *Ephesians: The Pillar New Testament Commentary,* p. 294;
[84] A.S.Wood, *Ephesians: The Expositor's Bible Commentary Volume 11*, p. 57.

இருந்த காலத்தில் அவர் இதைப்பற்றி நிச்சயமாக அவர்களுக்கு கூறியிருப்பார். சீஷர்களும் இதைப்பற்றி வேதாகமத்தில் நேரடியாக எழுதியிருப்பார்கள். இயேசுகிறிஸ்துவின், பிறப்பு, ஊழியம், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் என்பவற்றைப்பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ள வேதத்தில் அவர் பாதாளத்திற்கோ அல்லது நரகத் திற்கோ சென்றதைப்பற்றி நிச்சயம் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக் கும். ஆனால் இதைப்பற்றி எதுவும் வேதாகமத்தில் எழுதப்படவில்லை. 1பேதுரு 3:18-20, எபேசியர் 4:8-10 போன்ற வேதப்பகுதிகளும் இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்று அங்கிருந்தோரை விடுவித்தார் என்று கூறவில்லை.

**மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயேசுகிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார் என்பது வேதாகமம் போதிக்கும் உபதேசம் அல்ல.**

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் பாதாளத்திற்குச் சென்றார் என்பது வேதாகம த்தை அடிப்படையாகக் கொண்ட உபதேசம் அல்ல. ஆதிச் சபையில் இப்படிப்பட்ட ஒரு உபதேசம் இருக்கவில்லை. உண்மையில், கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயே (கி.பி.390ல்) கிறிஸ்தவ சபை யின் விசுவாசப்பிரமாணத்தில் "இயேசுகிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார்" என்னும் வாக்கியம் முதற்தடவையாகச் சேர்த்துக் கொள் ளப்பட்டது. எனினும், "இயேசுகிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டார்" என்னும் அர்த்தத்திலேயே இவ்வாக்கியம் அக்காலத்தில் விசுவாசப்பிர மாணத்தில் சேர்க்கப்பட்டது. அதன் பின்னர் கி.பி.650 வரை இவ்வாக் கியம் விசுவாசப்பிரமாணத்தில் இருக்கவில்லை. மேலும், ஆரம்பத் தில், இயேசுகிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார் என்னும் அர்த்தத்தி லேயே பாதாளத்திற்குச் சென்றார் என்னும் வாக்கியம் இருந்ததினால், அக்காலத்தின் விசுவாசப்பிரமாணப் பிரதிகளில் அடக்கம் பண்ணப்பட் டார் என்னும் வாக்கியம் இருக்கவில்லை. ஆனால், பிற்காலத்தில், அடக்கம் பண்ணப்பட்டார் என்னும் வாக்கியம் இருந்த பிரதிகளிலும், பாதாளத்திற்குச் சென்றார் என்னும் வாக்கியம் சேர்த்துக்கொள்ளப்பட் டதினால், இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும்

இடைப்பட்ட காலத்தில் நடந்த ஒரு சம்பவமாக இவ்வாக்கியத்தைச் சபை விளக்கத் தொடங்கியது. எனவே, இயேசுகிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார் என்பது, கிறிஸ்தவ சபையின் விசுவாசப்பிரமாணத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு உபதேசமாக இருக்கின்றதே தவிர, வேதவசனங்களிலிருந்து உருவான போதனையாக இல்லை.[85] பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளின் விசுவாசப்பிரமாணங்களில் இவ்வுபதேசம் இருப்பதனால், தற்கால கிறிஸ்தவ உலகிலும் இத்தவறான கருத்து பிரபலமடைந்துள்ளது.

## 3. பரதீசும் பரலோகமும்

இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் சரீரம் மண்ணுக்கும், அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி (ஆவியும் ஆத்துமாவும்) பரலோகத்திற்கும் செல்கின்றன என்று வேதாகமம் தெளிவாகக் காண்பித்தாலும், இவ்வேதாகமச் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாகச் சில கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை, மரித்தோரின் ஆவிக்குரிய பகுதி பரலோகத்திற்கு அல்ல, "பரதீசு" என்னும் இடத்திற்கே செல்கின்றது. இதற்குக் காரணம், பரலோகமும் பரதீசும் வெவ்வேறான இடங்கள் என்னும் தவறான எண்ணமேயாகும். யூதர்கள் பரலோகத்திற்கு கொடுத்திருந்த இன்னுமொரு பெயரே பரதீசு என்பதை அறியாததினால் உருவான ஒரு தவறான கருத்தாகவே இது உள்ளது. "பரதீசு" என்னும் சொல், "மதிலுள்ள தோட்டம்" என்று பாரசீக மொழியில் அர்த்தந்தரும் சொல்லிலிருந்து கிரேக்கத்திற்குள் வந்த "பரடீய்ஸ்சொஸ்" (*paradeisos*) என்னும் சொல்லின் தமிழ் வடிவமாகும்.[86] கிரேக்க மொழியில் இது "மணங்கவர் தோட்டம் அல்லது பூங்கா" என்னும் அர்த்தமுடையது. இத்தகைய அர்த்தத்துடனேயே பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இச்சொல் தேவனுடைய தோட்டமான ஏதேனைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது.[87] இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில், மரணத்தின்பின் நீதிமான்கள்

---

[85] W.Grudem, "He Did Not Descend Into Hell: A Plea for Following Scripture Instead of the Apostles' Creed" pp. 103-113.

[86] E.Robinson, *Greek and English Lexicon of the New Testament*, p. 547.

[87] C.Brown, *The New International Dictionary of NT Theology Vol 2*, p. 760-71.

செல்லும் இடத்திற்கு அல்லது தேவன் இருக்கும் இடத்திற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது.[88] இதனால், யூதரின் நூல்களில் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் ஆசீர்வாதமான நிலையை, குறிப்பாகப் பரலோகத்தைக் குறிப்பிட பரதீசு என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டது.[89]

யூதர்களுடைய நூல்களில் பரலோகத்தைக் குறிப்பிடும் சொல்லாகவே பரதீசு உள்ளது.

புதிய ஏற்பாட்டில் மூன்று தடவைகள் மாத்திரம் இடம்பெறும் பரதீசு "மரணத்தின்பின் நீதிமான்கள் செல்லும் பரலோக வீடாக உள்ளது."[90] சிலுவையில் அறையப்பட்ட கள்ளனிடம் இயேசுகிறிஸ்து, "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" (லூக்.23:43) என்று கூறினார். இதனால், அக்கள்ளன் மரித்த உடனேயே பரதீசுக்குச் சென்றுள்ளான் என்பது தெளிவாகின்றது. அதேசமயம், இயேசுகிறிஸ்து மரிக்கும் போது, தம்முடைய ஆவியைப் பிதாவிடமே ஒப்புவித்தார் (லூக்.23:46). பிதாவாகிய தேவன் பரலோகத்தில் இருப்பதனால், கள்ளன் சென்ற பரதீசும், இயேசுகிறிஸ்துவின் ஆவி சென்ற பரலோகமும் ஒரே இடமாகவே உள்ளது. இதனால் பரதீசும் பரலோகமும் ஒரே இடத்தையே குறிக்கின்றன என்பது தெளிவாகின்றது.

மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து, "என்னைத் தொடாதே. நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" (யோவா.20:17) என்று மகதலேனா மரியாளிடம் கூறியதினால்,

---

88 *1 Enoch*. 40:7-8, 40:23, 60:7, 60:23, 70:4, *2 Enoch*. 9:1, 42:3, *Apocalypse of Abraham*. 21:6-7, *Testament of Abraham*. 20:14, *Apocalypse of Moses*. 37:5, 40:2. ஆதியாகமம் 2ம் 3ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேன் தோட்டம், ஆதாமினுடைய பாவத்திற்குப் பின்னர் பூமியின் ஓரத்தில், அல்லது உயர்ந்த ஒரு மலையில் அல்லது பரலோகத்தில் ஒளித்துவைக்கப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது இது மூன்றாம் வானத்தில் இருப்பதாகவும் பிற்கால யூதர்கள் கருதினார்கள் (*Apocalypse of Moses*. 37:5). ஆனால், இத்தகைய விளக்கங்களுக்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாதிருப்பதனால், இது யூதர்களின் கற்பனையாக மாத்திரமே உள்ளது.

89 W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 593; G.Kittel & G.Friedrich, *Theological Dictionary of the New Testament Volume One*, pp. 657-658.

90 D.Prime, *Let's Study 2Corinthians*, p. 120.

மரணத்தின் பின்னர் அவர் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்றும், இதனால் பரதீசும் பரலோகமும் வெவ்வேறான இடங்கள் என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால் இவர்கள், “பிதாவினிடத்திற்கு ஏறிப்போ கவில்லை” என்னும் சொற்பிரயோகம் மூலமொழியில் இலக்கணரீதி யாக எவ்வாறு உள்ளது என்பதை அறியாததினாலேயே இத்தகைய எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர்.[91] உண்மையில், சரீரப்பிரகார மாக இவ்வுலகத்தை விட்டுப் பரலோகத்திற்குச் செல்வதைப்பற்றியே இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து மரியாளிடம் கூறியுள்ளார்.[92] மரணத் தின்பின் அவரது ஆவி பரலோகத்திற்குச் சென்றபோதிலும் (லூக். 23:46), அவருடைய சரீரம் பூமியில் உள்ள ஒரு கல்லறையிலேயே இருந்தது (லூக்.23:52-53). இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த் தெழுந்து, அதாவது பிதாவிடம் ஒப்புவிக்கப்பட்ட அவருடைய ஆவி மறுபடியுமாக கல்லறைக்குள் இருந்த அவருடைய சரீரத்துடன் சேர்க்கப் பட்டு மகிமையடைந்த சரீரத்துடன், நாற்பது நாட்கள் அவர் இவ்வுல கத்தில் இருந்தார். அதன்பின்பே அவர் சரீரப்பிரகாரமாகப் பரலோகத்திற் குச் சென்றார் (லூக்.24:51, அப்.1:9). இதைப்பற்றியே இயேசுகிறிஸ்து மரியாளிடம் கூறுவதனால், மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயேசுகிறிஸ்துவின் ஆவி பிதாவிடம் பரலோ கத்தில் இருந்ததை மறுதலிக்கும் விதத்தில் அவருடைய கூற்று இல்லை.[93] இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது தம்முடைய

---

[91] மூலமொழியில் perfect tens இல் உள்ளது.

[92] L.Morris, *John: The New International Commentary on the NT*, p. 742.

[93] இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து தன்னைத் தொடவேண்டாம் என்று மரியா ளிடம் கூறியது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால், ஏனைய பெண்கள் அன்றையதினம் இயேசுகிறிஸ்துவின் பாதங்களைத் தொட்டு அவரை வழிபட்டனர் (மத்.28:9). மேலும் தாம் உயிர்த்தெழுந்ததை நம்ப மறுத்த தோமாவிடம், தம்மைத் தொட்டுப்பார்க்கும்படியும் இயேசுகிறிஸ்து கூறினார் (யோவா.20:27). யோவான் 20:17ல் “தொடாதே” என்னும் வார்த்தை மூலமொழியில், “என்னைத் தொட்டுக் கொண்டிராதே” என்று அர்த்தம் தரும் விதத்தில் “நிகழ்காலத் தொடரில்” உள்ளது. எனவே, மரியாள் ஏற் கனவே செய்து கொண்டிருந்த காரியத்தை நிறுத்தும்படியான கட்டளையா கவே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் உள்ளன. மேலும், “தொடாதே” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில், “பற்றிப் பிடித்துக் கொண்டிராதே” என்னும் அர்த்தமுடையது. மத்தேயுவின் சுவிசேஷத் தில் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தரிசித்த பெண்கள் அவருடைய பாதங்களைத் தழுவி அவரை வழிபட்டமையால் (மத்.28:9), மரியாளும், இயேசுகிறிஸ்துவின் பாதங்களையே பற்றிப்பிடித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அக்காலத்தின் கலாசாரத்தைக் கருத்திற்கொள்ளும்போது, மரியாள் இயேசுகிறிஸ்துவின் பாதங்களைத்தான் பிடித்திருக்க முடியும். மரியாளின்

ஆவியைப் பிதாவிடம் ஒப்புக்கொடுத்ததினால், அவருடைய ஆவி பிதாவிடம் பரலோகத்திலேயே இருந்தது. அக்காலத்தில் யூதர்கள் பரலோகத்தைப் "பரதீசு" என்றே அழைத்ததினால், சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் தம்முடன் பரலோகத்தில் இருப்பான் என்பதை அறியத்தருவதற்காக "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

பரதீசும் பரலோகமும் ஒரே இடம் என்பதைப் பவுல் மூன்றாம் வானம் வரைக்கும் சென்ற அனுபவமும் உறுதிப்படுத்துகிறது.[94] 2கொரிந்தியர் 12:2-3ல், தான் மூன்றாம் வானம் வரைக்கும் சென்றதைப் பவுல் பரதீசுக்குள் சென்றதாகவே குறிப்பிட்டுள்ளார்.[95] இவ்விரு வசனங்களிலும்,

---

செயலானது, அவளுடைய மனநிலையைப் பிரதிபலிக்கும் செய லாக உள்ளது. கல்லறையில் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் காணாமல் தவித்த அவளுக்கு (யோவா.20:1-2,11-13), திடீரென்று இயேசுகிறிஸ்து தரிசனம் அளித்து பேசியபோது (யோவா.20:14-15) அவர் மறுபடியும் எங்கும் காணாமல் போய்விடக்கூடாது என்பதற்காக அவரது பாதங்களை அவள் பற்றிப் பிடித்துக்கொண்டாள். இயேசுகிறிஸ்துவை மறுபடியும் இழந்துவிடக் கூடாது என்னும் எண்ணத்திலேயே அவள் இவ்வாறு செய்தாள். இயேசுகிறிஸ்து நிரந்தரமாகப் பரலோகத்தில் இருப்பதற்காகச் செல்வதற்கு இன்னும் நாற்பது நாட்கள் இருந்ததினால், "நான் இன்னும் பரலோகத்திற்குப் போகவில்லை. எனவே நான் எங்கும் போய்விடாதபடி இப்படி என்னைப் பிடித்துக் கொண்டிராதே" என்றே அவர் மரியாளிடம் கூறினார். மேலும், இயேசுகிறிஸ்து இன்னும் சிறிது காலம் மட்டுமே சரீரப்பிரகாரமாக உலகில் இருக்கப் போவதனால், தாம் உயிர்த்தெழுந்ததைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி மரியாளை அனுப்புவதற்காகத் தம்மைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று அவர் கூறினார் (D.A.Carson, *John: The Pillar NT Commentary*, p. 644. L.Morris, *John: New International Commentary on the NT*, p. 742; C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, pp. 378-379).

[94] L.Berkhof, *Systematic Theology*, p. 679.

[95] இவ்வசனங்களில் பவுல் தான் மூன்றாம் வானத்துக்குச் சென்றதாக நேரடியாகக் குறிப்பிடாமல், கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனிதன் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளதினால், பவுல் தன்னுடைய அனுபவத்தை எழுதவில்லை என்று சிலர் கருதுகின்றனர் (M.Smith, "Ascent to the Heavens and the Beginning of Christianity" pp. 403-429; M.Goulder, "Vision and Knowledge" pp. 53-71). ஆனால், 1ம், 5ம், 7ம், வசனங்களில் பவுல் தன்னைப்பற்றியே எழுதுவதனால், 2ம் 3ம் வசனங்களில் தான் பரலோகத்துக்குச் சென்று வந்ததையே அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார் (D.E.Garland, *2 Corinthians: The New American Commentary*, p. 510; C.Kruse, *2 Corinthians: Tyndale New Testament Commentary*, p.201). தான் சரீரத்திலா அல்லது ஆவியிலா சென்றேன் என் பதைப்பற்றி பவுல் நிச்சயமற்றவராக இருந்ததினாலும் (J.D.G.Dunn, *Jesus and the Spirit*, pp. 214-215; M.E. Thrall, "Paul's Journey to Paradise: Some Exegetical Issues in 2 Cor.12:2-4" pp. 352-353), தன்னைக்குறித்து பெருமை பாராட்டாமல் இருப்பதற்காகவும் பவுல் இவ்வாறு எழுதியுள்ளார்.

பவுல் பரலோகத் தரிசனங்களை அக்கால யூதர்கள் குறிப்பிடும் வழக்கத்தின்படி மறைமுகமாக எழுதியுள்ளார்.[96] மேலும், இவ்விரு வசனங்களிலும் மூன்றாம் வானத்தையும், பரதீசையும் பவுல் ஒத்தக்க ருத்துள்ள சொற்களாகவே உபயோகித்துள்ளார்.[97] அக்கால யூதர்களு டைய நூல்களிலும் பரதீசு மூன்றாம் வானத்தில் இருப்பதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[98] மேலும், இவ்வசனங்களில் வானம் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் பரலோகம் என்றே உள்ளது. இதனால் ஆங்கில வேதாகமங்களில் வானம் என்னும் அர்த்தத்தில் sky என்றல்ல, பரலோகம் என்னும் அர்த்தத்தில் heaven என்றே இதை மொழிபெயர்த்துள்ளனர். யூதர்கள் பரலோகத்தை மூன்றாகப் பிரித்திருந்தனர்.[99] இதில் மூன்றாவது ஏனையவற்றைவிட உயர்வானதாகவும், தேவன் இருக்கும் இடமாகவும் கருதப்பட்டது.[100] எனவே, மூன்றாம் வானத்திற்குச் சென்ற பவுல் தேவன் இருக்கும் இடத்திற்கே சென்றுள்ளார். இதை அவர் பரதீசு என்றும் குறிப்பிட்டுள்ள தினால், இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் பரதீசுக்குச் செல்கிறார் கள் என்று கூறும்போது, அவர்கள் பரலோகத்திற்கே செல்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

புதிய ஏற்பாட்டில் பரதீசு என்னும் வார்த்தை வெளிப்படுத்தல் 2:7லும் உள்ளது. இவ்வசனத்தில் ஜீவவிருட்சம் தேவனுடைய பரதீசின் மத்தியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வெளிப்படுத் தல் 22:2லும், 22:14லும் ஜீவவிருட்சம் பரலோகத்தில் இருப்பதாகவே

---

[96] அக்காலத்தில் பலர் தாங்கள் பரலோகத்திற்குச் சென்று வந்ததாக அறிவித்து வந்ததினால், "நான் பரலோகத்துக்குச் சென்றேன் என்று ஒருவர் கூறுவதை மக்கள் உண்மை என்று நம்புவதில்லை. இதனால், பரலோகத்துக்குச் சென்று வந்த தரிசனங்களைப்பற்றி எழுதும்போது அதை நேரடியாகக் குறிப்பிடாமல், பவுல் இங்கு எழுதுகின்றவிதமாகக் குறிப்பிடுவதே அக்கால வழக்கமாக இருந்தது. யூதமதப் போதகர்களும் தரிசனங்களை இவ்வாறு குறிப்பிடும்படியே மக்களுக்குக் கட்டளையிட்டிருந்தனர் (D.E.Garland, *2 Corinthians: The New American Commentary*, pp. 510-511).

[97] J.M.Scott, *2Corinthians: New International Biblical Commentary*, p. 224.

[98] *2 Enoch*, 8:1; *Apocalypse of Moses*, 37:5; *3 Apocalypse of Baruch*, 4:8.

[99] இது 1ராஜாக்கள் 8:27ஐ அடிப்படையாகக் கொண்ட பிரிவாகக் கருதப்படுகி றது (*Testament of Levi*, 2:7-10, 3:1-4).

[100] பூமியின் மேற்பரப்பில் இருக்கும் மேகமண்டலம் முதலாவது வானம் என்றும், நட்சத்திரங்களும் கிரகங்களும் இருக்கும் அண்டவெளியை இரண்டா வது வானம் என்றும், இவற்றிற்கும் அப்பால் இருப்பதை மூன்றாவது வானமாகவும் தேவனுடைய வாசஸ்தலமாகவும் யூதர்கள் கருதினார்கள்.

சித்தரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பரதீசும் பரலோகமும் ஒன்றையே குறிக்கின்றன என்பதை அறிந்துகொள்கின்றோம். ஆதியாகமம் 2ம் 3ம் அதிகாரங்களில் உள்ள "ஜீவ விருட்சம்" உலகின் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் ஆரம்பத்தில் வாழ்ந்த ஏதேன் தோட்டத்தில் இருந்த ஒரு மரமாகும். இதன் கனி, மனிதருக்கு நித்திய காலம் வாழக்கூடிய ஆற்றலைக் கொடுக்கும் சக்திமிக்கதாக இருந்தது. இதனால்தான், ஆதாமும் ஏவாளும் தேவகட்டளையை மீறிப் பாவம் செய்த பின்னர், அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் மரியாமல் இருக்கக்கூடிய ஆற்றலைப் பெற்று விடக்கூடாது என்பதற்காக அம்மரத்தின் கனியை அவர்கள் சாப்பிடா திருப்பதற்காகத் தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டதோடு, அம்மரத்தை எவரும் அணுகமுடியாதவாறு அதற் குக் காவலும் போட்டார் (ஆதி.3:22-24).[101] நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் முழு உலகமும் அழிந்ததினால், ஜீவவிருட்ச மும் அது இருந்த ஏதேன் தோட்டமும் அழிந்துவிட்டது. வெளிப்படுத் தல் புத்தகம் யோவானுக்குக் காண்பிக்கப்பட்ட தரிசனங்களாக இருப்பதனால், இதில் பெரும்பாலான காரியங்கள் அடையாளங்களா கவே உள்ளன. இதனால், வெளிப்படுத்தலில் ஜீவவிருட்சமும் ஒரு அடையாளமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, பரலோகத்தில் மனிதர்கள் நித்திய காலம் வாழ்கிறவர்களாக இருப்பார்கள் என்பதை அறியத்தரும் அடையாளமாகவே வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஜீவவிருட்சம் சித்தரிக்கப்பட்டுள்ளது.[102]

---

வெளிப்படுத்தல் 2:7ல், "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனி புசிக்கக் கொடுக்கப்

[101] ஆதியாகமம் 3:22-24ல் "பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[102] நீதிமொழிகள் 3:18, 11:30, 13:12, 15:4 என்னும் வசனங்களிலும் ஜீவவிருட்சம் உருவகமாக சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

படும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "ஜெயங்கொள்பவர்கள் யார்?" என்பதை யோவான் தன்னுடைய முதலாவது நிருபத்தில் அறியத் தந்துள்ளார். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' என்று கூறும் யோவான், "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?" என்று கேட்கின்றார் (1யோவா.5:4-5). எனவே, "மெய்க்கிறிஸ்தவர்கள், அதாவது, இயேசுகிறிஸ்து யார் என்பதை சரியான விதத்தில் அறிந்து அவரை விசுவாசிப்பவர்களே, தேவனால் பிறந்தவர்களாகவும் (யோவா.1:12, 20:31), உலகத்தை ஜெயிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர்.''[103] உண்மையில், இத்தகைய மக்களுக்கே மரணத்தின்பின் பரலோகத்தில் நித்தியகாலம் வாழக்கூடிய ஆசீர்வாதம் கிடைக்கும். இதனால் இவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தாலும், இயேசுகிறிஸ்துவுடன் பரலோகத்தில் நித்திய காலமாக வாழ்வார்கள்.

**பரதீசும் பரலோகமும் வெவ்வேறானவை என்னும் கருத்து, பாரம்பரிய சபைகளின் உபதேசத்தில் இருந்தே ஏனைய சபைகளுக்குள் வந்துள்ளது.**

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் ஆவிக்குரிய பகுதி செல்லும் இடத்தைக் குறிப்பிடும் பரதீசு என்னும் சொல் இடம்பெறும் மூன்று பகுதிகளும், "தேவனுடைய இருப்பிடமாகவும், மீட்கப்பட்டவர்கள் நித்தியகாலமாகக் குடியிருக்கும் பரலோகமாகவும் இருப்பதை அறியத்தருகின்றன.''[104] உண்மையில், பரதீசும் பரலோகமும் வெவ்வேறானவை என்னும் கருத்து, பாரம்பரிய சபைகளின் உபதேசத்திலிருந்தே ஏனைய சபைகளுக்குள் வந்துள்ளது. உதாரணத்திற்குப் பாரம்பரிய கத்தோலிக்க சபையின் உபதேசத்தின்படி, மரணமடையும் மனிதரின் ஆவிக்குரியபகுதி உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்வதில்லை. அவை சுத்திகரிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்லும் தகுதியைப் பெறும்வரை "உத்தரிப்பு ஸ்தலத்தில்'' (purgatory) இருக்கும்.[105] வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத

[103] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 59.
[104] A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume 6*, p. 301.
[105] G.Brantl, ed., *Catholicism*, p. 232; *Catechism of the Catholic Church*, p. 291

யூதர்களுடைய நூல்களில் ஒன்றான 2மக்காபியர் 12:42-45ஐ அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இவ்வுபதேசம் வேதாகம சத்தியத்திற்கு முரணான போதனையாகவே உள்ளது.[106] மரணத்தின் பின் சுத்திகரிக்கப்படுவதற்காக ஆத்துமா செல்லுமிடத்தைப்பற்றி வேதாகமம் எதுவும் கூறவில்லை. மரணத்தின்பின் பக்தர்கள் உடனடியாகப் பரலோகத்துக்குச் செல்வதாகவே வேதாகமம் கூறுகிறது (பிர.12:7, பிலி.1:23, 2கொரி.5:8).[107] மேலும், மனிதர் உயிரோடிருக்கும் போது, இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசிப்பதே, அவர்கள் பாவம் நீக்கப்பட்டு பரலோகத்துக்குச் செல்வதற்கான ஒரேயொரு வழியாக இருப்பதனால், அவர்கள் பரலோகத்துக்குச் செல்வதற்காக மரணத்தின்பின் சுத்திகரிக்கப்படவேண்டியதில்லை.[108] "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (அதாவது

---

[106] கத்தோலிக்க சபை தனது உத்தரிப்புஸ்தல உபதேசத்திற்கு ஆதாரமாக சில வேதவசனங்களையும் உபயோகித்து வருகின்றது. ஆனால் இவ்வசனங்கள் கத்தோலிக்க சபையின் உத்தரிப்பு ஸ்தலத்தைப் பற்றி எதுவும் கூறுவில்லை. உத்தரிப்புஸ்தலம் சுத்திகரிக்கும் அக்கினியுள்ள இடம் என்று கூறும் கத்தோலிக்க சபை (*Catechism of the Catholic Church*, p. 291), மரணத்தின்பின் ஆத்துமா அக்கினியினாலும் வேதனையினாலும் சுத்திகரிக்கப்படும் என்னும் உபதேசத்திற்கு ஆதாரமாக 1கொரிந்தியர் 3:10-15ஐ உபயோகித்து வருகின்றது (L.Ott, *Fundamentals of Catholic Dogma*, p. 483). ஆனால், இவ்வசனங்கள் கிறிஸ்தவனுடைய செயல்கள் அக்கினியால் சுத்திகரிக்கப்படுவதைப்பற்றி கூறுகின்றனவே தவிர, கத்தோலிக்க சபையின் உபதேசத்தின்படி கிறிஸ்தவனுடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படுவதைப்பற்றி இவ்வசனங்கள் எதுவும் கூறவில்லை. கிறிஸ்தவனுடைய செயல்களுக்குப் பரலோகத்தில் பலன் கிடைப்பதையும் கிடைக்காமல் போவதையும் பற்றிய இப்பகுதியை, ஆத்துமா சுத்திகரிக்கப்பட்டு பரலோகம் செல்வதைப்பற்றிய குறிப்பாக மாற்றுவது வேதப் புரட்டாகவே உள்ளது. இதைப்போலவே மரணத்தின்பின் ஆத்துமா பாவத்திற்காகச் செலுத்த வேண்டியதைச் செலுத்தித் தீருமட்டும் உத்தரிப்பு ஸ்தலத்தில் சுத்திகரிக்கப்படும் என்பதற்கு ஆதாரமாகக் கத்தோலிக்கச் சபை மத்தேயு 5:26ஐயும் உபயோகிக்கின்றது (L.Ott, *Fundamentals of Catholic Dogma*, p. 484). ஆனால் இவ்வசனம் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை சிறையில் போடப்படும் மனிதனைப்பற்றி கூறுகிறதே தவிர, மரணத்தின் பின் ஆத்துமா செல்லும் இடத்தைப்பற்றி கூறவில்லை. இதைப் போலவே உத்தரிப்புஸ்தல உபதேசத்திற்குக் கத்தோலிக்கச் சபை உபயோகிக்கும் ஏனைய வேதவசனங்களும், அவற்றில் இல்லாததையெல்லாம் இருப்பதாகக் கூறும் வேதப்புரட்டாகவே உள்ளன.

[107] இதுபற்றிய மேலதிக விளக்கத்திற்கு இந்நூலின் 43-50 பக்கங்களைப் பார்க்கவும்.

[108] "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் "என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்" என்று இயேசுகிறிஸ்து யோவான் 14:6ல் கூறியுள்ளார்.

இயேசுகிறிஸ்து) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபி. 10:14). எனவே, பூரணப்படுவதற்காக நாம் மரணத்தின் பின்னர் எதுவும் செய்யவேண்டிய தில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்க ளையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதனால், நாம் மரணத்தின் பின்னர் சுத்திகரிக்கப்படுவதற்கு எவ்வித அவசியமும் இல்லை.[109] மேலும், மரணத்தின் பின்னர் மனிதர் தாங்கள் சென்ற இடத்திலிருந்து வேறிடத்திற்குச் செல்லமுடியாது என்பதை லாசருவை யும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் இயேசுகிறிஸ்து தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளதினால் (லூக்.16:24-26), மரணத்தின் பின் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் சென்ற ஆத்துமாக்கள் அங்கு சுத்திகரிக்கப்பட்டு பின்னர் பரலோகத்துக்குச் செல்லும் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை.[110]

## மரணத்தின்பின் பக்தர்கள் உடனடியாகப் பரலோகத்துக்குச் செல்வதாகவே வேதாகமம் கூறுகிறது

மரித்தவர்களின் ஆவிக்குரிய பகுதி உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்லாமல் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்கிறது என்னும் பாரம்ப ரிய சபைகளின் செல்வாக்கு காரணமாக, ஏனைய சபைகளும் வேதாகமத்தைக் கருத்திற்கொள்ளாத நிலையில், பாரம்பரிய சபை கள் உபயோகிக்கும் சில வேத வசனங்களை ஆதாரமாகக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் உடனடியாகப் பரலோகத்துக்குச் செல்வதில்லை என்றும், பரலோகமும் பரதீசும் வெவ்வேறான இடங் கள் என்றும் போதித்து வந்துள்ளன. நாம் சபைகளின் உபதேசங் களை ஆதாரமாகக் கொண்டல்ல, வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டே மரணத்தையும் அதன்பின்பான வாழ்வையும்பற்றி அறிந்து கொள்ளவேண்டும். வேதாகமத்தின்படி, பரலோகமே பரதீசு என்று

[109] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசிப்பதன் மூலம் மனிதர் நீதிமானாக்கப்படுகின்றனர் என்னும் வேதாகம சத்தியத்தை மறுதலிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு உபதேசமாகவே கத்தோலிக்க சபையின் உத்தரிப்பு ஸ்தலம் உள்ளது (J.F.MacArthur, *The Glory of Heaven*, p. 72).

[110] மனிதர்களுடைய தப்பிதங்களுக்காக அவர்கள் இவ்வுலகத்தில் வாழும் காலத்தில் சிட்சிக்கப்படுவதைப்பற்றி வேதாகமம் கூறினாலும், பரலோகம் செல்வதற்காக மரணத்தின்பின் அவர்கள் வாதிக்கப்படுவதைப்பற்றி வேதாகமம் போதிக்கவில்லை (H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 339).

அழைக்கப்பட்டுள்ளதோடு, இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் ஆவிக்குரிய பகுதி அவர் இருக்கும் பரலோகத்திற்கே செல்கின்றன என்பதையும் அறிந்து கொள்கின்றோம். "கிறிஸ்தவனுடைய வாழ்வில், மரணத்திற்கும் பரலோகத்திற்கும் இடையில் ஒரு இடம் இருப்பதாக வேதாகமம் போதிக்கவில்லை."[111] இதனால், "மரணத்தின் பின்னர் பரலோகத்திற்குச் செல்வதற்காக எவரும் எங்கும் காத்திருக்க வேண்டியதில்லை."[112] இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் உடினடி யாக அவரிடமே செல்கின்றனர் என்பதே வேதாகமம் நமக்கு அறியத் தரும் சத்தியமும் நற்செய்தியுமாகும்.

## மரணத்திற்கும் பரலோகத்திற்கும் இடையில் கிறிஸ்தவனுக்கு ஒரு இடம் இருப்பதாக வேதாகமம் கூறவில்லை

மரித்த பக்தர்களில் எவருமே இதுவரையில் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்று கூறுபவர்கள், தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாக யோவான் 3:13ஐயும், அப்போஸ்தலர் 2:34ஐயும் சுட்டிக் காட்டுவது வழக்கம். யோவான் 3:13ல், "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். ஆனால் 2ராஜாக்கள் 2:11ல், "எலியா சுழல் காற்றில் பரலோகத்திற்கு ஏறிப்போனான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இவ்வசனம் இயேசுகிறிஸ்துவின் கூற்றை முரண்படுத்துவதாக நாம் எண்ணலாம். ஆனால் மூலமொழியின்படி, "மறுபடியும் திரும்பிவரும் விதத்தில் எவரும் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதே இயேசுகிறிஸ்து வினுடைய கூற்றின் அர்த்தமாயுள்ளது."[113] அக்காலத்தில், பரலோகத் திற்குப் போய் வந்த பரிசுத்தவான்களைப் பற்றிய கதைகள் யூதர்கள் மத்தியில் பிரபலமடைந்திருந்தன.[114] அதேபோல, அக்கால கிரேக்கர் கள் மத்தியிலும், வேறு உலகங்களுக்குச் சென்று மக்களுக்கு தெய்வச் செய்திகளைக் கொண்டுவரும் நபர்களைப்பற்றிய கதைகள்

---

[111] D.Howard, *Sunsets: Reflections for Life's Final Journey*, p. 230.

[112] E.Donnelly, *Biblical Teaching on the Doctrines of Heaven and Hell*, p. 22.

[113] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 200.

[114] W.A.Meeks, *The Prophet-King: Moses Traditions and the Johannine Christology*, pp. 110-111, 192-195, 235-236.

இருந்தன.[115] இதனால், இவ்விதமாக எவரும் பரலோகத்திற்குப் போய் வரவில்லை என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் கூறுகிறார். உண்மையில், தாம் மட்டுமே பரலோகத்திலிருந்து வந்துள்ளதினால், தம்மால் மாத்திரமே பரலோக காரியங்களை மக்களுக்கு வெளிப்படுத் தமுடியும் என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள் ளார். யோவான் 1:18, 14:9, 17:6, எபிரேயர் 1:1 போன்ற வசனங்களி லும் இதைப்பற்றி நாம் வாசிக்கலாம். எனவே, மரணமடைந்த பக் தர்கள் எவருமே இதுவரையில் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பது யோவான் 3:13ன் அர்த்தம் அல்ல.[116]

அப்போஸ்தலர் 2:34ல், “தாவீது பரலோகத்துக்கு எழுந்துபோகவில் லையே” என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். எனினும், இயேசுகிறிஸ்து வின் சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலைப்பற்றி விளக்கும்போதே பேதுரு இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம் (அப்.2:24-36). இதனால், மரித்த இயேசுகிறி ஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்து பரலோகத்துக்குச் சென்றார் என்பதைச் சுட்டிக்காட்டும் பேதுரு, தாவீது இவ்விதமாக உயிர்த்தெ ழுந்து பரலோகத்துக்குச் செல்லவில்லை என்று அப்போஸ்தலர் 2:34ல் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், தாவீது மரித்தபோது அவனு டைய ஆவிக்குரிய பகுதியே தேவனிடம் சென்றது. அவனுடைய சரீரம் பேதுருவினுடைய காலத்திலும் எருசலேம் நகரத்திலுள்ள கல்லறைக்குள்ளேயே இருந்தது. ஆனால், இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் பின் கல்லறைக்குள் வைக்கப்பட்ட அவருடைய சரீரமும், பிதாவிடம் ஒப்புவிக்கப்பட்ட அவருடைய ஆவியும் மறுபடியும் ஒன்றா கச் சேர்க்கப்பட்டு அவர் சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தது மட்டும ல்ல, 40 நாட்களின் பின்னர், உயிர்த்தெழுந்த மகிமையின் சரீரத்துடன் பரலோகத்துக்குச் சென்றார். சங்கீதப் புத்தகத்தில் தாவீதினுடைய உயிர்த்தெழுதலைப்பற்றியல்ல, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுத லைப்பற்றியே முன்னறிவிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கும்போதே, தாவீது சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் செல்ல

---

[115] G.L.Borchert, *John 1-11: New American Commentary*, pp. 18-181.

[116] மறுரூபமலையில் இயேசுகிறிஸ்துவுடன் மோசேயும் எலியாவும் பேசிக் கொண்டிருந்தபோது, பரலோகத்திற்குச் சென்ற இருவர் திரும்பி வந்துள்ள போதிலும் (லூக்.9:30), இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுடன் உரையாடிய காலம்வரை எவரும் இவ்விதமாக பரலோகத்தில் இருந்து பூமிக்கு வந்திருக் கவில்லை.

வில்லை என்பதைப் பேதுரு சுட்டிக்காட்டியுள்ளார் (அப்.2:29-36). தாவீதினுடைய ஆவிக்குரிய பகுதி, தேவனிடம் இருப்பதை இவ்வசனம் எவ்விதத்திலும் மறுதலிக்கவில்லை. பழைய ஏற்பாட்டுப் பக்தர்களினதும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களினதும் ஆவிகள் தற்பொழுது பரலோகத்தில் இயேசுகிறிஸ்துவிடம் இருக்கின்றன என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும்.



# 4. நியாயத்தீர்ப்பும் பரலோகமும்

இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் உடனடியாக அவர் இருக்கும் பரலோகத்திற்கே செல்கின்றனர் என்று வேதாகமம் கூறினாலும், இறுதி நியாயத்தீர்ப்பு வரை எவருமே பரலோகத்திற்குச் செல்லமாட்டார்கள் என்று சில கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர். மரணத்தின் பின் மனிதருக்கு நியாயத்தீர்ப்பு இருப்பதை வேதாகமம் அறியத்தருகின்றபோதிலும் (எபி.9:27),[117] இது, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் பின்பு நடைபெறும் சம்பவமாகவே உள்ளது.[118] இயேசுகிறிஸ்துவின் மறுவருகையானது அவர் தம்முடைய சபையின் விசுவாசிகளை உலகிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக ஆகாயத்தில் வருவதோடு ஆரம்பமாகும். அச்சமயம் இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு (அதாவது, அவரிடத்தில் இருக்கும் மனிதரின் ஆவிக்குரிய பகுதி, மண்ணுக்குச் சென்ற அவர்களுடைய சரீரத்துடன்

---

117 "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக எபிரேயர் 9:27 கூறுகிறது.

118 புதிய ஏற்பாடானது இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைப் பற்றி அறியத்தரும் நான்கு சுவிசேஷப் புத்தகங்களுடன் ஆரம்பமாகி, அவரது இரண்டாவது வருகையைப்பற்றி முன்னறிவிக்கும் புத்தகத்தோடு நிறைவு பெறுகிறது. இறைவனாகிய இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தபோது, தான் மறுபடியும் வருவதைப்பற்றி முன்னறிவித்தார் (மத்.24:27, 30, 37, 39, 42, 44, 25:31, 26:64, மாற்.13:26, லூக்.21:27, யோவா.14:3). அவர் இவ்வுலகை விட்டுச்செல்லும்போது, அவர் மறுபடியும் வருவதைப்பற்றிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது (அப்.1:11). இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்பது வேதத்தின் மிகத்தெளிவான போதனையாயுள்ளது. புதிய ஏற்பாட்டில் 300ற்கும் அதிகமான தடவைகள் இயேசுவின் மறுவருகையும் அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களும் முன்னறிவிக்கப்பட்டுள்ளன.

மறுபடியுமாக சேர்ந்து, மரித்தோர் மகிமையின் சரீரத்தைப் பெற்று),[119] உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் மக்களோடு சேர்க்கப்படுவார்கள். 1கொரிந்தியர் 15:51-52லும், 1தெசலோனிக்கேயர் 4:13-18லும் முன்னறிவிக்கப்பட்டுள்ள இச்சம்பவம் வெளிப்படுத்தல் 4ம் 5ம் அதிகாரங்களில் உள்ள தரிசனத்தில் விளக்கப்பட்டுள்ளது. இத்தரிசனத்தில், உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் கிறிஸ்தவ சபை மக்களும், மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படும் கிறிஸ்தவர்களும் நியாயந்தீர்க்கப்பட்டு வெற்றியாளர்களாக தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி அமர்ந்திருக்கும் 24 மூப்பர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர் (வெளி. 4:4). இவர்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாக இருப்பதனால்தான், இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலே தங்களை மீட்டுக்கொண்டதாக இவர்கள் பாடினார்கள் (வெளி.5:8-10).[120] வெளிப்படுத்தல் 4:1ல் "இவைகளுக்

---

[119] மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி இவ்வத்தியாயத்தின் அடுத்த பகுதியில் ஆராயப்பட்டுள்ளது.

[120] சிலர் இம்மூப்பர்களைப் பரலோகத்திலிருக்கும் தேவதூதர்களாகக் கருதுகின்றனர் (A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary Volume 12*, pp. 462-463, 470; R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, pp. 348) ஆனால், மூப்பர்கள் அணிந்திருக்கும் வெண்வஸ்திரம் வெளிப்படுத்தல் புத்தகத்தில் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கான ஆடையாகவும் (வெளி.3:5, 3:18), பொன்முடி விசுவாசிகள் நியாயந்தீர்க்கப்பட்டு வெற்றியாளர்களாக இருப்பதையுமே உருவகிக்கின்றது (வெளி.3:5, 3:12, 3:21). இதனால், இவர்களைத் தேவதூதர்களாகக் கருதமுடியாது (J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, pp. 106-107; H.Alford, *The Greek New Testament Volume 4*, p. 596). மேலும், வெளிப்படுத்தல் 5ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இவர்கள் பாடிய பாடல் (வெளி.5:9-10), இவர்கள் தேவதூதர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றது (J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 117). இயேசுகிறிஸ்துவின் மூலமான மீட்பு தேவதூதர்களுக்கு இல்லை என்பதனால், தங்களை மீட்டுக்கொண்டதற்காக இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்திப் பாடும் பாடலை தூதர்களினால் பாட முடியாது. மேலும், இவ்வதிகாரத்தின் 11ம் 12ம் வசனங்களில் தூதர்கள் தேவனைத் துதித்துப் பாடுவதனால், 9ம் 10ம் வசனங்களில் தூதர்களின் பாடல் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தர்க்கிப்பது அர்த்தமற்றது. மூப்பர்கள் தூதர்கள் என்றால் அவர்களின் பாடலைத் தொடர்ந்து தூதர்களின் பாடலை மறுபடியுமாகக் குறிப்பிடவேண்டியதில்லை. அத்தோடு, "தூதர்களைக் குறிப்பிட மூப்பர்கள் என்னும் வார்த்தை பொருத்தமற்றதாகவே உள்ளது" (F.W.Grant, *The Revelation of Jesus Christ*, p. 33; F.J.Massyngberde, *Revelation: Anchor Bible Commentary*, p. 71. 1975). பழைய ஏற்பாட்டில் தூதர்கள் சூழ்ந்தி ருக்கும் விதத்தில் தேவன் பரலோக சிங்காசனத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது உண்மை என்றாலும் (1ராஜா.22:19, யோபு.1:6, 2:1) வெளிப்படுதலில் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதத்தில் தூதர்கள் சிங்காசனத்தில் வீற்றிருப்பதில்லை. ஏனென்றால் தேவனுடைய பிரசன்னத்தில் தூதர்கள்

குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகள்'' என்னும் சொற்பிரயோகம், "சபைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகள்'' என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. இதனால்தான், அதன் பின்னர் சபை பூமியிலிருப்பதாக வெளிப்படுத்தல் புத்தகத்தில் சித்தரிக்கப்படவில்லை. அதாவது, 2ம், 3ம் அதிகாரங்களில் பல தடவைகள் இடம்பெறும் சபை என்னும் சொல்லானது 4ம் அதிகாரத்திற்குப் பின்னர் இடம்பெறவில்லை.[121] ஏனெனில், இவ்வதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவங்கள் உலகில் நடைபெறும்போது சபை உலகத்தில் இருப்பதில்லை. உண்மையில், வெளிப்படுத்தல் புத்தகத்தில் 4ம் அதிகாரத்துக்குப் பின்னர் உள்ள அதிகாரங்களில் சபையானது உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் நடைபெறும் சம்பவங்களே முன்னறிவிக்கப்பட்டுள்ளன.

**தங்களுடைய செயல்களுக்கான பலனைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வாகவே கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இருக்கும்.**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சபை மக்களும், மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படும் இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் நியாயந்தீர்க்கப்

---

உட்கார்ந்திருப்பதாகச் சித்தரிப்பது யூதர்களின் வழக்கம் அல்ல. எனவே வெளிப்படுத்தல் புத்தகத்தில் தூதர்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக உட்கார்ந்திருப்பதாகக் கூறமுடியாது. வெளிப்படுத்தல் 5:11, 7:11 போன்ற வசனங்களில் தூதர்களும் மூப்பர்களும் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் மூப்பர்கள் தேவதூதர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தல் 7:13-14, 14:3, போன்ற வசனங்களில் மூப்பர்களும் மீட்கப்பட்ட மக்களும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதாகவும், இதனால் மூப்பர்கள் மீட்கப்பட்ட மக்கள் அல்ல தூதர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் சுட்டிக்காட்டுவது போல இவ்வசனங்களில் மூப்பர்களும் மீட்கப்பட்டவர்களும் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையென்றாலும், இங்கு மீட்கப்பட்டவர்கள் உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்தல் 7:9-17 அறியத்தருகிறது. எனவே, இவர்கள் உபத்திரவக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் அல்ல. ஆனால் 24 மூப்பர்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாவர்.

[121] புத்தகத்தின் இறுதியில் சபை என்னும் வார்த்தை உள்ளபோதிலும், இது புத்தகத்தின் முடிவுரையாகவும், புத்தக விஷயங்கள் தற்காலத்தில் இருக்கும் சபைகளுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்னும் கட்டளையாகவுமே உள்ளது.

படுவது உண்மை என்றாலும், இது கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்வைப்பற்றி தேவனுக்கு கணக்கொப்புவிக்கும் நிகழ்வாகவே இருக்கும்.[122] அச்சமயம் அவர்கள் உலகில் வாழ்ந்த காலத்தில் செய்த செயல்களுக்கான பலனைப் பெறுவார்கள். வேதாகமம் இதைப்பற்றி கூறும்போது, "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10, ரோ.14:10) என்று குறிப்பிட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்வில் செய்த செயல்களுக்கான பலனைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வாகவே இந்நியாயத்தீர்ப்பு இருப்பதனால்,[123] இவ்வசனத்திலும், இத்தகைய நியாயத்தீர்ப்பைப்பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலும் "நியாயாசனம்" என்பதற்கு மூலமொழியில் "பீமா" (*bema*) என்னும் கிரேக்கச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[124] அக்கால கிரேக்க நகரங்களில், அரசாங்கத்தின் நிர்வாகம் சம்பந்தமான அறிவித்தல்களும் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் அறிவிக்கப்படுவதற்கும், ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் கொடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்ட மேடையே பீமா என்று அழைக்கப்பட்டது.[125] இம்மேடையில் இருக்கும் ஆசனத்தில் அரசாங்க அதிகாரி அல்லது அரசன் அமர்ந்திருந்து வீரர்களுக்குப் பரிசில்கள் கொடுப்பது வழக்கம். கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்க்கப்படும் இடத்திற்குப் பவுல் இச்சொல்லை உபயோகித்துள்ளதற்குக் காரணம், கிறிஸ்தவர்களுக்கான நியாயத்தீர்ப்பு அவர்களுடைய செயல்களுக்கான வெகுமதியைப் பெறும் நிகழ்வாக இருப்பதனாலேயாகும். எபிரேயர் 9:27 கூறுவதுபோல, "ஒருதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்

---

[122] L.Morris, *Hebrews: The Expositor's Bible Commentary Volume 12*, p. 93.

[123] W.W.Wiersbe, *Be Encouraged: 2Corinthians*, p. 60.

[124] "பீமா" என்னும் சொல் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் மிகவும் அரிதாகவே உபயோகிக்கப்பட்டுள்ளது. யூதவரலாற்றாசிரியர் "ஜேசீப்பஸ்" என்பவரின் எழுத்துக்களில், சாலொமோனின் சிங்காசனம் பீமா என்றே குறிப்பிடப்பட்டுள்ளது (F.Josephus, *The Antiquities of the Jews*, 8:140, 17:201). யூதமத நூல்களில் "கிஸ்ஸெடின்" (*kissedin*) என்னும் கிரேக்கச் சொல்லே தேவனுடைய நியாயாசனத்தைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்து (Gen. Rab.93;11, Lev. Rab. 29:3-4, 29:6, 29:9-10). கிறிஸ்தவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுவதைக் குறிப்பிடுவதற்காகவே பீமா என்னும் சொல் கிரேக்க உலகிலிருந்து புதிய ஏற்பாட்டாசிரியர்களினால் எடுக்கப்பட்டுள்ளது.

[125] இத்தகைய மேடையொன்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் புராதன கொரிந்து நகரத்தின் சிதைவுகளில் கண்டுபிடித்துள்ளனர் (C.G.Kruse, *2Corinthians: Tyndale New Testament Commentaries*, p. 16).

பட்டுள்ளது" உண்மையென்றாலும், இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு இந்நியாயத்தீர்ப்பானது அவர்களுடைய செயல்களுக்கு ஏற்ற பலன் கொடுக்கப்படும் நிகழ்வாகவே இருக்கும்.[126] மேலும், இவ்வுலக வாழ்வில் நாம் செய்தவைகளுக்கான பலன் பரலோகத்திலேயே நமக்கு கிடைக்கும் என்று வேதாகமம் கூறுவதனால் (மத்.5:12, லூக். 6:23),[127] மரணத்தின் பின்னர் மனிதர் பரலோகத்திற்குச் சென்றபின்பே எபிரேயர் 9:27ல் குறிப்பிடப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பு இருக்கும். எனவே, மரணத்தின்பின்னர் நியாயத்தீர்ப்பு இருப்பதனால், கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் பரலோகத்திற்குச் செல்லமாட்டார்கள் என்று கூறமுடியாது.

## பாவம்போக்கும் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசிப்பவர்கள் நியாயத்தீர்ப்பு நாளில் பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவதில்லை

கிறிஸ்தவர்களாகிய நாமெல்லாரும் நம்முடைய செயல்களுக்கான வெகுமதியைப் பெற்றுக்கொள்வதற்காகவே இயேசுகிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்.[128] எனினும் இயேசுகிறிஸ்துவின்

---

[126] C.G.Kruse, *2Corinthians: Tyndale New Testament Commentary*, p. 118. கிறிஸ்தவ ஊழியர்களின் பணிகள் நியாயந்தீர்க்கப்படுவதைப்பற்றி 1கொரிந்தியர் 3ம் அதிகாரத்தில் பவுல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "எனக்கு அளிக்கப் பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்ன விதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான். அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" (1கொரி.3:10-15).

[127] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 103; L.O. Richards, *Expository Dictionary of Bible Words*, p. 336; W.C.Allen, *Matthew: International Critical Commentary*, p. 42.

[128] D.Connelly, *What the Bible Really Says: After Life*, p. 115.

சிலுவைப் பலி மனிதருடைய பாவத்தைப்போக்கும் பலியாக இருப்பத னால் (1யோவா.1:7, 2:2) விசுவாசத்தினால் இப்பலியைத் தம்முடைய பலியாக்கிக்கொள்பவர்கள் பாவத்திற்காக அந்நாளில் தண்டிக்கப்படு வதில்லை (ரோ.8:1-3).[129] அவர்களுடைய பாவம் ஏற்கனவே இயேசுகி றிஸ்துவின் சிலுவைப் பலியில் தண்டிக்கப்பட்டுள்ளமையால், அவர்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.[130] இயேசுகி றிஸ்து அவர்களுடைய பாவங்களை அவர்களிலிருந்து நீக்கியுள்ள தோடு, அவர்களுக்குத் தம்முடைய நீதியைக் கொடுத்துள்ளார். இத னால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நீதியைப் பெற்ற நீதிமான்களா கவே தேவனுடைய நியாயாசனத்தின் முன் நிற்பார்கள்.[131] "பாவத்தின் சம்பளம் மரணமாக" உள்ளபோதிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை வரமோ, அவரால் உண்டாகும் நித்தியஜீவன் என்று வேதாகமம் கூறுகிறது (ரோ.6:23). இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்தின்மூலம், பாவத்திற்கான தண்டனையைப் பெற்று நம்மை அத்தண்டனையிலிருந்து விடுவித்து நமக்கு நித்திய ஜீவனைக் கொடுத்துள்ளார். இதனால்தான், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட் டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்" (யோவா.5:24) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (யோவா.3:36). எனவே, இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பானது, "அவர்களுடைய பாவத்திற்கான தண்டனை

---

129 ரோமர்.8:1-3ல், "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின்பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படி யெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாத தைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

130 C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, pp. 1276-1277.

131 இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவன், அதாவது, இவரே தன்னுடைய பாவம் போக்கும் பலியாக மரித்தார் என்பதை உண்மையாய் நம்பி, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவற்றை அவரிடம் அறிக்கையிடுபவன் பாவமன்னிப்பைப் பெறுகின்றான். இயேசுகிறிஸ்து அவனுடைய பாவத்தை அவனிலிருந்து எடுத்துப்போடுவதோடு, தம்முடைய நீதியை அவனுக்கு கொடுக்கின்றார். இதனால் அவன் நீதிமான் என்னும் தீர்ப்பைத் தேவனிடத்தி லிருந்து பெறுகின்றான். இதையே "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்று வேதாகமம் கூறுகிறது.

கொடுக்கப்படும் செயலாக அல்ல, அவர்களுடைய கிரியைகளுக்குப் பரிசில்கள் கொடுக்கப்படும் நிகழ்வாகவே இருக்கும்." இதனால்தான், இயேசுகிறிஸ்து என்னும் அஸ்திபாரத்தின்மீது சபையைக் கட்டுகிறவர் களுக்கு கிடைக்கும் வெகுமதியைப்பற்றி வேதாகமம் கூறும்போது (1கொரி.3:10-13) "அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான். அவனோ இரட்சிக்கப்படுவான்" (1கொரி.3:14-15) என்பதை அறியத்தருகின்றது. இவ்வசனத்தில் நஷ்டமடைபவன் இரட்சிக்கப்படுவதாகவே குறிப்பிடப்பட்டிருப்பதனால், இது பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு அல்ல என்பது தெளிவாகின்றது.

**இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பானது, அவர்களுடைய பாவத்திற்கான தண்டனை கொடுக்கப்படும் செயலாக அல்ல, அவர்களுடைய கிரியைகளுக்குப் பரிசில்கள் கொடுக்கப்படும் நிகழ்வாகவே இருக்கும்**

இறுதி நியாயத்தீர்ப்பின்போது கிறிஸ்தவர்கள் பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவதில்லை என்றால், தாராளமாகப் பாவம் செய்யலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் இது தவறானதொரு கருத்தா கும். ஏனெனில், மன்னிப்பைப் பெறலாம் என்னும் எண்ணத்துடன் பாவம் செய்பவன், பாவங்களிலிருந்து மனந்திரும்பாதவனாகவே இருப்பான். இத்தகைய மனிதன், தான் இயேசுகிறிஸ்துவை விசுவா சிக்கிறேன் என்று கூறினாலும், அவன் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியைச் சரியாகப் புரிந்துகொள்ளாதவனாகவும், இரட்சிக்கப்படாதவ னுமாகவே இருப்பான். ஏனெனில், தேவனால் பிறந்தவன் தொடர்ந்து பாவம் செய்கிறவனாக இருக்கமாட்டான் என்றே வேதம் கூறுகிறது (1யோவா.3:6, 3:9, 5:18).[132] கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் வாழும்போது

[132] 1யோவான் 3:6,9, 5:18ல், "பாவஞ்செய்யான்" என்பது மூலமொழியில் நிகழ் காலத்தொடரிலேயே உள்ளது. இவ்வசனங்களில் பாவம் என்பது, குறிப்பிட்ட ஒரு பாவச் செயலை அல்ல, தொடர்ச்சியாக எப்பொழுதும் இருக்கும் பழக் கத்தையே குறிக்கின்றது. எனவே, தேவனால் பிறந்தவன் "பாவம் செய்துகொண் டிருக்க மாட்டான்" என்றே இச்சொற்பிரயோகம் இடம்பெறும் வசனங்கள் மொழிபெயர்க்கப்படவேண்டும். (புதிய தமிழ் வேதங்களையும் ஆங்கிலத்தில்

பாவம் நிறைந்த உலகத்தில் பாவ சரீரத்துடன் இருப்பதனால், அவர்கள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பாவம் செய்துவிடலாம். ஆனால் அவர்கள் எப்பொழுதும் பாவத்திலேயே வாழமாட்டார்கள்.[133] எப்பொழுதும் பாவம் செய்கிறவர்களும், மன்னிப்பைப் பெற்றிடலாம் என்னும் எண்ணத்தில் தவறு செய்பவர்களும் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

இயேசுகிறிஸ்து தானியத்தையும் களையையும்பற்றி கூறிய உவமையின்படி, கிறிஸ்தவர்களில் உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்களும் போலியானவர்களும் எப்பொழுதும் இருப்பார்கள் (மத்.13:24-30, 37-43) இரட்சிக்கப் பட்ட மெய்க்கிறிஸ்தவன், பாவத்தை வெறுப்பவனாகவும், பரிசுத்தத்தில் நாட்டம் உள்ளவனாகவும் இருப்பான். இதனால் அவன் பாவம் செய்வதைத் தவிர்த்து, தேவனுடைய கட்டளைகளின்படி பரிசுத்தமாய் வாழ்வான். உண்மையில், இப்படிப்பட்ட மனிதர்களே மரணத்தின்பின் இயேசுகிறிஸ்துவிடம் செல்பவர்களாகவும், இறுதி நியாயத்தீர்ப்பின்போது தங்களுடைய செயல்களுக்கான வெகுமதியைப் பெறுபவர்களாகவும் இருப்பார்கள். “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை” என்றே வேதாகமம் கூறுகிறது (ரோ.8:1). எனவே, கிறிஸ்தவர்களுக்கு இறுதிநியாயத்தீர்ப்பு அவர்களுடைய செயல்களுக்கு வெகுமதியளிக்கும் நிகழ்வாகவே இருக்கும் என்பதனால், நாம் எப்படி வாழ்ந்தாலும் பாவமன்னிப்பும் பரலோக வாழ்வும் கிடைக்கும் என்று எண்ணுகிறவர்கள் இறுதியில் ஏமாற்றமே அடைவார்கள். இதனால்தான், “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிற வனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” (மத்.7:21) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே, பாவத்தில் வாழ்பவர்கள் அல்ல, தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்தமாய் வாழ்பவர்களே உண்மையான கிறிஸ்தவர்களாகவும், இறுதி நியாயத்தீர்ப்பில் தேவனிடமிருந்து வெகுமதிகளைப் பெறுகிறவர்களாகவும் இருப்பார்கள்.

---

NIV மொழிபெயர்ப்பையும் பார்க்கவும்) எனவே, தேவனால் பிறந்தவன் பாவம் செய்யமாட்டான் என்று கூறும்போது, அவன் பாவம் செய்வதைத் தன்னுடைய பழக்கமாகக் கொண்டிருக்கமாட்டான், அல்லது அவன் பாவத்தில் வாழமாட்டான் என்றே இவ்வசனங்கள் கூறுகின்றன (B.F.Westcott, *The Epistles of John*, p. 104; J.R.W.Stott, *The Letters of John*, p. 135-136).

[133] D.L.Akin, *1,2,3 John: The New American Commentary*, p. 143.

**கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு அவர்களுடைய செயல்களுக்கு வெகுமதியளிக்கும் இடமாகவே இருக்கும் என்பதனால், நாம் எப்படி வாழ்ந்தாலும் பாவமன்னிப்பும் பரலோக வாழ்வும் கிடைக்கும் என்று எண்ணுகிறவர்கள் இறுதியில் ஏமாற்றமடைவார்கள்.**

வேதாகமம் இரண்டுவிதமான நியாயாசனங்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளது. ஒன்று, அறிவித்தல்களும் பரிசில்களும் கொடுக்கப்படும் "பீமா" என்னும் மேடை. கிறிஸ்தவர்களுக்கு வெகுமதியளிக்கப்படும் நியாயத்தீர்ப்புக்கு இச்சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. மற்றது வெளிப்படுத்தல் 20:11ல் குறிப்பிடப்பட்டுள்ள "வெள்ளை சிங்காசனம்." வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் இவ்விருவகையான நியாயாசனங்களும் உள்ளன. 4ம் வசனத்தில் யோவான் "சிங்காசனங்களைக் காண்கின்றார்." இவ்வசனத்தில் கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் சிங்காசனமும், 11ம் வசனத்தில் வெள்ளை சிங்காசனமும் உள்ளது. 4ம் வசனத்தின்படி கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் சிங்காசனத்திற்கு முன்பாக, உபத்திரவக் காலத்தில் (அதாவது இறுதிக்காலத்தின் உலக ஆட்சியாளனான அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில்)[134] இரத்தசாட்சிகளாக மரித்தவர்களும், அந்திகிறிஸ்துவை வழிபடாதவர்களும் இருக்கின்றனர். உபத்திரவக் காலத்திற்கும் முன்பே கிறிஸ்தவ சபை உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு பரலோகத்தில் இருப்பதனால் (வெளி.4-5), உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்படும் மக்கள் மட்

[134] கிறிஸ்தவ சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டபின் ஏழு வருஷங்கள் அந்திகிறிஸ்துவின் ஆட்சி உலகில் இருக்கும். தானியேலின் தரிசனத்தில் அந்திகிறிஸ்து "பாழாக்கும் அருவருப்பு" என்றும் (தானி.9:27, மத்.24:15), பவுலின் நிருபத்தில், "கேட்டின் மகனாகிய பாவ மனுஷன்" (2தெச.2:3-4) "அக்கிரமக்காரன்" (2தெச.2:6-9) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான். இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்துக்கும் எதிராகச் செயற்படும் மனிதர்கள் அனைவரும் யோவானுடைய நிருபத்தில் அந்திகிறிஸ்துக்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளபோதிலும் (1யோவா.2:18), இறுதிகாலத்தில் வரவிருக்கிற உலகத் தலைவனையும் ஆதிசபை அந்திகிறிஸ்து என்றே அழைத்தது.

டுமே வெளிப்படுத்தல் 20:4லுள்ள நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கின் றனர். 11ம் வசனத்தில் வெள்ளை சிங்காசனத்திற்கு முன் தேவனை அறியாதவர்களும் அவரை விசுவாசியாதவர்களும் நிற்கின்றனர். இவர் கள் தங்களுடைய கிரியைகளுக்கு ஏற்றபடி தேவனால் நியாயந்தீர்க் கப்படுகின்றனர். இத்தீர்ப்பானது அவர்களுடைய இறுதி நிலையை நிர்ணயிக்கும் (வெளி.20:11-15).[135]

தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பின்போது மனிதர்கள் நரகத்திற்கு அனுப்பப்படுவது நியாயமற்றது என்பது தற்காலத்தில் பலரது தர்க்க மாயுள்ளது. இதனால், இயேசுகிறிஸ்துவை அறியாமல் மரிப்பவர்க ளுக்கு மரணத்தின் பின்னர் அவரை அறிந்துகொள்வதற்கு ஒரு சந் தர்ப்பம் கொடுக்கப்படும் என்று சிலர் கருதுகின்றனர்.[136] ஆனால், வேதாகம சத்தியத்தின்படி மரணத்தின் பின்னர் இரட்சிக்கப்படுவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை. மரணத்தின் பின்னர் மனிதருடைய இறுதிநிலையை மாற்றிக்கொள்ளமுடியாது என்பதை அறியத்தருவதற்காகவே இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவா னையும் பற்றிய உவமையைக் கூறினார் (லூக்.16:24-26). "ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நிய மிக்கப்பட்டிருக்கிறது" என்னும் வேதாகம சத்தியம் (எபி.9:27), மர ணத்தின் பின்னர் இரட்சிக்கப்படுவதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்னும் உபதேசத்திற்கு எதிராகவே உள்ளது. மேலும், "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாயின் உங்கள் இருத

---

135 வெளிப்படுத்தல் 20:11-15ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரை யும் கண்டேன். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின. அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரை யும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார் கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாள மும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்."

136 C.Pinnock, *A Wideness in God's Mercy*, p. 168; J.Sanders, "Is Belief in Christ Necessary for Salvation" p. 251.

யங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி.3:7, 3:13, 3:15, 4:7), "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்" என்னும் வேதாகம அறிவுறுத்தல்கள், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வ தற்கு தற்போது இருக்கும் சந்தர்ப்பம் ஒரு நாள் இல்லாமற்போகும் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.[137] இறுதி நியாயத்தீர்ப்பு, நாம் மரணத்தின் பின்னர் செய்யும் எதனையும் அடிப்படையாகக் கொண்டி ருப்பதில்லை. இவ்வுலகத்தில் வாழும் போது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவனுக்கு நித்திய ஜீவனும், விசுவாசியாதவனுக்கு ஆக்கி னைத் தீர்ப்பும் கிடைக்கும் என்றே வேதாகமம் கூறுகிறது. (யோவா. 3:18, 3:36).[138] எனவே, இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படாதவர்க ளுக்கு மரணத்தின் பின் இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று கூறமுடியாது.

## வேதாகம சத்தியத்தின்படி மரணத்தின் பின்னர் இரட்சிக்கப்படுவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை

இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களுக்கு மரணத்தின்பின் அவரை அறிந்துகொள்வதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால், தேவன் அவர்களை எவ்வாறு நியாயந்தீர்ப்பார் என்று நாம் கேட்க லாம். தேவனை அறியாதவர்கள், தங்களுடைய கிரியைகளுக்கு ஏற்றபடி நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பதை வெளிப்படுத்தல் 20:12 அறியத்தருகின்றது. இக்கிரியையானது, மனிதர்கள் தேவனுடைய வெளிப்படுத்தலை என்ன செய்தார்கள் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். வேதாகம சத்தியத்தின்படி, இஸ்ரவேல் மக்கள் மத்தியிலும், அதன்பின்னர் இயேசுகிறிஸ்துவின் மூலமும் இரட்சகரா கத் தம்மை வெளிப்படுத்திய தேவன், உலகின் ஆரம்பத்திலிருந்தே

137 A.Fernando, *The Christian Attitude Toward World Religions*, p. 140.

138 இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக் கிறான். குமாரனை விசுவாசியாதவனோ, ஜீவனைக் காண்பதில்லை. தேவனு டைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவா.3:18, 3:36).

சகல மனிதருக்கும் தம்மை சிருஷ்டிகராக வெளிப்படுத்தியுள்ளார். இது, சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தின் மூலமும் மனிதருடைய உள்ளத்திலும் தேவன் தம்மைப்பற்றி கொடுத்த சாட்சியாக உள்ளது. கிறிஸ்தவ இறையியலில் இது "பொதுவான வெளிப்படுத்தல்" (General Revelation) என்று அழைக்கப்படுகின்றது. "சகலவற்றையும் சிருஷ்டித்த தேவன் இருப்பதை உலகில் எவ்விடத்திலுள்ளவர்களும் எக்காலத்தைச் சேர்ந்தவர்களும் அறிந்துகொள்ளும்படியாக தேவனால் அருளப்பட்ட வெளிப்படுத்தலாக இது உள்ளது."[139]

தேவன் சிருஷ்டித்த உலகம் அவரை மக்களுக்கு வெளிப்படுத்தும் ஊடகமாக இருப்பதை சங்கீதம் 19:1, ரோ.1:21-23, அப்.14:17 என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன. சங்கீதம் 19:1ல், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது" என்று கூறும் சங்கீதக்காரன், அடுத்த வரியில், இது எப்படி சாத்தியமாகியுள்ளது என்பதை அறியத்தருவதற்காக "ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் "தேவனுடைய மகிமை" என்பது, மக்கள் மத்தியில் தேவன் பிரசன்னமாயிருப்பதைக் குறிப்பிடும் முறையாகும்.[140] எனவே, "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது" என்னும் வாக்கியம், "வானங்கள் தேவன் இருப்பதற்கான தெளிவான சாட்சியாக,"[141] அவரது "வெளிப்படுத்தலின் ஊடகமாக,"[142] "அவரைப்பற்றி மனுமக்கள் அறிந்துகொள்ளும் புத்தகமாக"[143] இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. வானங்களின் மூலம் எப்படி தெய்வத்தை அறிந்துகொள்ளலாம் என்பதை இவ்வசனத்தின் இரண்டாவது வரி, அதாவது, "ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என்னும் வாக்கியம் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, வானத்தில் இருக்கும் சூரிய, சந்திர, நட்சத்திரங்கள், தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவைகளாக இருப்பதனால், இவைகள் தங்களது சிருஷ்டிகரான தேவன்

[139] M.J.Erickson, *Christian Theology*, p. 153.
[140] L.Ryken, J.C.Wilhoit & T.Longman, *Dictionary of Biblical Imagery*, p. 330. இதனால்தான், தேவன் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில், "தேவனுடைய மகிமை பிரசன்னமாகியதாக" அல்லது "வெளிப்பட்டதாகப்" பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (யாத்.16:10, 40:34-35, 2நாளா.7:1).
[141] J.M.Boice, *Psalms: An Expository Commentary Volume I*, p. 162.
[142] A.Weiser, *The Psalms: Old Testament Library*, p. 198.
[143] A.Weiser, *The Psalms: Old Testament Library*, p. 199.

இருப்பதற்கும், அவரது வல்லமைக்கும் ஞானத்திற்குமான சாட்சிகளாய் உள்ளன. இதனால், இவற்றின் தன்மையையும், செயற்பாடுகளையும் கவனித்துப் பார்க்கும்போது, இவற்றைச் சிருஷ்டித்து இயக்கிக்கொண்டிருக்கும் தேவனை அறிந்து கொள்ள வழி பிறக்கின்றது.[144] உண்மையில், வானமண்டலத்திலுள்ள சூரிய, சந்திர, நட்சத்திரங்களைக் கவனித்துப் பார்த்து, அவற்றின் செயற்பாடுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, இவை தற்செயலாகவோ அல்லது தானாகவோ உருவானவைகள் அல்ல, மாறாக, ஞானமுள்ள ஒருவரால் திட்டமிட்டு சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தேவன் சிருஷ்டித்துள்ள உலகத்தில் இருப்பவைகளின் மூலம் அவர் இருப்பதை அறிந்துகொள்ளலாம் என்பதைப் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் விளக்கமாக எழுதியுள்ளார். “தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்” என்று கூறும் பவுல், “எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்” என்று குறிப்பிட்டுள்ளார் (ரோம.1:19-20). இதிலிருந்து, தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் மூலம் (உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே) அவரது தேவத்துவத்தையும் நித்திய வல்லமையையும் நம்மால் அறிந்துகொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது. 20ம் வசனத்தில் ‘தெளிவாய்க் காணப்படும்’ என்பது மூலமொழியில் “தெளிவாய்க் கண்டு, புரிந்து கொள்ளப்படும்” என்றே உள்ளது.[145] மூலமொழியில், ‘தெளிவாய்க்கண்டு’ என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சொல்,[146] சரீரக் கண்களினால் காண்பதைக் குறிக்கும். அதாவது, தேவன் சிருஷ்டித்தவற்றை நாம் எமது சரீரக் கண்களினால் பார்க்கின்றோம். ஆனால் “புரிந்துகொள்ளப்படும்” என்பதைக் குறிக்கும் சொல்,[147] “மனதினால் புரிந்துகொள்ளுதல்” என்னும் அர்த்தமுடையது. இது “சிருஷ்டிக்கப்பட்டவற்றைப் பார்ப்பதை மட்டுமல்ல, பார்த்தவற்றைப்பற்றி சிந்தித்து, சிருஷ்டிகரைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவதைக் குறிக்கின்

---

144 P.C.Craigie, *Psalms 1-50: Word Biblical Commentary Vol.19*, p. 180.

145 ஆங்கிலத்தில் “have been clearly seen, being understood” என்று உள்ளது.

146 “கத்தோராட்டாய்” (*kathoratai*) என்னும் கிரேக்கச் சொல்.

147 “நூஉமிநா” (*nooumena*) என்னும் கிரேக்கச் சொல்.

றது."[148] அதாவது "சரீரக் கண்களினால் நாம் காணும் தேவனுடைய சிருஷ்டிப்பைப்பற்றிச் சிந்திக்கும்போது, நம் மனக்கண்களினால் அவற்றைச் சிருஷ்டித்த தேவனைப் பார்க்க முடியும்"[149] என்றே இவ்வசனம் கூறுகிறது. ஒரு ஓவியன் தான் வரையும் சித்திரங்கள் மூலம் தன்னையும், தன் திறமைகளையும் வெளிப்படுத்துவதுபோலவே, தேவனும் தம்மைப்பற்றித் தமது கரத்தின் கிரியையான இயற்கை உலகத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.[150]

தேவன் தாம் சிருஷ்டித்த உலகத்தின் மூலம் மட்டுமல்ல, மனிதருடைய உள்ளத்திலு"ம் தம்மைப்பற்றி வெளிப்படுத்தியுள்ளார். மனிதருடைய உள்ளத்தில் தேவனைப்பற்றிய உணர்வும், அவருடைய நீதிச் சட்டமும் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. "சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்த தேவன், நித்தியத்தை மனிதர்களுடைய உள்ளத்தில் வைத்திருப்பதாக" பிரசங்கி 3:11ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில், தமிழ் வேதாகமத்திலுள்ள "உலகம்" என்னும் சொல் மூலமொழியின்படி "நித்தியம்" என்றே மொழிபெயர்க்கப்படவேண்டும்.[151] இதனால், திருவிவிலியத்தில், "காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார்" என்றும், மோனஹன் என்பவருடைய மொழிபெயர்ப்பில் "நித்தியகால நினைவையும் அவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கிறார்" என்றும், புதிய தமிழ் வேதாகமத்தில், "மனிதருடைய இருதயங்களில் அவர் நித்திய காலத்தின் உணர்வையும் வைத்திருக்கிறார்" என்றும் இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேவன் மனிதனுடைய உள்ளத்தில் நித்தியத்தைக்குறித்த ஒரு உணர்வை வைத்துள்ளார் என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாகும்.[152] உண்மையில், தேவன் மட்டுமே நித்தியமானவராக இருப்பதனால், இது தேவனைப்பற்றிய உணர்வா கவே உள்ளது.[153] இதனால்தான், தேவனை வழிபட வேண்டும் என்னும் உணர்வு இயற்கையாகவே உலகிலுள்ள சகல மனிதருடைய உள்ளத்திலும் இருக்கின்றது. உலகில் பலதரப்பட்ட மதங்கள் உருவாகியிருப்பதற்கான காரணமும் இதுவேயாகும்.

---

148 E.F.Harrison, *Romans: The E::positor's Bible Commentary,* p. 23.
149 R.C.H.Lenski, *Interpretation of St.Paul's Epistle to the Romans*, p. 99.
150 J.R.W.Stott, *The Message of Romans*, p. 73.
151 மூலமொழியில் நித்தியத்தைக் குறிக்கும் "ஓலாம்" (*olam*) என்னும் சொல்.
152 M.A.Eaton, *Ecclesiastes: Tyndale OT Commentaries*, p. 81.
153 W.Kaiser, *Ecclesiastes: Everyman's Bible Commentary*, p. 66.

## இயேசுவை அறியாமல் மரிப்பவர்கள் தேவனுடைய பொதுவான வெளிப்படுத்தலை என்ன செய்தார்கள் என்பதன் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

மனிதர்களின் உள்ளத்தில் தேவனைப் பற்றிய உணர்வு மட்டுமல்ல, தேவனுடைய நீதிச்சட்டமும் உள்ளது. பவுல் ரோமருக்கு இதைப் பற்றி எழுதும்போது, மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தை அறிந்திராத புறஜாதி மக்கள், அதில் கொடுக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களை அறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (ரோ.2: 14-15).[154] அதாவது, எது சரி எது பிழை என்பதை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றலைத் தேவன் எல்லா மனிதருக்கும் கொடுத்திருக்கின்றார். இதனால் பவுல் கூறுவதுபோல, "குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது." உண்மையில், "ஒவ்வொரு மனிதனும் சரியானதையும் பிழையானதையும் நிர்ணயிக்கும் தராதரத்தை உடையவனாக இருக்கின்றான்."[155] இதை அவர்களுடைய மன உணர்வுகள் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றன.[156] இதனால்தான், மனிதன் தவறு செய்யும் போது அவனுக்குக் குற்ற உணர்வும், நன்மை செய்யும்போது சந்தோஷமும் ஏற்படுகிறது.[157] மேலும், கிறிஸ்தவத்திற்கு வெளியில் பிற மதங்களிலும் கலாசாரங்களிலும் ஒழுக்கம் சம்பந்தமான கட்டளைகளும் வரையறைகளும் இருப்பதற்குத், தேவனுடைய பொதுவான வெளிப்படுத்தலே காரணமாய் உள்ளது.[158]

---

154 ரோமர் 2:14-15ல் "அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள், சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில் லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிற தினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

155 C.Vaughan & B.Corley, *Romans: Bible Study Commentary*, p. 35.

156 C.A.Pierce, *Conscience in the New Testament*, p. 86.

157 J.R.W.Stott, *The Message of Romans*, p. 89.

158 புத்தரின் போதனைகளில் ஒழுக்கம் சம்பந்தமான கட்டளைகள் இருப்பதற்கான காரணம் இதுவேயாகும். அதேபோல, மோசேயின் நியாயப்பிரமாணத்தி

உலகின் எவ்விடத்திலும், எக்காலத்திலும் வாழும் மனிதர்கள் தம்மைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடியவிதமாகத் தேவன், தாம் சிருஷ்டித்த உலகத்தின் மூலமும், மனிதர்களுடைய உள்ளத்திலும், தம்மைப்பற்றி யும் தம்முடைய நீதிச்சட்டத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். இதனால், இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படுவதற்கு எவ்வித சந்தர்ப்பமும் கிடைக்காமல் மரிப்பவர்கள், தேவன் உலகத்தின் மூலமும் அவர்களு டைய உள்ளத்திலும் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தலை என்ன செய்தார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு நியாயந்தீர்க்கப்படு வார்கள். பெரும்பாலான மனிதர்கள் தேவனுடைய வெளிப்படுத்தலை நிராகரித்து, தங்களுடைய அறிவுக்கேற்றபடி செயல்படுவதனால் உண்மையான தேவனை வழிபடாமல், தாங்கள் உருவாக்கின விக்கிர கங்களை வழிபட்டு வருவதோடு, தேவனுடைய நீதிச்சட்டத்திற்கு முரணான விதத்தில் ஒழுக்கக்கேடானவர்களாக வாழ்கின்றனர். ரோமர் 1:21-25ல் இதைப்பற்றி நாம் வாசிக்கலாம்.[159] ஆனால், ஏனோக்கு, மெல்கிசேதேக்கு, நோவா, யோபு, கொர்நேலியு போன்றவர்கள், தேவ னுடைய பொதுவான வெளிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு தேவனைத் தேடுகிறவர்களாகவும் அவருடைய நீதிச்சட்டத்தின்படி வாழ்கிறவர்களாகவும் இருந்தனர். இவர்களில் ஏனோக்கு நோவா என்போர் தேவனோடு சஞ்சரிப்பவர்களாகவும் (ஆதி.5:22, 6:9), மெல் கிசேதேக்கு, ரெகுவேல் என்போர் தேவனுடைய ஆசாரியர்களாகவும் (ஆதி.14:18, யாத்.3:16-18), யோபு, கொர்நேலியு என்போர் தேவபக்தியுள்ளவர்களாகவும் (யோபு.1:1, அப்.10:2) இருந்தனர். உண் மையில், இவர்கள் தேவனுடைய பொதுவான வெளிப்படுத்தலை

---

லுள்ள ஒழுக்கம் சம்பந்தமான கட்டளைகளும் கி.மு.18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபிலேனிய அரசனான "ஹமுரபி" என்பவரின் நீதிச் சட்டமும் ஒரே விதமானவையாக இருப்பதற்கும் பொதுவான வெளிப்படுத்தலின் மூலம் தேவனுடைய நீதிச்சட்டம் மானிடரின் உள்ளங்களில் எழுதப்பட்டிருப்ப தேயாகும்.

[159] ரோமர் 1:21-25ல், "தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்ப டுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரா னார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார் கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டி யைத்தொழுது சேவித்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிப்படையாகக்கொண்டு தேவனைத் தேடுகிறவர்களாகவும், அவரை வழிபடுகிறவர்களாகவும் இருந்தனர். இவர்களைப்போல, சிருஷ்டிக்கப் பட்ட உலகத்திலும், மனிதருடைய உள்ளத்திலும் கொடுக்கப்பட்டுள்ள தேவவெளிப்படுத்தலின் மூலம் சிருஷ்டிகரான மெய்யான தேவனைத் தேடி, அவருக்குப் பயந்து அவரை வழிபட்டு வந்தவர்களைத் தேவன் சிறப்பான முறையில் சந்திப்பதனால்,[160] இறுதிநியாயத்தீர்ப்பின்போது இவர்கள் தேவனுடைய ஜனங்களோடு சேர்க்கப்படுவார்கள். ஆனால், தேவனுடைய வெளிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளாமல், தங்களுடைய சிந்தனைகளின்படி தெய்வங்களை உருவாக்கி வழிபடுபவர்களுக்கும் ஒழுக்கக்கேடாக வாழ்பவர்களுக்கும் இறுதிநியாயத்தீர்ப்பு பயங்கரமா னதாகவே இருக்கும். “அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை” என்றே வேதாகமம் கூறுகிறது. ரோமர் 1:18-20ல் இதைப்பற்றி பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷரு டைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோத மாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கி றது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்ப டுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது

[160] பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இத்தகைய மனிதர்களைத் தேவன் நேரடியாகச் சந்தித்ததினால் இவர்கள் தேவனை அறிந்துகொண்டனர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி சிறப்பான முறையில் இவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதற்கு கொர்நேலியு என்பவனுடைய சரிதை சிறந்த உதாரணமாக உள்ளது. இவன் பொதுவான வெளிப்படுத்தல் மூலமாக தேவனைத் தேடுகிறவனாக இருந்தான். இதனால், இவன் தன் காலத்து மக்களைப்போல விக்கிரக வழிபாட்டில் ஈடுபடாமல், தேவனை வழிப டுகிறவனாகவும் நற்கிரியைகளைச் செய்கிறவனாகவும் இருந்தான் (அப்.10:2). எனினும், பேதுரு சுவிசேஷத்தை அறிவிக்கும்வரை அவன் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறியாதவனாகவே இருந்தான். ஆனால், அவன் பொதுவான வெளிப்படுத் தலை அடிப்படையாகக்கொண்டு தேவனைத் தேடியதினால், இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ளும் சிலாக்கியம் அவனுக்கு சிறப்பான முறையில் கிடைத்தது (அப்.10:34-35). இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷம் செல்லாத காலங்களி லும், இடங்களிலும் வாழ்ந்தவர்கள், தங்களுக்குக் கிடைத்த பொதுவான வெளிப் படுத்தல் மூலம் தேவனைத் தேடியிருந்தால், தேவன் அவர்களை சிறப்பான முறையில் சந்தித்து இயேசுகிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பை அவர்களுக்கும் அருளியிருப்பார்.

முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோ.1:18-21).

# 5. உயிர்த்தெழுதலும் பரலோகமும்

இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் அவர் இருக்கும் பரலோகத்திற்குச் செல்கின்றார்கள் என்று வேதாகமம் கூறினாலும், மரணத்தின்போது அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி மாத்திரமே பரலோகத்திற்குச் செல்கின்றது என்பதை நாம் மறக்கலாகாது. "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" (1கொரி. 15:50) என்பதனால், மனிதர் மரிக்கும்போது அவர்களுடைய சரீரம் பரலோகத்திற்குச் செல்வதில்லை. மரணத்தின்போது மானிட சரீரத்திலிருந்து ஆவிக்குரிய பகுதி பிரிவடைந்து பரலோகத்திற்குச் செல்கையில் (அப்.7:55-56, லூக்.23:43, பிர.12:7, பிலி.1:23, 2கொரி.5:8), சரீரமோ மண்ணுக்குச் செல்கின்றது. ஆனால் இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, மரித்த சரீரமும் அதிலிருந்து பிரிவடைந்த ஆவிக்குரிய பகுதியும் மறுபடியுமாக ஒன்றிணைக்கப்பட்டு மரித்தோரின் சரீரங்கள் மகிமையடைந்த நிலையில் உயிர்ப்பிக்கப்படும். வேதாகமம் இதைப்பற்றி கூறும்போது, "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22-23) என்பதை அறியத்தருகின்றது. ஆதாமுக்குள் சகல மக்களும் ஒரேவிதமான மரணத்தையே சந்தித்தாலும், உயிர்த்தெழுதல் சகலருக்கும் ஒரேவிதமாகச் சம்பவிப்பதில்லை.[161] இதனால்தான், "அவனவன் தன்தன் வரிசையிலே

[161] 1கொரிந்தியர் 15:22ல் "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று கூறுவதனால், சகலரும் ஒரேவிதமான முறையில் உயிர்த்தெழுவார்கள் என்று சிலர் கருதுகின்றனர் (R.D.Culver, "A Neglected Millennial Passage from St.Paul" pp. 141-152; W.B. Wallis, "The Problem of an Intermediate Kingdom in 1Corinthians 15:20-28" pp. 229-242). மரணமடையும் சகல மனிதருக்கும் உயிர்த்தெழுதல் இருக்கின்றபோ

உயிர்ப்பிக்கப்படுவான்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமம் மூன்றுவிதமான மரணங்களைப் பற்றியும் இரண்டுவித மான உயிர்த்தெழுதல்களைப்பற்றியும் கூறுகிறது. ஆவிக்குரிய மர ணம், சரீர மரணம், நித்திய மரணம் என்னும் மூன்றுவிதமான மர ணங்களைப்பற்றி வேதாகமத்தில் நாம் வாசிக்கலாம். ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்கள் ஆவிக்குரியபிரகாரமாகவும், சரீரப்பிரகார மாக மரிப்பவர்கள் சரீரப்பிரகாரமாகவும் உயிர்த்தெழுவார்கள். ஆனால் நித்திய மரணம், நித்திய ஆக்கினைக்குட்படுவதாக உள்ளது. உயிர்த் தெழுதலையும் பரலோகத்தையும்பற்றி வேதாகமம் குறிப்பிடும் சத்தி யங்களைச் சரியானவிதத்தில் அறிந்துகொள்வதற்கு, மனிதருக்கு ஏற்படும் இம்மூன்றுவிதமான மரணங்களையும், இரண்டு விதமான உயிர்த்தெழுதல்களையும்பற்றி சரியானவிதத்தில் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

***(அ). ஆவிக்குரிய மரணமும் உயிர்த்தெழுதலும்:*** வேதாகம மொழிவழக்கில் மரணம் பிரிவையே குறிக்கின்றது. இதனால், ஆவிக்கு ரிய மரணம் தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலிருக்கும் பிரிவாகவும், சரீர மரணம் மானிட சரீரத்திலிருந்து ஆவிக்குரிய பகுதி (அதாவது ஆவியும் ஆத்துமாவும்) பிரிவடைவதாகவும், நித்திய மரணம் தேவனுட னான நிரந்தரப் பிரிவாகவும் உள்ளது. உலகில் மனிதர்களாகப் பிறக்கும் அனைவரும் ஆவிக்குரியபிரகாரம் மரித்தவர்களாகவே உள்ள னர் (மத்.8:22).[162] இவர்கள் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்க ளாக இருப்பதாக வேதாகமம் கூறுகிறது (எபே.2:1,5). இதற்குக் காரணம், உலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் உலகின் முதல் மனிதனான ஆதாம் என்பவனுடைய வம்சத்தினராக இருப்பதேயாகும்

திலும், இவ்வசனத்தில் கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றியே பவுல் குறிப்பிட்டுள்ளதை 23ம் வசனம் அறியத்தருகின்றது. எனவே, 22ம் வசனத்தில், கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பது, சகல மக்களையும் அல்ல அவருக்குள் இருப்பவர்களை மட்டுமே குறிக்கின்றது (W.V.Crockett, "The Ultimate Restoration of All Mankind: 1Corinthians 15:22" pp. 83-87). மேலும், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைப்பற்றியே பவுல் விளக்குவதனால், இவ்வச னத்தைச் சகல மக்களினதும் உயிர்த்தெழுதலைப்பற்றிய குறிப்பாகக் கருத முடியாது.

162 "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்" (மத்.8:22) என்னும் கூற்று "ஆவிக்குரிய மரணத்திலிருப்பவர்கள் தங்களில் சரீரப்பிரகாரமாக மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும்" என்னும் அர்த்தமுடையது.

தேவனுடன் உறவற்ற நிலை அல்லது பிரிவே ஆவிக்குரிய மரணமாக இருப்பதோடு, பாவமே இத்தகைய உறவற்ற நிலைக்கான காரணமாயுள்ளது.

(அப்.17:26).[163] ஆதாம் நம்மைப்போல தாயின் வயிற்றில் உருவாகிப் பிறக்கவில்லை. அவன் தேவனால் சிறப்பான முறையில் சிருஷ்டிக் கப்பட்டான் (ஆதி. 2:7). இதனால் அவன் தேவனோடு அந்நியோன்ய ஐக்கியமுள்ளவனாக இருந்தான் (ஆதி.3:8).[164] ஆனால், அவன் தேவ கட்டளையை மீறிப் பாவம் செய்தபோது, தேவனுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த ஐக்கியம் முறிவடைந்தது. விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தால் அவன் மரணமடைவான் என்றே தேவன் தெரிவித்தி ருந்தார் (ஆதி.2:17).[165] ஆனால், அவனோ அக்கனியைப் புசித்தபின்பும் சரீரப்பிரகாரமாக உயிரோடிருந்தாலும் அதுவரை காலமும் இருந்தவித மாகத் தேவனுடைய பிரசன்னத்தில் நிற்க முடியாதவனாயிருந்தான் (ஆதி.3:8-10).[166] மேலும், தேவன் ஆதாமைச் சந்திக்கும் ஏதேன் தோட்

[163] "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஓரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப் பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக் கிறார்" என்பதை அப்போஸ்தலர் 17:26 அறியத்தருகின்றது.

[164] ஆதியாகமம் 3:8ல் "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்" என்னும் வாக்கியம் மூலமொழியில் இது தேவனுடைய அன்றாட செயலாயிருந் துள்ளதை அறியத்தருகின்றது. எனவே, ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாமு டன் அனுதினமும் பேசி மகிழ்வதைத் தன்னுடைய வழக்கமாகக் கொண்டிருந் தார் என்பதை இவ்வாக்கியம் சுட்டிக்காட்டுகிறது (G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 76). இவ்வசனத்தில் "உலாவுதல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லே, இஸ்ரவேல் மக்களுடைய ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனுடைய பிரசன்னம் இருந்ததைக் குறிப்பிடுவதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

[165] "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட் சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16-17).

[166] "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்" (ஆதி.3:8)

டத்திலிருந்தும் அவன் துரத்தப்பட்டதோடு, அத்தோட்டத்திற்குள் மறுபடியும் செல்ல முடியாத நிலையிலும் இருந்தான் (ஆதி.3:23-24). இதற்குக் காரணம், அதுவரைகாலமும் ஆதாமுக்குத் தேவனோடு இருந்த உறவு முறிவடைந்ததேயாகும். உண்மையில், தேவனுடன் உறவற்ற நிலையில் பிரிந்திருப்பதே ஆவிக்குரிய மரணமாக உள்ளது.

தேவனுடன் உறவற்ற நிலை அல்லது பிரிவே ஆவிக்குரிய மரணமாக இருப்பதோடு, பாவமே இத்தகைய உறவற்ற நிலைக்கான காரணமாக உள்ளது. இதனால்தான், "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்று வேதாகமம் கூறுகிறது (ஏசா.59:2). எனவே, தேவனையும் மனிதனையும் பிரிக்கும் பாவம் நீக்கப்பட்டால் மாத்திரமே மனிதரால் தேவனோடு உறவு கொள்ளக்கூடிய நிலை ஏற்படுகின்றது. மனிதர் அனைவரும் ஆதாமின் வம்சத்தினராக இருப்பதனால் (அப்.17:26) எல்லோருமே பாவிகளாகவும் (ரோ.3:9-12, 3:23) தேவனுடன் உறவற்றவர்களாகவும் இருக்கின்றனர் (எபே.2:12, 4:18).[167] பெற்றோரின் சுபாவங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படுவதுபோல, ஆதாமின் பாவம் அவனுடைய வம்சத்தினர் அனைவரிலும் காணப்படுகின்றது (ரோ.5:12).[168] இதனால் சகல மனிதரும் இவ்வுலகில் பாவிகளாகவே பிறக்கின்றனர் (சங்.51:5). வேதாகமம் இவர்களை ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்களாகச் சித்தரித்துள்ளது (எபே. 2:1,2:5).[169] இயேசுகிறிஸ்துவை அறியாதவர்கள் தேவனற்றவர்களாகவும் (எபே.2:12), தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராகவும் இருப்பதனால் (எபே.4:18), அவர்கள் ஆவிக்குரிய ஜீவன் அற்றவர்களாக, ஆவிக்குரிய பிரகாரம் மரித்தவர்களாயுள்ளனர்.

---

167 எபேசு சபை மக்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கு முன்னர் தேவனற்றவர்களாக இருந்ததாக எபேசியர் 2:12 கூறுகிறது. அதேசமயம் அவர்கள் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்ததாக எபேசியர் 4:18ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

168 "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது" என்பதை ரோமர் 5:12 அறியத்தருகின்றது. அதாவது, முதல் மனிதனான ஆதாமின் பாவத்தினால் பாவமும் அதன் விளைவாக மரணமும் ஏற்பட்டது.

169 எபேசு சபை மக்கள் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாக இருந்தது அவர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கு முன்பிருந்த நிலை என்பதை எபேசியர் 2:1, 2:5 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன.

## இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக் கொள்பவர்கள் ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடன் ஜீவனுள்ள உறவுக்குள் வருகின்றனர்.

பாவமே தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் பிரிவை ஏற்படுத்தியுள்ளமையால், இப்பிரிவு நீங்குவதற்கு தேவனையும் மனிதரையும் பிரிக்கும் பாவம் நீக்கப்பட வேண்டியது அவசியம். மனிதரால் இக் காரியத்தைச் செய்யமுடியாதிருப்பதனால், தேவனே மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்து (1தீமோ.3:16) இயேசு என்னும் பெயரில் வாழ்ந்து (மத்.1:21), மக்களுடைய பாவம் போக்கும் பலியாகச் சிலுவையில் மரித்தார் (1யோவா.2:2).[170] இதனால் அவருடைய இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரித்து (1யோவா.1:7), தேவனுடனான ஜீவனுள்ள உறவுக்குள் நம்மைக் கொண்டுவருகிறது (ரோ.5:10).[171] இவ்வாறு மனிதர் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசிப்பதன் மூலம் தேவனையும் மனிதரையும் பிரிக்கும் பாவம் நீக்கப்பட்டு தேவனுடன் ஜீவனுள்ள ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்வது, ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப் படுவதாக உள்ளது. வேதாகமம் இதைப்பற்றி கூறும்போது. "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை

[170] தேவன் சர்வவல்லமையுள்ளவராகவும் அன்புள்ளவராகவும் இருப்பதனால், பாவத்திற்கான பிராயச்சித்தப் பலி இல்லாமல் மனிதரை இரட்சித்திருக்கமுடியாதா என்பது அநேகரது உள்ளத்தில் இருக்கும் கேள்வியாகும். ஆனால், தேவன் அன்புள்ளவராகவும், சர்வவல்லமையுள்ளவராகவும் மட்டுமல்ல, அவர் பரிசுத்தமானவராகவும், பாவத்தை வெறுப்பவராகவும் இருக்கின்றார். அதே சமயம் அவர் நீதியுள்ள நியாயாதிபதியாகவும் இருப்பதனால், அவருடைய நீதிச்சட்டத்தின்படி பாவத்தை அவர் தண்டிக்கவேண்டியவராகவும் இருக்கின்றார். அன்புள்ள தேவன் மனிதரை நேசிப்பதனால், அவர்களைத் தண்டிக்காமல், பாவத்திற்கான தண்டனையை தாமே ஏற்றுக்கொண்டு, மனிதர்களுக்கு பாவமன்னிப்பையும் பரலோக வாழ்வையும் அருளியுள்ளார்.

[171] "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்று ரோமர் 5:10 கூறுகிறது.

உயிர்ப்பித்தார்" என்றும் (எபே.2:1), "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" என்றும் (எபே.2:5), "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்றும் (எபே.2:7) குறிப்பிட்டுள்ளது. உண்மையில், தேவனுடன் உறவற்றவர்களாக ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்கள், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக் கொள்ளும்போது, ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடன் ஜீவனுள்ள உறவுக்குள் வருகின்றனர். இதுவே கிறிஸ்தவ வாழ்வில் இரட்சிப்பின் அனுபவமாய் உள்ளது.

***(ஆ). சரீர மரணமும் உயிர்த்தெழுதலும்:*** இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசிப்பதன் மூலம், ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுபவர்கள் சரீரப்பிரகாரமாக ஒரு நாள் மரிப்பார்கள். ஏனெனில் மானிட சரீரம் அழியக்கூடியது. மனிதனில் சரீரம் மட்டுமல்ல ஆவி, ஆத்துமா என்னும் ஆவிக்குரிய பகுதியும் இருப்பதாகவும், இது அழியாதது என்றும் நாம் ஏற்கனவே பார்த்தோம்.[172] இதனால், சரீர மரணத்தின்போது, மனிதரின் சரீரம் மண்ணுக்குச் சென்றிட, அவர்களுடைய ஆவிக்குரிய பகுதியோ, அவர்கள் உலகில் வாழும் காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசிப்பதையும், விசுவாசியாததையும் அடிப்படையாகக்கொண்டு வித்தியாசமான இடங்களுக்குச் செல்கின்றன. இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மரிக்கும்போது அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி அவரிடம் செல்கின்றது. ஆனால், அவரை அறியாதவர்கள் மரணத்தின் பின்னர் "ஹேதீஸ்" என்று கிரேக்க மொழியில் அழைக்கப்படும் இடத்திற்குச் செல்கின்றனர். இது எங்கிருக்கின்றது என்பதை வேதாகமம் வெளிப்படுத்தவில்லை.

இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, அவருக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவதாக வேதாகமம் கூறுகிறது. அச்சமயம், இயேசுகிறிஸ்துவிடம் சென்ற அவர்களுடைய ஆவிக்குரிய பகுதி மண்ணுக்குச் சென்ற சரீரங்களுடன் இணைக்கப்பட்டு, மகிமையின் சரீரங்களுடன் அவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களே உயிர்ப்

[172] பக்கங்கள் 15-19.

பிக்கப்படுவதாக வேதாகமம் கூறுவதனால் (1கொரி.15:23),[173] அவருக்குள் மரிக்காதவர்கள் அச்சமயம் உயிர்ப்பிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது. இதனால் இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களும், பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் அச்சமயம் உயிர்ப்பிக்கப்படுவதில்லை. (இவர்கள் எப்போது உயிர்த்தெழுவார்கள் என்பதுபற்றி இவ்வத்தியாயத்தின் பிற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது).

## இயேசுகிறிஸ்து மறுபடியும்வரும்போது அவருக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவதோடு, அக்காலத்தில் உலகில் உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும் மறுரூபமாக்கப்படுவார்கள்

இயேசுகிறிஸ்து மறுபடியும்வரும்போது அவருக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவது மட்டுமல்ல, அக்காலத்தில் உலகில் உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும் மறுரூபமாக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு நித்தியகாலமாக வாழ்வார்கள். “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் நாமும் மறுரூபமாக்கப்படுவோம்” (1கொரி.15:51-52) என்று கூறும் வேதாகமம், “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்” (1தெச.4:16-17) என்பதை அறியத்தருகின்றது. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, “வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்

[173] “அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்” என்பதை 1கொரிந்தியர் 15:23 அறியத்தருகின்றது.

பார்கள்" (மத்.24:31). இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது இவ்வாறு உலகிலிருந்து கூட்டிச்சேர்க்கப்படும் கிறிஸ்தவர்களும், உயிர்ப்பிக்கப் படும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் அதன்பின்னர் மகிமையின் சரீரத்துடன் பரலோகத்தில் இருப்பார்கள்.[174] இவர்களே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மீட்கப்பட்ட மக்களைக்கொண்ட சபையாக உள்ளனர். வெளிப்படுத்தல் 4ம் 5ம் அதிகாரங்களில் இவர்கள், தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி அமர்ந்திருக்கும் 24 மூப்பர்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளனர். நாம் ஏற்கனவே பார்த்தபடி, இவர்கள் இயேசுகிறிஸ்துவின் நீதியைப் பெற்றவர்களாகவும், நியாயந்தீர்க்கப்பட்டு[175] வெற்றியாளர்களா கவும் இருப்பதை அறியத்தருவதற்காக இவர்கள் வெண்வஸ்திரம் தரித்தவர்களாகவும் பொன்முடி சூடப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். உண்மையில், இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களுக்கு உயிர்த்தெழு தலின் பின்னர் கிடைக்கும் உன்னதமான நிலையாக இது உள்ளது.

கிறிஸ்தவ சபையின் மக்கள் (உயிரோடிருப்பவர்களும் மரித்தவர்க ளும் எபே.3:14) சரீரப்பிரகாரமாகப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்ட பின்னர் உலகில் ஏழு வருஷங்கள் அந்திகிறிஸ்துவின் ஆட்சி நடைபெறும். அக்காலத்தில் தேவன் கிறிஸ்தவ சபையுடனான தமது செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவந்தாலும், பழைய ஏற்பாட்டுக் காலத்தைப்போல அவர் மறுபடியுமாக யூதர்களுடன் செயற்படத் தொடங்குவார். இவ்வேழு வருஷகாலத்தின் இறுதி மூன்றரை வரு ஷங்கள் உலகில் இருக்கும் மக்களுக்கு கொடிய உபத்திரவங்கள்

---

[174] இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்னர் எப்படிப்பட்ட சரீரத்துடன் இருந் தாரோ அப்படிப்பட்ட மகிமையின் சரீரத்துடனேயே மரித்தோர் உயிர்ப்பிக்கப்படு வார்கள். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்பதை பிலிப்பியர் 3:21 அறியத்தருகின்றது. அப்போது, நாம் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று 1யோவான் 3:2 கூறுகிறது. உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் சரீரம், அவர் யார் என்பதைக் கண்டுகொள்ளக்கூடியவிதத்தில் இருந்தது. ஆனால், மாம்ச சரீரத்தின் வரையறைகள் அற்றதாகவும், மூடியி ருந்த அறைக்குள் செல்லக்கூடியதாகவும் இருந்தது. மேலும், மனிதர்கள் தொட்டுப் பார்க்கக் கூடியவிதமாக, மாம்சமும் எலும்பும் உள்ளதாக இருந்தது (லூக்.24:39, யோவா.20:19-20). உயிர்ப்பிக்கப்படும் மரித்தோரின் சரீரங்கள் மட்டுமல்ல, இயேசுகிறிஸ்து வரும்போது எடுத்துக்கொள்ளப்படும் விசுவாசிக ளின் சரீரங்களும் இவ்விதமாக மாற்றப்படும் (1கொரி.15:51-52). இது ஒருபோதும் அழியாததும், மரிக்காததுமான மகிமையான நித்திய சரீரமாக இருக்கும் (1கொரி.15:53 S.Zodhiates, *What You Should Know About Life After Death*, pp. 85-90).

[175] பக்கங்கள் 77-93.

ஏற்படும். வெளிப்படுத்தல் புத்தகத்தில் 4ம் அதிகாரம் முதல் 18ம் அதிகாரம் வரை முன்னறிவிக்கப்பட்டுள்ள காரியங்கள் இவ்வேழு வருஷ உபத்திரவக் காலத்தில் நிறைவேறும். உபத்திரவக் காலத்தின் முடிவில், அக்காலத்தில் இரட்சிக்கப்பட்டு மரணமடையும் பக்தர்களும்,[176] பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

**மண்ணுக்குள் சென்ற சரீரமும், இயேசுகிறிஸ்துவிடம் சென்ற ஆத்துமாவும் மறுபடியும் ஒன்றாகச் சேர்க்கப்படுதலே உயிர்த்தெழுதல் ஆகும்.**

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, தானியேல் 9ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்ட "வரப்போகிற பிரபுவாகிய அந்திகிறிஸ்துவின்" ஏழு வருஷகால ஆட்சி ஆரம்பமாகும். இதன் முடிவில் இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகை சம்பவிக்கும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் இவ்வாறு "இரகசிய" மற்றும் "பகிரங்க" வருகை என்னும் இரு அம்சங்கள் உள்ளன. இயேசுகிறிஸ்துவின் மறுவருகை ஆரம்பத்தில் அவரது வருகைக்காக காத்திருக்கும் விசுவாசிகளுக்கானது என்பதை எபிரேயர் 9:28 1தெசலோனிக்கேயர் 4:17 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன.[177] ஆனால் அதன் பின்னர், அவர் கோபாக்கினையோடு வருவார் என்பதை 2தெசலோனிக்கேயர் 1:7-8 சுட்டிக்காட்டுகிறது.[178] வருகைக்காக காத்திருப்பவர்களைச்

---

[176] உலகிலிருந்து கிறிஸ்துவின் சபை எடுத்துக்கொள்ளப்பட்டபின்பு திரளான மக்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை வெளி.7:9-17 அறியத்தருகின்றது. எனினும் இவர்கள் உபத்திரவக் காலத்தின் இறுதிப் பகுதியில் அந்திகிறிஸ்துவை வழிபட மறுப்பதனால் இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (வெளி.13:15).

[177] "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி.9:28). "உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச.4:17).

[178] "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" என்று 2தெசலோனிக்கேயர் 1:7-8 கூறுகிறது.

சந்திக்க இயேசுகிறிஸ்து கோபாக்கினையோடு வருவதில்லை என்பத னால் இவையிரண்டும் அவர் வருகையின் வெவ்வேறு அம்சங்கள் என்பது தெளிவாகின்றது. ஆரம்பத்தில் விசுவாசிகளைத் தம்மோடு சேர்த்துக்கொள்வதற்காக வரும் இயேசுகிறிஸ்து, அதன் பின்னர் தம்மோடிருக்கும் பரிசுத்தவான்களோடு வருவார் என்பதை யூதா 15ம் வசனம் அறியத்தருகிறது.[179] மேலும், அவர் ஆரம்பத்தில் வானத்திற்கே வருவார் (1தெச. 4:17).[180] ஆனால் கடைசியில் பூமி வரைக்கும் வரு வார் (சக.14:4).[181] எனவே, ஆரம்பத்தில் தமக்காகக் காத்திருக்கும் விசுவாசிகளை எடுத்துக்கொள்வதற்காக வானத்திற்கு வரும் இயேசு கிறிஸ்து, கடைசியில் எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவார்.[182]

வெளிப்படுத்தல் 20:4ல், உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப்படும் பக்தர்களின் உயிர்த்தெழுதலைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.[183] இது முதலாவது உயிர்த்தெழுதல் என்று அடுத்த வசனம் கூறுவது அநேக ருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், “மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை” என்பதை இவ்வசனம் அறியத்தருவதனால், 4ம் வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள உயிர்த்தெழுதல் முதலில் நடைபெறும் சம்பவமாக இருப்ப தையும், ஏனையவர்கள் அதன்பின்னர் உயிர்த்தெழுவார்கள் என்பதை

---

[179] “தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைக ளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித் தான்” என்று யூதா 15ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[180] இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதாக அல்ல, கிறிஸ்தவ விசுவாசிகள் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாகவே 1தெச.4:17 கூறுகிறது.

[181] “அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்” என்று சகரியா 14:4 கூறுகிறது.

[182] இதில் முதலாவது “இரகசிய வருகையாகவும்” மற்றது “பகிரங்க வரு கையாகவும்” உள்ளது. வேதாகமத்தில் இத்தகைய பெயர்கள் இல்லாத போதிலும், இவை வேதாகம சத்தியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள்.

[183] வெளிப்படுத்தல் 20:4ல், “இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனு டைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்க ளையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்” என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

யும் அறியத்தருவதற்காக இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.[184] அதாவது, இவ்வதிகாரம் இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சிக்காலத்தைப் பற்றிய தரிசனமாக இருப்பதனால், முதலில் உபத்திரவக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரித்தவர்களும், அதன் பின்னர் (அதாவது ஆயிர வருஷ ஆட்சியின் பின்) ஏனையவர்களும் உயிர்த்தெழுவார்கள் என் னும் அர்த்தத்தில், முதலாவது என்னும் சொல் 4ம் வசனத்தில் உப யோகிக்கப்பட்டுள்ளது.[185]

பழைய ஏற்பாட்டுக்கால பக்தர்களும் உபத்திரவக் காலத்தின் முடிவி லேயே உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதை தானியேல் 12:1-2 அறியத் தருகின்றது.[186] "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும். அக்காலத்திலே புஸ்த கத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே நித்திரை பண்ணு கிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" என்று தானி யேல் 12:1-2ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.[187] முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆபத்துக் காலம், அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலமான உபத்திரவக் காலத்தையே குறிக்கின்றது.[188] எனவே, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் உபத்திரவக் காலத்தின் முடிவிலேயே உயிர்ப்பிக்கப்டுவார்கள். எனினும், ஏனையவர்கள், அதாவது உபத்திர வக் காலத்தின் ஆரம்பத்தில் உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களையும்,

---

[184] C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 1336.

[185] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, pp. 298-299.

[186] தானியேலுக்கு கொடுக்கப்பட்ட தரிசனங்கள் யூதர்களுக்குப் பிற்காலத்தில் சம்பவிப்பவைகளைப் பற்றிய முன்னறிவிப்புகளாகவே உள்ளன.

[187] பழைய ஏற்பாட்டுக்கால பக்தர்களும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உள்ள வர்களாய் இருந்துள்ளதை யோபு 19:25-26 அறியத்தருகின்றது. இவ்வசனங்களில் "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்" என்று யோபு குறிப்பிட்டுள்ளார். ஏசாயா 26:19ல் மரித்தோரின் உயிர்த்தெழுதல் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வசனத்தில், "மரித்த உம்முடையவர்கள் பிரேத மான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள். மண்ணிலே தங்கியிருக்கி றவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள். உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனிபோல் இருக்கும். மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்" என்று ஏசாயா அறிவித்துள்ளார்.

[188] C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 1336.

உபத்திரவக் காலத்தின் முடிவில் உயிர்ப்பிக்கப்பட்ட மக்களையும் தவிர, ஏனையவர்கள் ஆயிரம் வருஷம் முடிவடையும் வரை உயிரடையவில்லை என்று வெளிப்படுத்தல் 20:5 அறியத்தருகின்றது. எனவே, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களும், பழைய ஏற்பாட்டு பக்தர்களும் வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக்கு முன்னர் உயிர்ப்பிக்கப்பட்டு, அவரோடுகூட ஆயிரம் வருஷங்களுக்கு ஆளுகை செய்கிறவர்களாக இருப்பார்கள்.

***(இ). நித்திய மரணம்:*** வெளிப்படுத்தல் புத்தகத்தில் முதல் மூன்று அதிகாரங்களிலும் கிறிஸ்தவ சபை உலகத்திலிருக்கிறது. 4ம் அதிகாரத்தில் சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்திலிருக்கிறது. இதனால்தான் முதல் மூன்று அதிகாரங்களிலும் பல தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ள சபை என்னும் சொல் 4ம் அதிகாரத்திற்குப் பின்னர் புத்தகத்தின் முடிவுரை வரை (22:16) இடம்பெறவில்லை.[189] மேலும், வெளிப்படுத்தல் 4:1ல், “இவைகளுக்குப் பின்பு” என்னும் சொற்பிரயோகம் “சபைகளுக்குப் பின்பு” என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[190] எனவே, சபைக் காலத்திற்குப் பின்பு, அதாவது சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு உலகில் நடைபெறும் சம்பவங்களே வெளிப்படுத்தல் 18ம் அதிகாரம் வரை முன்னறிவிக்கப்பட்டுள்ளன.[191] இவை ஏழு வருஷங்களுக்கு உலகில் நீடிக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தைப்பற்றிய தீர்க்கதரிசனங்களாகும்.[192] அதன்பின்னர் நடைபெறும் இயேசுகிறிஸ்து

---

[189] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 103.

[190] வெளிப்படுத்தல் 4:1 புதியதோர் தரிசனத்தின் ஆரம்பமாக உள்ளது (R.L. Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 333). முதல் மூன்று அதிகாரங்களிலும் பூலோகத்திலிருக்கும் சபைகளின் நடுவில் உலாவுகிற இயேசுகிறிஸ்துவை 4ம் அதிகாரத்தின்பின் பரலோகத்திலிருக்கிறவராக யோவான் காண்கின்றார் (H.B.Swete, *The Apocalypse of St.John,* p. 66; R.H.Charles, *The Revelation: International Critical Commentary,* p. 106).

[191] C.A.Blanchard, *Light on the Last Days*, pp. 25-26.

[192] அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்காலம் ஏழரை வருஷங்களுக்கு நீடிக்கும் என்பது தானியேலின் எழுபது வாரங்களைப்பற்றிய தரிசனத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ளும் சத்தியமாகும் (தானி.9:24-27). இது வழமையான நாட்களைக் கொண்ட வாரங்கள் அல்ல வருஷங்களைக் கொண்ட வாரங்களா கும். இவற்றில் 69 வாரங்களைப்பற்றிய தரிசனங்கள் ஏற்கனவே யூதர்களு டைய சரித்திரத்தில் நிறைவேறியுள்ளன. தானியேலின் தரிசனத்தில் 69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடையில் கால இடைவெளி இருப்பதை நாம் காணலாம்.

வின் பகிரங்க வருகை வெளிப்படுத்தல் 19ம் அதிகாரத் தில் விபரிக்கப் பட்டுள்ளது.[193] அச்சமயம் உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்க ளும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (வெளி. 20:4, தானி.12:1-2). ஆனால், மரணமடைந்த ஏனையவர்கள், அதாவது தேவனுடைய வெளிப்படுத்தலை நிராகரித்தவர்கள் இன்னும் ஆயிரம் வருஷகாலம் உயிர்ப்பிக்கப்படாமல் இருக்கின்றனர். ஆயிரம் வருஷங்க ளின் பின்னர், அவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, நாம் ஏற்கனவே பார்த்தபடி

---

இக்கால இடைவெளியிலேயே சபைக்காலம் உள்ளது. சபைக்காலத்தின் முடிவில், அதாவது சபை உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் 70வது வார காலத்தைப்பற்றிய தரிசனங்கள் நிறை வேறும், இத்தரிசனங்களே வெளிப்படுத்தல் 4 முதல் 18 வரையிலான அதிகாரங்களில் உள்ளன. தானியேலின் தரிசனத்தில் வாரங்கள் வருஷங்க ளைக் கொண்ட வாரங்களாக இருப்பதனால், ஒரு வாரம் ஏழு வருஷங்களைக் கொண்டுள்ளது. இதனால் 70வது வாரமான உபத்திரவக்காலம் 7 வருஷங்க ளைக் கொண்டுள்ளது. இதில் முதல் மூன்றரை வருஷங்கள் சமாதானமான தாகவும் இறுதி மூன்றரை வருஷங்கள் கொடிய உபத்திரவங்களினால் நிறைந்ததாகவும் இருக்கும். தானியேல் 9:27ல் இதுபற்றி முன்னறிவிக்கப்பட் டுள்ளது. தானியேலின் எழுபதாவது வாரத்தில் ஒரு வாரம் ஏழு வருஷங்கள் என்பதனால், 9:27ல் குறிப்பிடப்பட்டுள்ள சமாதானமான காலமான நடுப்பகுதி வரை மூன்றரை வருஷங்கள் உள்ளன. எனவே எஞ்சியிருக்கும் காலமும் மூன்றரை வருஷக்காலமாகும். இந்த மூன்றரை வருஷக்காலம் தானியேலின் புத்தகத்திலும் வெளிப்படுத்தலிலும் "காலமும் காலங்களும் அரைக்காலமும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (தானி.7:25, 12:7. வெளி.12:14). "இதில் காலம் ஒரு வருடத்தையும், காலங்கள் இரண்டு வருஷங்களையும், அரைக் காலம் ஆறு மாதங்களையும் குறிக்கின்றது. எனவே மொத்தம் மூன்றரை வருஷங்கள். இந்த மூன்றரை வருஷக்காலப்பகுதி வெளிப்படுத்தல் புத்தகத் தில் 42 மாதங்கள் என்றும் 1260 நாட்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது (வெளி.11:2, 13:5) இவை யூதர்களுடைய 360 நாட்கள் கொண்ட வருஷக் கணிப்பீட்டின்படி மூன்றரை வருஷங்களாகவே உள்ளன. வெளிப்படுத்தல் 4 முதல் 19 வரையிலான அதிகாரங்களில் பெரும்பாலான தரிசனங்கள் இந்த மூன்றரை வருஷ கடும் உபத்திரவக்கால சம்பவங்களாகும்.

[193] இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும். அந்திகிறிஸ்துவின் ஆட்சியான உபத்திரவக்காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு மத்திய வானம் வரை வரும் இயேசுகிறிஸ்து உலகிலிருக்கும் கிறிஸ் தவ சபையின் மக்களைத் தம்மோடு இருக்கும்படி எடுத்துக்கொள்வார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ஏழரை வருஷ உபத்திரவக் காலத்தின் முடிவில் இயேசுகிறிஸ்து தம்மோடு எடுத்துக்கொள்ளப் பட்ட சபைமக்களோடு பூமிக்கு வந்து உலகத்தை நியாயந்தீர்ப்பார். அச்சமயம் உபத்திரவக்காலத்தில் தேவனை ஏற்றுக்கொண்டு இரத்தசாட்சிகளாக மரித்தவர்க ளும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். சில கிறிஸ்தவர்கள் இவையனைத்தும் ஒரே நேரத்தில் நடைபெறும் என்று கருதுகின்றனர். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இரு கட்டங்களாக நடைபெறும்விதத்திலேயே வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய வெளிப்படுத்தலை நிராகரித்தவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (வெளி.20:11-15).[194] இதுவே நித்திய மரணமாக அல்லது இரண்டாம் மரணமாக உள்ளது. இவ்வாறு மரணமடைபவர்கள் நிரந்தரமாகத் தேவனை விட்டுப் பிரிக்கப்பட்டவர்களாக அக்கினிக் கடலாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் நரகத்தில் வேதனைப்படுவார்கள். உண்மையில், நரகம் பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தமாக்கப்பட்ட இடமாகும் (மத்.25:41). பரலோகத்திற்குச் செல்லமுடியாதவர்கள் அனைவரும் கடைசியில் இவ்விடத் திற்கே செல்கின்றனர் (2தெச.1:7-10, வெளி.20:13-15, யூதா.7, மத்.25:41, 25:46, மாற்.3:29).



# 6. நாமும் பரலோகமும்

மரணத்தின்போது, மனிதருடைய சரீரம் மண்ணுக்குச் சென்றாலும், மனிதருடைய ஆவிக்குரிய பகுதி இயேசுகிறிஸ்துவிடம் பரலோகத்திற்குச் செல்கின்றது என்னும் வேதாகம சத்தியத்தை அறிந்துகொண்ட நமக்கு, மரணமானது விண்ணுலக வாழ்வுக்கான ஒரு முத்திரையாக இருப்பதற்கு நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் வரவேண்டியது அவசியம். ஏனெனில், இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களுடைய ஆவிக்குரிய பகுதி மாத்திரமே பரலோகத்திற்குச் செல்கின்றது. இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, தற்போது அவரிடம் இருக்கும் மரித்தோரின் ஆவிகளையும் அவர் தம்மோடு கொண்டுவருவது மட்டுமல்ல, அவற்றை மறுபடியுமாக மண்ணுக்குச் சென்ற சரீரங்களுடன் சேர்த்து, மனிதருக்குப் புதியதோர் வாழ்வைத் தருவார். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்வரை நாம் இவ்வுலகில் உயிருடனிருந்தால், நம்முடைய சரீரங்களை அவர் மகிமையின் சரீரமாக மாற்றுவதனால், மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டவர்களுடனும் இயேசுகிறிஸ்துவுடனும் நாம் நித்திய காலமாக வாழத்தொடங்குவோம். வேதாகமம் இதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து,

---

[194] இதுபற்றி 87-93ம் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது.

அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோ டேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன் னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்க ளுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப் போம் (1தெச.4:13-17).

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது மரணத்தின் பின் அவரிடம் சென்றவர்களும், இவ்வுலகத்தில் அவருக்குள் வாழ்பவர்களும் மட் டுமே அவரோடு நித்திய காலமாக இருக்கும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய (இயேசுகிறிஸ்துவி னுடைய)[195] அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத் தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொ ண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார் கள்" (மத்.24:30-31) என்று அறிவித்த இயேசுகிறிஸ்து, "அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான். மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படு வாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்" (லூக்.17:34-

---

[195] மனுஷகுமாரன்" என்பது இயேசுகிறிஸ்து தமக்கு உபயோகித்த மேசியப் பெயராகும். இது தானியேல் 7ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது.

36) என்பதை அறியத்தந்துள்ளார். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும் நாளில் அவருக்குள் இருப்பவர்களும், அவரை ஏற்றுக் கொள்ளாதவர்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்படுவார்கள் என்பதையே அவருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால், இன்றே நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய வாழ்வின் தெய்வமாக ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியம். அப்பொழுது மாத்திரமே நமக்கு நித்தியகாலமாக அவரோடு வாழக்கூடிய ஆசீர்வாதம் கிடைக்கும் (யோவா.3:36).[196] எனவே, "இருப்பிடம் சரியில்லை என்பதற்காக, இடத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய சுயாதீனம் மரணத்தின்பின் எவருக்கும் கிடைப்பதில்லை"[197] என்பதை நாம் இவ்வுலகில் வாழும்காலத்தில் மறந்துவிடக்கூடாது.

தற்காலத்தில் மனிதர்கள் மரண பயத்துடன் வாழ்வதற்குக் காரணம் அவர்கள் மரணத்தின் ஒரு பக்கத்தை மட்டும் அறிந்திருப்பதேயாகும். அதன் மறுபக்கம் இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களுக்கு வேதனை மிகுந்த நரகமாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்களுக்கு அது மகிமையான நித்திய வாழ்வாகவே உள்ளது. எனினும், மரணம் மானிட பாவத்தின்மீதான தேவ தண்டனையாகவே உள்ளது (ரோ.6:23, ஆதி.2:17, 3:17-19). பாவமே மரணத்தைக் கொண்டு வந்தது (ரோ.5:12, 5:17-19). பாவியான மனிதர்மீது தேவன் கிருபையாக இருப்பதனால், மானிட பாவத்தைப் போக்கும் பலியாக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார் (யோவா.1:29, 3:16-17, 2கொரி.5:14-15, எபி.2:9, 1யோவா.2:1-2, 4:14, 1தீமோ.2:6, ஏசா.53:12). பாவத்தின் தண்டனையான மரணத்தை இயேசுகிறிஸ்து தாமே ஏற்றுக்கொண்டு, மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்ததினால், அவருக்குள் இருப்பவர்களுக்கு மரணம் நித்தியகாலமாக அவருடன் வாழ்ந்திடும் ஆனந்தமான வாழ்வுக்கு ஒரு முத்திரையாகவே உள்ளது. பாவியான மனிதன், இயேசுகிறிஸ்து தன்னுடைய பாவத்திற்கான பலியைச் செலுத்தியதை விசுவாசித்து, அவரைத் தன்னுடைய இரட்சகராகவும் தெய்வமாகவும் ஏற்றுக்கொள்ளும்போது, நித்தியகாலமாக அவருடன் வாழக்கூடிய ஜீவனை அவரிடமிருந்து பெற்றுக்கொள்கின்றான். இதனால்தான், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை

[196] "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்று யோவான் 3:36 கூறுகிறது.
[197] E.W.Lutzer, *One Minute After You Die*, p. 45.

விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவா.11:25-26) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே நாம் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியை விசுவாசத்தினால் நம்முடையதாக்கிக்கொண்டு, அவருக்குள்ளான வாழ்வை ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுது இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவதற்கு முன்னர் நாம் மரித்தால் அவர் வரும்போது உயிர்ப்பிக்கப்படுவோம். அவர் வரும்வரை நாம் உயிரோடிருந்தால் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவோம். இதுவே இயேசுகிறிஸ்துவுக்குள் இருப்பவனுடைய மரணத்தின் மகிமையான மறுபக்கமாயுள்ளது.

இயேசுகிறிஸ்துவுடன் பரலோகத்தில் வாழ்வதற்கு மெய்க் கிறிஸ்தவர்கள் முடிசூட்டப்படும் மகிமையான நாளே அவர்களுடைய மரண நாள்.

# உசாத்துணை நூல்கள்

## மரணத்தையும் அதன்பின்பான வாழ்வையும் பற்றிய நூல்கள் BOOKS ON DEATH AND AFTER LIFE


Alford, H. *The State of the Blessed Dead*. New York: Randolp & Co. n.d.

Alger, W. *A Critical History of the Dictrine of a Future Life*. New York: Widdleton Publishers, 1866.

Badham, P. *Christian Beliefs About Life After Death*. New York: Barnes & Noble, 1976.

Bailey, L. *Biblical Perspectives on Death*. Philadelphia: Fortress Press, 1979.

Blanchard, John. *Whatever Happened to Hell?* Durham: Evangelical Press, 1993.

Boettner, Loraine. *Immortality*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company. 1956.

Chambers, A. *Our Life After Death*. Philadelphia: George Jacobs & Co., 1897.

Connelly, D. *What the Bible Really Says: After Life*, Downers Grove: Inter Varsity Press. 1995.

Coombs, *Life After Death*. Downers Grove: Inter Varsity Press, 1978.

Cremer. H. *Beyond the Grave*. New York: Harpers & Brothers, 1886.

Donnelly, Edward. *Biblical Teaching on the Doctrines of Heaven and Hell*. Edinburgh: The Banner of Truth Trust, 2005.

Graham, Billy. *Facing Death and the Life After*. Nashville: Wortd Publishing Group, 1987.

Hellwig, M. *What Are They Saying About Death And Christian Hope?* New York: Paulist, Press, 1978.

Hodge, J.A. *Recognition After Death*. New York: American Tract Society, 1889.

Hough, R. *Christian After Death*. Chicago: Moody Press. 1947.

Howard, Deborah. *Sunsets: Reflections for Life's Final Journey*. Wheaton: Crossway, 2005.

Kester. *Life Beyond Death*. Nashville: Southern Baptist Convention, 1930.

Lockyer, Herbert. *Last Words of Saints and Sinners*. Grand Rapids: Kregel, 1969.

Lutzer, Erwin. *One Minute After You Die*. Chicago: Moody Press, 1997.

Morey, R.A. *Death And The After Life*. Minneapolis: Bethany House Publishers, 1984.

Motyer, Alec. *After Death: What Happens When You Die?* Fearn: Christian Focus, 1996

Rawlings, M. *Beyond Death's Door*. Nashville: Thomas Nelson Publishers, 1978.

Schwarz, H. *Beyond the Gates of Death*. Minnesota: Augsburg Publishing House, 1981.

Sproul, R.C. *Surprised by Suffering*, Wheaton: Tyndale House Publishers, 1989.

Stoner, R. *What Do We Know About Life After Death?* Grand Rapids: Zondervan Publishing Company, 1941.

Striker, W. *What Happens After Death?* New York: American tract Society, 1935.

Zodhiates, Spiros. *LWhat you Should Know About Life After Death*. Chattanooga: AMG Publishers, 2002.

## இறையியல் நூல்களும் அகராதிகளும்
## THEOLOGICAL BOOKS AND DICTIONARIES

Boettner, Loraine. *Studies in Theology*. Phillipsburg: Presbyterian and Reformend Publishing Co., 1947.

Boice, James M. *Foundations of the Christian Faith*. Downers Grove/ Leicester: Inter Varsity, Press, 1986.

Berkhof, Louis. *The History of Christian Doctrines*. Edinburgh: The Banner of Truth Trust, 1985.

___________, *Systematic Theology*. Edinburgh: The Banner of Truth Trust, 1988.

Couch, Mal. ed., *Dictionary of Premillennial Theology*. Grand Rapids: Kregel Publications, 1996.

Douglas, J.D. *The New Bible Dictionary*. Leicester: Inter Varsity Press, 1963.

Duffield, Guy P. & Van Cleave, Nathaniel M. *Foundations of Pentecostal Theology*. Los Angeles: L.I.F.E. Bible College, 1983.

Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Books House, 1988.

Ferguson, Sinclair B. & Wright, David F. ed., *New Dictionary of Theology*. Leicester/Downers Grove: Inter Varsity Press, 1988.

Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*. Leicester: Inter Varsity Press, 1994.

Guthrie, Donald. New *Testament Theology*. Leicester: Inter Varsity Press, 1981.

Harris, R. Laird. Archer, Gleason L. Waltke. ed., *Theological Wordbook of the Old Testament*. Chicago: Moody Press, 1980.

Kaiser, Walter C. *Toward an Old Testament Theology*. Grand Rapids: Zondervan Publishing House, 1978.

Kelly, J.N.D. *Early Christian Doctrines*. London: A & C Black Publishers, 1993.

Morris, Leon. *New Testament Theology*. Grand Rapids: Zondervan Publishing House. 1986.

Myers, Allen C. ed., *The Eerdmans Bible Dictionary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1993.

Olson, Roger E. *The Story of Christian Theology*. Leicester: Inter Varsity Press, 1999.

Renn, Stephen D. *Expository Dictionary of Bible Words*. Peabody: Hendrickson Publishers, 2005.

Richards, Lawrence O. *Expository Dictionary of Bible Words*. Hants: Marshall Pickering, 1988.

Ryken, Leland. Wilhoit, James C. Longman, Tremper. ed., *Dictionary of Biblical Imagery*. Downers Grove: Inter Varsity Press, 1998.

Swindoll, Charles. ed., *The Theological Wordbook*. Nashville: Word Publishing, 2000.

Swindoll, Charles. & Zuck, Roy. ed., *Understanding Christian Theology*. Nashville: Thomas Nelson Publishers, 2003.

Tenney, Merrill C. *New International Bible Dictionary*. Grand Rapids: Zondervan Publishing House, 1987.

Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdman Publishing Company, 1979.

Vine, W.E. Unger, Merrill. White, William. ed., *Vine's Expository Dictionary of Biblical Words*. Nashville: Thomas Nelson Publishers, 1985.

## வேதாகம வியாக்கியான நூல்கள்
## BIBLICAL COMMENTARIES


Akin, D.L. *1,2,3 John: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2001.

Barnett, P. *2Corinthians: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1977.

Beasley-Murray. George R. *John: Word Biblical Commentary Volume 36*. Nashville: Thomas Nelson Publishers, 1999.

Bock, Darrell L. *Luke: The IVP New Testament Commentary*. Downers Grove: Inter Varsity Press, 1994.

Borchert, *John 1-11: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1996.

Borchert, G.L. *John 12-21: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2002.

Bruce, F.F. *Acts: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

_______. *The Gospel of John: Introduction, Exposition and Notes*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1994.

Carson, D.A. *John: The Pillar New Testament Commentary*,Grand Rapids/ Leicester: Eerdmans Publishing Company/Inter Varsity Press, 1991.

Davids, Peter H. *1Peter: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1990.

Davidson, R. *Ecclesiastes and Song of Solomon*. Edinburgh: The Saint Andrew Press,1986.

Fee, Gordon D. *1Corinthians: The New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1987.

__________. *Philippians: The New International Commentary on the NT*, Grand Rapids: Eerdmans Publishing Company, 1995.

Fitzmyer, J.A. *Romans: Anchor Bible Commentary*, New York: Bantam Doubleday Dell Publishing Group, 1982.

Foulkes, F. *Ephesians: Tyndale New Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1989.

Garland, D.E. *2Corinthians: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1999.

Garrett, D.A. *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, Nashville: Broadman & Holman Publishers, 1991.

Green, Gene L. *1 & 2 Thessalonians: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2002.

Grudem, W. *1Peter: Tyndale New Testament Commentaries.* Grand Rapids/ Leicester: Eerdmans Publishing Company/Inter Varsity Press, 1988.

Hagner, Donald A. *Hebrews: New International Biblical Commentary*. Peabody: Hendrikson Publishers, 1990.

Hendriksen, W. *Galatians & Ephesians: New Testament Commentary*. Edinburgh: The Banner of Truth Trust, 1968.

Hodge, C. *A Commentary on the Epistle to the Ephesians*. Edinburgh: The Banner of Truth Trust, 1964.

Johnson, Alan F. *Revelation: The Expositor's Bible Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Johnson, T.F. *1,2, and 3 John: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1993.

Kidner, D. *The Message of Ecclesiastes: The Bible Speaks Today.* Leicester: Inter Varsity Press, 1976.

Kruse, C.G. *2Corinthians: Tyndaly New Testament Commentaries.* Leicester: Inter Varsity Press, 1987.

_________. *The Letters of John: The pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2000.

_________. *John: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 2003

Larkin, W.J. *Acts: The IVP New Testament Commentary.* Downers Grove/ Leicester: Inter Varsity Press, 1995.

Lea T.D. & Criffin, H.P. *1,2 Timothy, Titus: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1992.

Martin, D.M. *1,2 Thessalonians: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1995.

Martin, R.P. *2Corinthians: Word Biblical Commentary Volume 40*. Waco: Word Books Publisher, 1986.

Michaels, J.R. *1Peter: Word Biblical Commentary Volume 49.* Waco: Word Books Publishers, 1988

Moo, Douglas J. *Romans: The New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1996.

Morris, L. *Hebrews: The Expositors Bible Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

_______. *1 and 2 Thessalonians: Tyndale New Testament Commentaries.* Leicester: Inter Varsity Press, 1984.

________. *Romans: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

________. *Matthew: The Pillar New Testament Commentary.* Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.

________. *John: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1995.

Mounce, R.H. *Romans: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1995.

Murphy, R.E. *Proverbs: Word Biblical Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1998.

O'Brien, P.T. *Ephesians: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1999.

Patterson, Paige: *A Pilgrim Priesthood: An Exposition of the Epistle of First Peter*. Eugene: Wipf & Stock Publishers, 1982.

Polhill, J. B. *Acts: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.

Richardson, K.A. *James: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1997.

Stott, J.R.W. *The Letters of John: Tyndale New Testament Commentary*, Leicester: Inter Varsity Press, 1988.

_________. *The Message of Ephesians, The Bible Speaks Today.* Leicester: Inter Varsity Press, 1979.

Thomas, J.C. *The Pentecostal Commentary on 1 John*. London/New York: T and T Clark International, 2004.

Thomas, Robert L. *Revelation: An Exegetical Commentary. 2 Volumes.* Chicago: Moody Press, 1992/1995

Vaughan, C. *Ephesians: A Study Guide Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1977.

Vaughan, C. *1,2,3 John: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1970.

Waltke, B.K. *Proverbs 1-15: The New International Commentary on the OT*. Gradn Rapids: Eerdmans Publishing Company, 2004.

Walvoord, John F. *Daniel: The Key to Prophetic Revelation.* Chicago: Moody Press, 1989.

______________. *The Revelation of Jesus Christ*. Chicago: Moody Press, 1989.

Williams, D.J. *Acts: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers,1990.

## ஏனைய நூல்களும் ஆய்வுக் கட்டுரைகம்
## OTHER RELATED ARTICLES AND BOOKS

Baird, W. "Visions, Revelations, and Ministry: Reflections on 2 Cor. 12:1-5 and Gal. 1:11- 17" in *Journal of Biblical Literature*. 104 (1985), pp. 651-652, 654.

Bandstra, A.J. "Making Proclamation to the Spirits in Prision: Another Look at 1Peter 3:19"in *Canadian Journal of Theology*. 38 (2003), pp. 120-121.

Bechtler, S.R. *Following in His Steps: Suffering, Community and Christology in 1 Peter*. Atlanta: Scholars Press, 1998.

Blanchard, C.A. *Light on the Last Days*, Chicago: Bible Institute Colportage Ass'n, 1913

Brantl, G. ed., *Catholicism*, New York: Braziller, 1962.

Cooper, J.W. *Body, Soul, and Life Everlasting: Biblical Anthropology and the Monism-Dualism Debate*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1989.

Cranfield, C.E.B. "The Interpretation of 1Peter iii.19 and iv.6" in *Expository Times*. 69 (1957-1958), pp. 369-370.

Culver, R.D. "A Neglected Millennial Passage from St.Paul" in *Bibliotheca Sacra*. 113 (1956), pp. 141-152.

Dalton, W.J. "The Interpretation of 1Peter 3:19 and 4:6: Light from 2Peter" in Biblica. 60 (1979), pp. 547-555.

Enns, Paul. *The Moody Handbook of Theology*. Chicago: Moody Press, 1989.

Feinberg, J.S. "1Peter 3;18-20: Ancient Mythology and the Intermediate State" in *Westminster Theological Journal*. 48 (1986), pp. 303-336.

Goulder, M. "Vision and Knowledge" in *Journal for the Study of the New Testament*. 56 (1994), pp. 53-71.

Gibson, E.C.S. *The Thirty-Nine Articles of the Church of England*, London: Methuen, 1906.

Goodspeed, E.J. "Some Greek Notes" in *Journal of Biblical Literature*. 73 (1954), pp. 91-92.

Grudem, W. "He Did Not Descend Into Hell: A Plea for Following Scripture Instead of the

Apostles' Creed" in *The Journal of the Evangelical Theological Society*, 34 (1991), pp. 103-113.

Hanson, A.T. "Salvation Proclaimed: 1Peter 3:18-22" *Expository Times*. 93 (1982), pp. 100-115.

Hiebert, D.E. "The Suffering and Triumphant Christ: An Exposition of 1Peter 3:18-22" *Bibliotheca Sacra*. 139 (1982), pp. 146-158;

Johnson, A.R. *The Vitality of the Individual in the Thought of Ancient Israel*. Cardiff: University of Wales Press, 1964.

Kelly, W. *Christ Preaching to the Spirits in Prision*, London: Morrish, 1872.

Lincoln, A.T. "The Use of the Old Testament in Ephesians" *Journal for the Study of the New Testament*. 14 (1982), pp. 18-19.

Loofs, F. "Descent to Hades (Christ's)" in *Encyclopedia of Religion and Ethics Volume 4*, ed. J.Hastings. New York: Scribner, 1955.

Robinson, E. *Greek and English Lexicon of the New Testament*. New York: Harper & Brothers, 1850.

Skilton, J.H. "A Glance at Some Old Problems in First Peter" in *Westminster Theological Journal*. 58 (1996), pp. 1-9

Smith, M. "Ascent to the Heavens and the beginning of Christianity" in *Eranos*. 50 (1981), pp. 403-429.

Wallis, W.B."The Problem of an Intermediate Kingdom in 1Corinthians 15:20-28" in *Journal of the Evangelical Theological Society*. 18 (1975), pp. 229-242.

# வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் எழுதிய ஏனைய நூல்கள்

1. இன்பத்தின் இரகசியங்கள்
   யோவான் 15ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை.
2. இயேசுகிறிஸ்து யார்?
   ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
3. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
   வேதாகமம் தேவவார்த்தை என்பதற்கான சான்றுகள்.
4. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
   கிறிஸ்தவ குடும்பம் பற்றிய வேதாகமப் போதனை
5. மரணத்தின் மறுபக்கம்
   மரணத்தின் பின்பான வாழ்வு பற்றிய போதனை
6. இயேசுகிறிஸ்து இறைவனா?
   இயேசுவின் தேவத்துவத்திற்கான ஆதாரங்கள்
7. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
   கிறிஸ்தவ வாழ்வுக்கான நடைமுறை சத்தியங்கள்
8. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
   இயேசு இவ்வுலகில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள்
9. திருமறையும் திருமணமும்
   திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய நூல்
10. புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
    வேதாகமம் உருவான சரித்திர விஷயங்கள்
11. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
    யெகோவாவின் சாட்சிகளுக்கு பதிலளிக்கும் முறை
12. கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
    இயேசுவின் கடினமான கூற்றுகளுக்கான விளக்கம்
13. ஒரு விதவையின் விவாகம்
    ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை
14. ஓடிப்போனவன்
    யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை
15. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
    ராகாபின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
16. மகளையே பலியிட்ட மனிதன்
    யெப்தாவின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
17. விபரீதமான வீரன்
    சிம்சோனின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
18. ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
    சமாரியப் பெண்ணின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
19. தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
    மரியாளின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
20. சங்கீதங்களின் சத்தியங்கள்
    சங்கீதப் புத்தகத்திற்கு ஒரு அறிமுகம்.
21. கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்
    23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
22. மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
    19ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
23. மனக்கலக்கத்திற்கு மருந்து
    42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை
24. துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்
    73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
25. ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தெய்வம்
    121ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
26. வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்
    71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
27. புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்
    137ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
28. ஆனந்தமான வாழ்வுக்கு அவசியமான வழிமுறை
    1ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
29. சில சம்பவங்களில் சில சத்தியங்கள்
30. டாவின்சியின் ஓவியத்தைப்பற்றிய நாவல் உண்மைச் சரிதையா?

# மரணத்தின் மறுபக்கம்

மரணத்தின் பின்பான வாழ்வைப்பற்றிய
வேதாகமப் போதனை

## THE OTHER SIDE OF DEATH

A Biblical Analysis of Life After Death

M.S. VASANTHAKUMAR

மரணத்தின் பின் நமக்கு நடப்பது என்ன?
மரணத்தின் பின் நாம் எங்கு செல்கிறோம்?
மரணத்தின் பின் நாம் எப்படி இருப்போம்?
என்னும் கேள்விகளுக்கு வேதாகமம் தரும்
வெளிப்படுத்தல்களை இந்நூல் அறியத்தருகிறது.

TAMIL BIBLE RESEARCH CENTRE
8, BROADLANDS AVENUE, ENFIELD,
LONDON EN3 5AH, UNITED KINGDOM
Mobile: 0044 7814252077, Email: msvtbrc@googlemail.com
Web: www.tamilbibleresearchcentre.com

பதினாறு வருடங்களாக இலங்கை வேதாகமக் கல்லூரியில்
விரிவுரையாளராகவும், சத்திய வசனம் சஞ்சிகை ஆசிரியராகவும்
பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் எம். எஸ். வசந்தகுமார்,
40ற்கும் அதிகமான புத்தகங்களை எழுதியுள்ளதோடு 2005ஆம்
ஆண்டிலிருந்து இங்கிலாந்தில் இறைபணியாற்றுவதோடு வேதாகமப்
புத்தகங்களுக்கு விளக்கவுரைகள் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

TAMIL BIBLE RESEARCH CENTRE
2\161, AYYANAR STREET,
GUNDUR BURMA COLONY, AIRPORT VIA,
TIRUCHIRAPPALLI - 620 007, TAMILNADU, INDIA.
Phone: 99421 93486, Email: vrkbibleteach@yahoo.com